Registered at the G.P.O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

**சிலோன் எலக்ரிக்கல்ஸ்**

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விளம்பி, பங்குனி 8-ஆம் நாள். (21-3-59) இதழ் 7.

# 'தலை தூக்கினால் தடியால் அடிப்பேன்'

## பிரதமர் பெற்றுள்ள புதிய பலம்

### இனி என்ன? நேரடி நடவடிக்கையா?

— நமது அரசியல் நிருபர் —

**இனி என்ன? சென்ற பத்து மாத காலமாக நாட்டில் இருந்து வந்த அவசர நெருக்கடி உத்தரவு நீக்கப்பட்டுவிட்டது. இது ஒருவிதத்தில் நல்லதுதான். வெளி உலகிலே இலங்கையைப் பற்றிய அவப்பெயர் ஓரளவு நீங்கும்.**

**ஆனால் இலங்கையிலே உண்மையான அமைதி நிலவுகின்றதா? தமிழ்பேசும் மக்களின் பீதியும் கவலையும் நீங்கியதா? அவர்களை இன்று வருத்தி வரும் இன்னல்கள் மாய்ந்தனவா? முதலமைச்சர் பண்டாரநாயக்காவும் இக்கேள்விகளைத் தம் உள்ளத்திடம் கேட்டால், " இல்லை, இல்லை " என்ற பதில்தான் கிடைக்கும.**

இதுவரை கவர்னர் ஜெனரலிடம் இருந்த விசேஷ அதிகாரம் இபபோது பிரதமரின் கைகளுக்குப் பாதுகாப்புத் திருத்தச் சட்டமூலம் மாறியுள்ளது. இவ்விஷயமாக இலங்கை "ஒப்சேர்வர்" பத்திரிகையில் புகழ்பெற்ற கேலிச் சித்திரக்காரரான 'கொலற்' ஒரு சித்திரம் தீட்டியுள்ளார். பண்டாரநாயக்கா ஓர் ஆசனத்தில் அமர்ந்து புகை பிடித்துக் கொண்டு ஒரு காலை நீட்டுகிறார். அக்காலிலிருந்த "அவசர அதிகாரம்" என்ற பழைய பூட்சைக் கழற்றிவிட்டு, ஆணி முட்களுடன் கூடிய "பாதுகாப்புச் சட்டம்" என்ற பெரிய புதிய பூட்சைக் கவர்னல் ஜெனரல் சேர் ஒலிவர், மண்டிபோட்டு உட்கார்ந்து மாட்டுகிறார். 'இதுதான்சரி சார்! இந்தப் புதிய ஸ்போர்ட்ஸ் மாடல் பூட்ஸைப் பாவித்துப் பாருங்கள். இது அதிக சுகமாக இருப்பதுடன் யாரையும் உதைக்கப் பழைய பூட்சைவிட நிச்சயம் உறுதியாக இருக்கும்" என்கிறார். புதிய சட்டத்தால் பிரதமரின் அதிகாரமும் பலமும் எவ்வளவு ஓங்கியுள்ளனவென்பதை இதன் மூலம் காட்டுகின்றார் சைத்திரீகர்கொலற்.

"டைம்ஸ்" பத்திரிகையில் வெளியான மற்றொரு கேலிச் சித்திரத்தில், 'அவசர நெருக்கடி' என்ற வெடிகுண்டுபோன்ற அமைப்புள்ள மூடியை, "அது பயங்கரமானது" என்றுபிரதமர் சொல்லி அதைத் தூக்குகின்றார். ஆனால் அந்த மூடிக்குள்ளே 'பாதுகாப்பு மசோதா' என்ற பயங்கரமான வாள் ஒன்று செங்குத்தாக இருந்து பயமுறுத்துகிறது. இந்த இரு கேலிச்சித்திரங்களும் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டு, அவசர நெருக்கடி நீக்கப்பட்டபின் பிரதமரின் புதிய ஸ்வரூபத்தைக் காட்டுகின்றன.

[15-ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தில் வானொலி ஒலிப்பதிவு நிலையம்?

இலங்கை வானொலி கல்விப் பகுதியினர் சென்ற ஆறுவார காலமாக நடத்திவந்த வெண்பா, வாசிப்புப் போட்டியில், தீவின் பல பகுதிகளிலிருந்தும் ஏறத்தாழ 30 பள்ளிக் கூடங்கள் கலந்து கொண்டன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலைநாடு முதலிய இடங்களிலிருந்தும் மாணவ மாணவிகள் உற்சாகத்துடன் இதிலே பங்குபற்றினார்கள். அம்மாணவ, மாணவிகளுக்குத் துணையாக ஆசிரியர்களும் பெண்களும் ரயில் பிரயாணம் செய்து கொழும்புக்கு வர வேண்டியிருந்தது.

இவர்கள் மட்டுமன்றி, அங்கிருந்து பாடகர்கள் பலர் கொழும்புக்கு வந்து பாடுவதற்குப் பிரயாணச் சிரமங்கள் அதிகமுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி முதலிய.

[9-ம் பக்கம் பார்க்க]

## கதிர்காம மடாலயத்துக்கு உடன் ஆபத்தில்லை

### ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் பணிக்குப் பிரதமர் பாராட்டு

— நமது கொழும்பு நிருபர் —

**க**திர்காமத்திலுள்ள புனித மடங்களுக்கு ஆபத்தா? அவற்றை வேறிடத்துக்கு அகற்ற வேண்டுமென்று அரசாங்கத்திடமிருந்து நோட்டீஸ் ஏதாவது கிடைத்திருக்கிறதா? என்று அங்குள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் காரியதரிசி திரு. நவரத்தினத்தை விசாரித்தேன்.

அவர் சொன்னார்: "அந்த மடத்தைக் கட்டிக்கொண்டவர் கதிர்காமத்திலுள்ள அந்த முருகன்தான். ஒன்பதே மாதங்களில் 4 லட்ச ரூபாய் செலவில் அதைக் கட்டிமுடித்து, தன் அடியார்களின் சேவைக்குக் கருணையுடன் பாவித்துவருகின்றார். அந்த முருகன் சித்தம் அதை அகற்றவேண்டுமென்றிருந்தால் அகற்றிக்கொள்ளட்டுமே".

**கே:** அது சரி. ஆனால் அங்குள்ள மடங்களை வேறு இடத்துக்கு அகற்றுவதற்கான உத்தரவு ஏதும் அரசாங்கத்திடமிருந்து கிடைத்துள்ளதா? பத்திரிகைகளிலே இவ்விஷயமாக முரண்பட்ட செய்திகள் வருகின்றனவே உண்மை என்ன?

**ப:** உடன் அப்படி ஆபத்து எதுவும் இல்லை. மடங்களை அகற்றவேண்டுமென்பதுபற்றி நகர நிர்மாண சபை இனியும் எவ்வித முடிவும் செய்யவில்லை. தீர்மானித்தால், அதற்குமுன் இரண்டுமாத முன் அறிவித்தல் கொடுத்து, அதுபற்றிய ஆட்சேபங்கள் இருந்தால் தெரிவிக்க வசதியளித்து, அதன் பின்பே ஏதும் முடிவுசெய்வார். மேலும் ஸ்தலத்திலுள்ள நிர்மாண சபையில், திரு. ஸ்பென்ஸர் இராஜரத்தினமும் அங்கம் வகிக்கிறார். அச்சபை, மடங்களை அப்படியே வைத்திருக்க வேண்டும் என்றும், வேறுவித சீர்திருத்தங்கள் செய்யலாமென்றும். மடாலயங்கள் புனித நகரின் ஒரு முக்கிய அம்சமென்றும், யோசனை தெரிவித்திருக்கிறது. மந்திரி குருப்பும் இவ்விஷயமாக எவ்வித முடிவும் செய்யவில்லையென்றும், மடாலயங்களை அகற்றும் யோசனைகளை அவர் ஆதரிக்கவில்லை என்றுமே தெரிகிறது.

கதிர்காமத்திலுள்ள மடங்கள் பெரும்பாலும் தமிழரின் நிர்வாகத்தில் இருக்கின்றன. இது சிலருக்குப் பிடிக்கவில்லை. சிறப்பாக ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் நடாத்தும் புதிய மடாலயம்தான் அவர்களுக்கு மிகவும் உறுத்துவதாகவும் அதை எப்படியாவது கைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்று முயலுவதுதாகவும் தெரிகிறது.

ஆனால் அந்த மடாலயம் பல வசதகளுடனும் கூடியதாக இருப்பதுடன், சிறப்பாக முருகனின் சிங்கள அடியார்களுக்கு அதிக பயனுள்ளதாக இருப்பதால், சிங்களப் பொதுமக்களில் பலரும் அந்த மடத்தை அகற்றுவதை ஆதரிக்கவில்லை.

சமீபத்தில் பிரதம மந்திரி பண்டாரநாயக்கா கதிர்காமம் சென்று தரிசித்துவிட்டு, ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்துக்கு வந்திருந்து ஒரு மணி நேரத்துக்குமேல் தங்கி, அம்மடாலயம் யாத்திரிகர்களுக்குச் செய்யும் புனிதமான சேவைபற்றி அங்குள்ள சுவாமி சர்வாதீதானந்தரிடம் பாராட்டினார். அச்சமயத்தில் நூற்றுக்கணக்கான சிங்கள யாத்திரிகர்கள் தங்கள் குடும்பங்களுடன் அங்கு வசதியாகத் தங்கியிருந்ததையும்அவர் நேரில்கண்டு மகிழ்ச்சி தெரிவித்ததாயும் தெரிகிறது.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்

BRIDGESTONE TYRES



DISTRIBUTORS
TUCKERS AUTODROME

பிரிட்ஜ்டோன் டையர்கள்

ஏக விநியோகஸ்தர்கள் :

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன் : 496 தந்தி: "ஓட்டோஸ்"

## ஆட்சியாளரின் செயலில் ஆசிரியர்கள் அவநம்பிக்கை

யாழ்ப்பாணம்

ஆட்சியாளரின் செயலில் அவநம்பிக்கை கொண்டிருப்பதை எடுத்துக் காட்டித் தம் அடிப்படை உரிமைகளை வற்புறுத்தும் முறையில் ஆசிரியர்களின் பகிரங்கக் கூட்டமொன்று வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்றது. வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆசிரியர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் இன்னல்கள்பற்றியெல்லாம் ஆராயப்பட்டது. கூட்டத்துக்கு திரு எஸ். வி. பாலசிங்கம் தலைமை வகித்தார்.

அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஜயவிக்கிரமா உட்படப் பல பிரமுகர்கள் அங்கு பேசினர்.

அண்மையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பிரச்சனைபற்றித் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. சிங்களம் தெரியாது என்ற ஒரு காரணத்துக்குக்காக எந்த ஆசிரியரையும் பதவியிலிருந்து நீக்கக் கூடாது என வற்புறுத்தும் தன்மையிலும் ஒரு தீர்மானம் அங்கு நிறைவேறியது.

கூட்டத்துக்கு முன்னர் சங்கக் காரியாலயத்திலிருந்து ஊர்வலமொன்று புறப்பட்டுச் சென்றது. பல நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் அதிற் கலந்து கொண்டனர்.

### ஒன்றுபட்ட எதிர்ப்பு

தலைவர் திரு. பாலசிங்கம் பேசியதாவது: அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தினரின் ஒற்றுமையே இன்று வரை எமக்கு வெற்றிகளை ஈட்டித் தந்தது. சமீபத்தில் கல்வி அமைச்சர் தகநாயக்கா வெளியிட்ட சுற்றறிக்கை. முகாமைக்காரர்களுக்கு அளவு கடந்த அதிகார்த்தை அளித்தது. இந்த அறிக்கையை அமைச்சர் திருப்பிப் பெற்றுக் கொண்டதற்கு ஆசிரியர்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பே காரணமாகும்.

யூனியன் கல்லூரி, சாகிராக கல்லூரி, ஆசிரியர்களை வேறு கல்லூரிகளுககு மாற்றியதைக் கண்டித்துத் திரு ஜே. டி. ஆசீர்வாதம் பேசினார். அவர் கூறியவற்றை ஆதரித்துத் திரு ஏ. எஸ். கனகரத்தினம் பேசினார்.

* * *

ஆசிரியர்களின் ஏகோபித்த எதிர்ப்பை முன்னிட்டு குறித்த சுற்றறிக்கையைக் கல்வி அமைச்சுத் திருப்பிப் பெற்றிருப்பது உண்மையேயாயினும், ஆசிரியர்களின் உரிமைகள் பாதிக்கப்படவில்லையென எவரும் எண்ணிவிட முடியாதென்ற அபிப்பிராயம் ஆசிரியர்களிடையே நிலவி வருகின்றதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்


### தேவை

நகரசபை எல்லைக்குள் ஒரு வீடு தேவை. த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.

சிறந்த முறையில் "ரைப் பிறைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரூ, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ் அன்ரூவை ஆலோசியுங்கள்—4-ம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்துப் படிப்பதற்கு, ஜோஸ் அன்ரூ, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

திறமையுள்ள பைன்டர்கள் (Binders) தேவை. கலாநிலைய பதிப்பகம், P. O. Box 49, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

கொழும்புத்துறையில் மடத்திற்கருகில் வீடு வாடகைக்கு விடப்படும். த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட வேண்டுமானல் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது — வீனஸ் சோப் — கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் வீனஸ் சோப் — கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

கூடிய நுரை தரக்கூடியது — வீனஸ் சோப் — கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள நகைகளுக்கு, து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

குறித்த தவணையில் விரும்பிய டிசைனில் ஆடர் நகைகள் செய்வதற்கு, து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

புதிய டிசையின் நெக்கிலஸ் முதலியன வேண்டுமானல், து. கிருஷ்ணசாமிஅன் பிறதர், 55, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.


# மட்டக்களப்பிலே புதிய கைத்தொழில் முயற்சி

— நமது நிருபர் —

**நா**ட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதாலும், கற்ற வாலிபர்களுக்கு இலகுவில் அரசாங்க உத்தியோகங்கள் கிடையாதிருப்பதனலும், கமத்தொழிலை நோக்கி இளைஞர்கள் மனந்திரும்பியிருக்கிறார்கள். இளைஞர்விவசாயச் சங்கங்கள் பல மட்டக்களப்பு எங்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்துறையில் மட்டக்களப்புப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை அவர்களும், மற்றைய தமிழரசுப் பிரமுகர்களும் உழைத்துவருதல் குறிப்பிடத்தக்கது. அரசாங்கக் கொள்கைகள் சிலவற்றால் தமிழ்மக்கள் பாதிக்கப்படாதிருத்தற்காக இதுபோன்ற பொருள்வளத் திட்டங்கள் சிலவற்றை மட்டக்களப்பில் நடைமுறைக்குக் கொண்டுவருதல் திரு. இராசதுரையின் கருத்தாகும். இத்துறையில் இயந்திர விவசாயம், பண்ணைமுறைகள், குடிசைக் கைத்தொழில்களை வளர்த்தல் போன்ற திட்டங்களை எங்கும் பரப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### இந்துமகளிர் மன்றமும், தையற்கலையும்

மட்டக்களப்புப் பெண்களின் பொழுது பயனுள்ளதாகக் கழியவும், அன்னருடைய முயற்சி பொருளாதாரத்தை உயர்த்தவும் பயனுடையதாகட்டும் என்று மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றத்தார், பரீட்சார்த்தமாக இரு தையல் வகுப்புகளை கோட்டைமுனையிலும், புளியந்தீவிலுமாக நடத்தி வருகின்றார்கள்: கடந்த ஆறு மாதங்களாகத் தினம் நடைபெற்று வரும் இவ்வகுப்புகளில் ஐம்பது பேர்வரை சித்திரத் தையல் வேலைகளில் நல்ல பயிற்சி பெற்றுவருகிறார்கள். இத் திட்டம் மிக்க பயனும், வெற்றியும் அளித்து வருகின்றதென்றும், இதிற் தேர்ச்சி பெறுவோரைக் கொண்டு மட்டக்களப்பின் கிராமந்தோறும் தையற்பயிற்சி வகுப்புக்களைப் பின்னர் நடத்துவது என்றும் குறித்த மன்றம் தீர்மானித்து இருப்பதாகவும் தெரிகின்றது.

### விபுலானந்தர் கழகம்

மட்டக்களப்பிலே உயர்தரக் கல்வி பயில விரும்புவார்க்கு வசதிகளைச் செய்து தருதற்காக இக்கழகத்தார் மே மாதம் தொடக்கம் லண்டன் பல்கலைக் கழகப் பரீட்சைகளுக்கான, சில வகுப்புகளையும், இலங்கைப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகளையும் தமிழ்ப் பண்டித, பாலபண்டித வகுப்புகளையும் நடத்துவதற்கு ஒழுங்கு செய்திருக்கின்றனர். ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலை மண்டபத்தில் மாலை 5—8 மணிக்கிடையில் நடைபெறவிருக்கும் இவ்வகுப்புகளைத் திறம்பட நடத்துதற்குத் துணைபுரிதற்கு இங்குள்ள ஐம்பது பட்டதாரி ஆசிரியர்களும், பண்டிதர்களும் முன்வந்திருப்பதாகக் கழகத்துச் செயலாளர் கூறுகிறார். இது தங்களுக்கோர் பெருங்கொடை என்று உத்தியோகம் பார்க்கும் மாணவர்கள் கருதுகிறார்கள். இவ் வகுப்புகள் நல்கு நடைபெற்று நாட்டின் உயர்தரக் கல்வி நிலையும், அதனல் மனப்பண்பும், பொருளாதாரமும் உயருதல் வேண்டும் என்று மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்கத்துத் தலைவரான ஸ்ரீ நடராஜானந்த அடிகள், கழக வகுப்புக்களுக்கான இடவசதி முதலியவற்றைச் செய்து தருதற்கு முன்வந்திருத்தலும் குறிப்பிடத்தக்கது, என்கிறார் கழகச் செயலாளர்.

ஆசிரியருக்குக் கடிதம்

## தடை எதற்கு?

இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் அப்பளம், பீடி முதலியவற்றை இலங்கை அரசாங்கம் தடைசெய்துள்ளது. இதனல் இலங்கையிலுள்ள பொது மக்கள் படும் தொல்லையோ சொல்ல முடியாது. இலங்கையரால் செய்யப்படும் அப்பளத்தை எண்ணெயிலே போட்டால் பொங்குவதேகிடையாது. ருசியோ இல்லை. அப்பளத்தின் செய்பாகந்தானும் நன்ருக இல்லை. தடையைக் கொண்டு வந்த தேமிஸ் அவர்களே இதனை உணர்ந்திருப்பார். பீடியைப் பொறுத்தவரை பீடி பிடித்துப் பழகியவர்கள் பீடி இல்லாமல் இருப்பது கஷ்டம். முன்பு ஒரு பீடி 1 சத வீதம் வாங்கி உபயோகித்தவர்கள் இப்போது ஒரு பீடிக்கு 2 சதம் கொடுத்து வாங்கவேண்டியிருக்கின்றது. அத்துடன் இலங்கையில் பீடி தயார் செய்யத் தெரிந்தவர்கள்மிகச்சிலரே. ஆனதால் இந்த இரண்டு பொருள்களின் தடையை இலங்கை அரசாங்கம் கவனித்து உடனடியாகத் தடையை நீக்க வேண்டும்.

க. பரமலிங்கம்
யாழ்ப்பாணம்.

## அரசாங்கம் கவனிக்குமா ?

பிரதிநிதிகள் சபையிலும் செனேட் சபையிலும் நடைபெறும் விவாதங்கள் புத்தகங்களாக வெளிவருகின்றன. இவை பொது மக்களுக்கு மிகக் குறைந்த விலையிற் கிடைக்க அரசினர் முயற்சி செய்ய வேண்டும். மக்கள் அரசாங்கம் இதனைக் கவனிக்குமா?

கொழும்பு வ. க

# நவபாரதம் அளித்த மாணிக்கங்கள்

## கல்லடி உப்போடையிற் பரமஹம்சர் விழா

"நவபாரதம் நமக்களித்த இரு பெரும் மாணிக்கங்களை நினைவுகூர இவ்விழாவை நாம் கொண்டாடுகின்றோம். ஒருவர் இறைவனை மனிதனிடம் காண் என்று அறிவுறுத்திய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், மற்றவர் இந்து சமய மகிமையை உலகறியச் சங்கநாதம் செய்த வேதாந்த கேசரி விவேகானந்த சுவாமிகள். இவ்விருவரும் தங்கள் தூய வாழ்க்கையின் பயனைப் பூதவுடல் நீத்தும் புகழுடம்புடன் வாழ்கின்றார்கள். இவர்களை நினைவுகூர இப்போது எத்தனையோ ராமகிருஷ்ண மடங்கள் நம்மத்தியில் நற்பணி புரிகின்றன. இந்த ஸ்தாபனங்கள் வளர்ந்தோங்க இயன்ற அளவு உதவுதல் நமது கடமை.

இவ்வாறு கல்லடி உப்போடை இ. கி. ச. பெண்கள் பாடசாலையில் நடைபெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த நினைவு தின விழாவுக்குத் தலைமை தாங்கிய ஆசிரியை திருமதி க. சபாரத்தினம் குறிப்பிட்டார். பாடசாலைத் தலைவி திருமதி வி. சாரதாதேவி பேசும்போது ஸ்ரீ ராமகிருஷ்ண, விவேகானந்த சுவாமிகளின் சாதனை, போதனைகளை எடுத்துக்காட்டி மாணவர்கள் பிற சமுகம், மதம் என்பவற்றின் மீது போட்டியும், பொருமையுமின்றி சமரச மனப்பான்மையுடன் மாணவர்கள் வாழவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். செல்விகள் து. சாந்தமணி, இ. சிவமணி, பொ. தவமணி என்போர் முறையே "விவேகானந்தரும் இந்து மதமும்", "பாரதமும் பரமஹம்சரும்", "வேதாந்தகேசரி விவேகானந்தர்" என்னும் பொருள்கள்பற்றிப் பேசினர்.





**பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?**

**ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்**

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்புயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சீரிசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**தைகருகாபாமற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீனிடுயா நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

**மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்**

K. S. செல்லையா, ரேயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்டோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக் கொள்க.

தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.
**கொழும்பு 8.**

(சென்றவாரத் தொடர்ச்சி)

விஞ்ஞானத்தைப் பற்றி நான் இங்குப் பேசப் போவதில்லை. அது குறித்து விஞ்ஞானிகளாகிய நீங்கள் கூறுவதை நான் கேட்பேன்; படிப்பேன். நம் நாட்டிலே உடனடியாக விஞ்ஞானமும், தொழில் நுட்ப அறிவியல்களும் எவ்விதம்பயன்படலாம் என்பது குறித்து நான் என்ன கருதுகின்றேனோ, அதைப்பற்றியே நான் இங்குக் கூற விரும்புகிறேன்.

சமீப காலம்வரையிலே இயற்கைச் சக்திகளைப்பற்றிய ஏறத்தாழச் சில திட்டவட்டமான கருத்துக்கள் இருந்தன. ஆனால் அணுவைப் பிளந்து அதன் சக்தியைப் பயன்படுத்த ஆரம்பித்ததும், இயற்கைச் சக்திகளைப் பற்றிய அந்தப் பழைய எண்ணங்கள் எல்லாம் அடியோடு மாறி மனித சரித்திரத்தில் ஒரு புதிய கட்டத்தை நாம் அடைந்திருக்கின்றோம். மின்சாரம், வானொலி, இவற்றைக் கண்டுபிடிக்குமுன்பாக, உலகமானது கனமான, அழிக்க முடியாத சில பொருள்களால் ஆக்கப்பட்டுள்ளதாக இயற்கையின் அமைப்பைப்பற்றி நம்மில் பலரும் கருதிவந்தோம். பின்னர் மூலகங்கள் மாற்றப்படலாமென்றும், அணுக்கள்கூடபிளக்கப்படலாமென்றும் அறிந்து, அணுக்குண்டுவரை வந்துள்ளோம். அணுச்சக்திவிஞ்ஞானம் இதுவரை இயற்கை விதிகளைப் பற்றி நாம் கருதிவந்த கருத்துக்களையெல்லாம் மாற்றி விட்டது.

### ஜெட் விமானயுகம்

இது "ஜெட் விமான"யுகம். இந்த யுகம் உலகில் உள்ள எல்லா நாடுகளையும் ஒன்றோடொன்று நெருங்க வைத்து, ஒன்றின் வாசலில் மற்றொன்றை நிறுத்துவதாகவுள்ளது. நாம் விரும்பினாலும் விரும்பாவிடினும், நாமனைவரும் ஒருவர்க்கொருவர் தோளோடு தோள் உரசிக் கொண்டிருக்கிறோம். நமக்குப் புரியாத பல அதிசயங்களைப்பற்றி நாம் அலட்சியமாக இருந்துவிடக்கூடிய ஆபத்தும் இருக்கின்றது. சோவியத் விஞ்ஞானிகள் முதல் ஸ்புட்னிக்கைச் (செயற்கைச்சந்திரனை) செய்து வானவெளி வீதியிலே சுற்ற வைத்ததைக் கண்டு திகைத்து அதிசயித்தோம். இப்போது செயற்கைக் கிரகங்கள், வானவெளிவீதி யாத்திரை செய்வது பற்றியும் அலட்சியமாக இருக்கிறோம். இதன் முக்கியத்தைப் பற்றியும் நாம் சிந்திக்க ஆரம்பிக்காமல், எல்லாம் சர்வ சாதாரணம் என்று எண்ணும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

உங்கள் மகாநாடு அடுத்த முறை கூடுவதற்குமுன்-அடுத்த வருஷம், அல்லது மறு வருஷத்துக்குள்ளாக, ஒரு நாய், அல்லது குரங்கு, அல்லது ஒரு மனிதனே வானவெளிக்குச் சென்று அங்குள்ள இயற்கையின் ரகசியங்களை அறிந்து உயிருடன் திரும்பிவிடவும் கூடும்! இப்பூமண்டலத்திலுள்ள ஒருவர் சந்திரனின் மறுபக்கத்தையும் பார்த்துவிட்டு வரலாம்!

இன்று உலகிலே, மணல் காடாகக் கிடக்கும் பாலைவனங்களையெல்லாம், பச்சைப் பசும் சோலைகளாக, வளமுள்ள பூமிகளாக மாற்றிவிட வழி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வெள்ளச்சேதங்கள் ஏற்படாமற் தடுக்கவும், உணவு உற்பத்தியை இதுவரை சொப்பனத்திலும் நினைந்திராதபடி அதிகரிக்கச்செய்வதும் சாத்தியமே. பலபேர் இருந்து செய்யக் கூடிய ஒரு வேலையை, ஒரேயொருவர் ஒரு விசையின் முன்னிருந்து செய்துவிடவும் கூடும். மக்களின் தேவைக்கேற்ப விஞ்ஞான அறிவைப் பயன்படுத்த முற்பட்டோமாயின் இவையெல்லாம் சாத்தியமே.

### என்ன தவறு?

இயற்கைச் சக்திகளும், செல்வங்களும் இவ்வளவு அமோகமாக இருக்கையில், மேற்கு உலகிலே விஞ்ஞானத் தொழில் நுட்பங்கள் மிக மேலாகவிருந்துங்கூட, அங்குப பெரிய கைத்தொழில்கள் படிப்படியாகக் குறைந்து, ஸ்தம்பித்துவிடக்கூடிய நிலைக்கும் வந்துள்ளதைப் பார்க்கின்றோம். காரணமென்ன? யுத்தத்துக்குப்பின் அமெரிக்காவில் பெரும்பொருள் மந்தம் ஏற்பட்டது. அதில் இருந்து மெதுவாகத் தலை தூக்கிவரும் அந்நாட்டில், பண்ணைகளிலே குவியும் விளைபொருள் தானியங்கள் மிதமிஞ்சியிருப்பதை என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒருபக்கம், உணவுப் பொருள்கள் மிதமிஞ்சிக் குவிந்து என்ன செய்வதென்று தெரியாத அளவுக்குமுள்ளன. மறுபுறம், சத்தான உணவின்றிப் பட்டினியாலும் பலர் அவதிப்படுகின்றார்கள். இதனால் லட்சக்கணக்கானவர்கள் மாளவும் செய்கிறார்கள். கைத்தொழில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூட இந்நிலை ஏற்படுவானேன்? இவ்வித உலகின் பொருளாதார அமைப்பில் என்னதான் தவறு? ஆனாலும் பிரிட்டனின் "எக்கனமிஸ்ட்" எனும் பத்திரிகை, பிரிட்டனிலே, வேலையற்றோர் எண்ணிக்கையின் வீதாச்சாரம், சர்வதேச நிலையுடன் ஒப்பிடுகையில் மிகமிகக் குறைவாக இருப்பதாகப் புகார்கூறிக் கவலைப் படுகிறது!

இதேசமயம் ஒரு திட்டமிட்ட பொருளாதாரப்படி காரியங்கள் செய்யும் நாடுகளிற் பொருளாதாரம் மேல்நோக்கி வளர்ந்து செல்லுகின்றது. ருஷியாவிலே கைத்தொழில் உற்பத்தி வருஷாவருஷம் 10 சத விகிதம் உயர்ந்துவருகிறது. 1965-ம் வருஷத்தில், உலகக் கைத்தொழிற் பொருள்களில் 100 க்கு 51 வீதம் திட்டமிட்டுள்ள பொருளாதாரமுள்ள பகுதிகளில் உற்பத்திசெய்யலாமென்று மதிப்பிடுகின்றார்கள். உலக ஜனத்தொகையில் 100 க்கு 30 பேர் விகிதம் இவ்வித பகுதிகளில் வசிக்கின்றனர்.

'யுத்தத்துக்குப்பின் மேற்கு நாடுகளிற் பொருள் மந்தம் ஏற்பட்டு, வேலையற்றோர் எண்ணிக்கை பெருகிவருகிறது. ஆனால் திட்டமிட்ட பொருளாதாரமுள்ள ருஷியா, சீனம் முதலியநாடுகளில் பொருளாதாரம் சிறந்தோங்கி வருகின்றது. காரணம் என்ன? யந்திரங்களுக்குப் பதிலாக, பெரிய பெரிய வேலைகளை மக்கள் சக்தியைக்கொண்டு சீனம் அதிசயிக்கத்தக்க சாதனைகளைச் செய்துள்ளது. விஞ்ஞானிகள் இந்த அடிப்படை விஷயங்களைக் கவனித்து ஒரு முடிவு செய்யவேண்டும்' என்கிறார் உணவு அமைச்சர்.

# யந்திரங்களுக்குப் பதில் மக்கள் சக்தி சீன அபிவிருத்தியின் இரகசியம்

[உணவு அமைச்சர் பிலிப் குணவர்த்தன அவர்கள்]

### மனித சக்தி

சமீபத்திற் சீனத்துக்குச் சென்றிருந்தேன். அங்குக் கைத்தொழில், விவசாயப் பெருக்கம் திகைப்பளிப்பதாக உள்ளது. சென்ற ஆண்டை, "மகத்தான லீப்" (உயரப்பாயும்) வருடம் என்று சரியாகப் பெருமையுடன் சீனர்கள் கூறுகின்றனர். இதுவரை எந்த அரசாங்கமும் சாதிக்காததைச் சீன அரசாங்கம் செய்துள்ளது. வேலையின்றி, சோம்பலுள்ள மனிதசக்தி எல்லாம், கைத்தொழில், போக்குவரத்து, விவசாயம் இவைகளில் ஈடுபடுத்தியுள்ளனர். விவசாயிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இருந்துவந்ததை, இப்போது, அங்கு மூலதனச் செல்வமாக மாற்றி வருகின்றார்கள்.

பெரிய மெஷின்களில்லாமல் நடைபெற முடியாதென்று மேற்கத்தி நிபுணர்கள் கருதும் பெரிய பெரிய வேலைகளை மனித சக்தியைப் பயன்படுத்திச் சீனத்திற் பூர்த்தி செய்துவருகின்றனர். அங்குப் பண வீக்கமென்பதில்லை. நாணய மாற்று நெருக்கடிகளும் கிடையா. இறக்குமதி செய்த பரதேசி மெஷின்களை நம்பியிராமல், பல்வேறு வேலைகளுக்கும் லட்சக் கணக்கான மனிதர்களைத் திரட்டி வேலையை வெற்றிகரமாக நடத்திக்கொண்டு போகிறார்கள்.

சென்ற ஆண்டிலே புதிதாக நீர்ப்பாசன வசதி, ஏறத்தாழ 200 கோடி ஏக்கர்களில் செய்யப்பட்டுள்ளன. கோடிக்கணக்கான கனகஜமுள்ள மண்மேடுகள் அகற்றப்பட்டுப் பூமி விவசாயத்துக்குச் செப்பனிடப்பட்டுள்ளது. பல்லாயிரம்சதுரமைல் விஸ்தீரணத்திலே மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதன் பயனாகக் காடுகள் வளம்பெற்று மஞ்சள் நதியில் வெள்ளம் பெருகாமல், சேதங்கள் குறைக்கப்பட்டுள்ளன. சீனத்திலே பல நூற்றாண்டுகளாக வெள்ளச்சேதங்களால், பயிர்கள் அடிக்கடி நாசமாகும். இப்போது அவை வெகுவாகப் பாதுகாக்கப்படுகின்றன. மஞ்சள் நதி, யாங்ஸி நதி, இவற்றில் மேலதிக நீரைச் சேமித்து, மின்சார சக்தியை உற்பத்தி செய்து, சீனக் கைத்தொழில் திட்டம் தடையின்றி நடைபெறவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சீதோஷ்ண நிலை சரியாக இல்லாவிடினும், அங்கு கோடை சாகுபடி அரைப்பங்குக்குமேல் அதிகரித்துள்ளது. உணவு உற்பத்தியும் சென்ற ஆண்டைவிட ஆறில் ஒரு பங்கு அதிகமாகும்.

### கூட்டுறவு கிராமக் கைத்தொழில்

புதிய புதிய கிராமக் கைத்தொழில்கள் பெருகி வருவது ஒரு புதிய அபிவிருத்தியாகும். அதிலிருந்து இலங்கையிலுள்ள நாம் அதிகம் தெரிந்து பயன் பெறலாம். சென்ற யுத்தகாலத்திற் சீனர்கள் தங்கள் கைகளாற் சிறிய துப்பாக்கி, வெடி மருந்து, ஆயுதங்கள் முதலியவற்றைத் திறமையாகச் செய்வதாகக் கண்டு, வெளி நாட்டு நிபுணர்களும்வியப்படைந்தனர். இக்கைத்திறமையையும், புத்திக் கூர்மையையும் கொண்டு கிராமிய கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் விவசாயக் கருவிகளையும், வேறு உபகரணங்களையும் செய்து குவிக்கின்றனர்.

நிலக்கரி உற்பத்தியோ 1957 இல் முந்திய வருடத்தை விட இரட்டிப்பு உயர்ந்துள்ளது. 1959 இல் 30கோடி டன்களுக்கு உயர்ந்துவிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உருக்கு உற்பத்தியும் 1957 இல் 53 லட்சம் டன்களாக இருந்தது. இவ்வாண்டில் இரண்டு மடங்குக்கு உயரலாம். மெஷின்கருவி உற்பத்தியும் ஆச்சரியகரமாக அதிகரிக்கின்றது.

இவ்விதமே சீனத்தின் வளர்ச்சி பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். சிறப்பாகக் கூட்டுறவுமூலம் புதிய கிராமியக் கைத்தொழில்கள் பெருகிவருவதைக் காணலாம். ஆனால் இன்று நான் பேசவேண்டியது சீன வளர்ச்சியைப்பற்றியன்று. இது உங்களுக்குப் பிடிக்கவும் செய்யாது. ஆனால் விஞ்ஞானிகளும், தொழில் நிபுணர்களுமாகிய நீங்கள்' நமது சில பொருளாதாரப் பிரச்சனைகளுக்கான பதில்களை ஆராய்ந்து கண்டுபிடிக்கவேண்டும். இதற்குச்சீனம் உதவியாக இருக்கலாம். மற்ற மேற்கத்திய நாடுகளில் பொருள் மந்தம் ஏற்பட்டு, இங்கெல்லாம் மூலப் பொருள்களின் விலை குறைந்து வருகையால், சீனத்திற் பெரிய அபிவிருத்திகள் ஏற்படுவது எதனால், எப்படி?

வெளிநாடுகளிலிருந்து பொருளாதார நிபுணர்கள் வரிசை வரிசையாக இங்கு வருகிறார்கள். வந்து அவர்கள் நமக்குக் கூறுவதென்ன? கர்ப்பத்தடையால் ஜனத் தொகையைக் குறையுங்கள் என்கிறார்கள். இலங்கைக் கிராமங்களிலே வேலை கிடையாதிருக்கும் மக்களுக்குநாம் கர்ப்பத்தடையைக் கற்பிக்க வேண்டுமாம்! அக்கிராம மக்கள், நம்மிடம் திரும்பி, "எங்களுக்குக்கர்ப்பத்தடையை உபதேசிக்கத்தானா, எங்கள் எண்ணிக்கையைக் குறைக்கத்தானா, உங்களை அதிகாரத்தில் வைத்தோம்?" என்று கேட்கலாம். உபதேசம் மூலம் ஜனன விகிதத்தைக் குறைக்க முடியாது. பொருளாதார வாழ்க்கையில் மாறுதல் ஏற்படுத்துவதால் அதை அவர்களே உணரச் செய்யவேண்டும்.

### என்ன தீர்மானிக்கவேண்டும்?

நாம் இப்போது தீர்மானிக்க வேண்டியதென்ன? பணத்தை மேல் மேலும் சேமித்து, மார்க்கட் பிடிப்பது, நாயை நாய் சாப்பிடுவது என்ற மனப்பான்மையில் நாட்டை அபிவிருத்தி செய்வதா? லாபம் தட்டுவதற்காகப் பயனற்றபொருள்களை உற்பத்தி செய்வதா? சம்பளங்களைக் குறைப்பதற்காக, வேலையற்றோர் எண்ணிக்கையைப் பெருக்குவதா? அல்லது திட்டம்போட்டு, சமதர்ம பொருளாதார முறையிலே, அத்திட்டம் சரிவர நடக்கும்படி பார்த்துக் கொள்வதற்குப் பலமான மத்திய ஆட்சியை அமைப்பதா? நீங்கள் முதல் யோசனையை ஆதரிப்பின், நாம் பிரிந்து, பெரிய எதிரிகளாவோம். என்னை மீண்டும் உங்கள் காங்கிரஸுக்கு வருமாறு அழைக்கமாட்டீர்கள்.

ஆனால் காரண காரியங்களை உணர்ந்து, தக்க பொருளாதார திட்டம் அமைக்கவும், அதற்கான முறையில், அரசாங்கத்தை உருவாக்கவும் வேண்டுமென்று நீங்கள் தீர்மானித்தால், அவ்விதமே உங்கள் கருத்தைப் பலமாக வெளியிடவேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)

# நாட்டில் ஏராளமான விவசாய வசதிகள் அவற்றைப் பயன்படுத்தத் தயக்கமேன்?

"இலங்கையின் தமிழ்ப்பிரதேசத்திலே, பரந்தநிலம் விவசாயத்துக்கு ஏற்றதாக இருக்கிறது, குடியேற்றத் திட்டத்தில் சென்று, விவசாயஞ் செய்து கொள்ள ஏராளமான வசதியிருக்கிறது. தேவையான அளவில் அவ்வசதிகளைப் பயன்படுத்த நாம் தயங்கக்கூடாது! திரைகடல் ஓடித் திரவியம் தேடிய தமிழன், — ஏன்? — யாழ்ப்பாணமிருந்து கடல் கடந்து மலாயா சென்று முயற்சியால் பொருள் தேடிய தமிழன் இக்குடாநாட்டைவிட்டு வெளியேறி விவசாயஞ் செய்வதில் என்ன கஷ்டம்? பரப்புக் கணக்கில் இங்கிருந்து விவசாயஞ் செய்யும் திறமையான விவசாயிகள், வெளியே சென்றால் ஏக்கர் கணக்கில் அல்லவா விவசாயஞ் செய்ய முடியும்!"

உரும்பராய் இளைஞர் விவசாயக் கழக ஆண்டு விழாவில் பேசும்போது, தமிழரசு வாலிப முன்னணித் தலைவரும் நியாயவாதியுமான திரு. சி. கதிரவேற்பிள்ளை மேற் கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் கூறியதாவது: -

"மானத்தோடு இந்நாட்டில் வாழவேண்டின், விவசாயத் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். புதுப்புது முறைகளையும் புதுப்புதுச் சாதனங்களையும் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அறிவும் ஆற்றலும், புத்தியும் வல்லமையும் படைத்த நம் மக்கள் சாதாரண அரசாங்க சேவையிலே திருப்தியடைவது பொருத்தமன்று; அவர்களது திறமையை அங்கே காட்ட முடியாது; பயன் படுத்தவும் இயலாது. திறமையைப் பயன்படுத்தி, மானத்தையுங் காக்க வல்ல விவசாயத்தில் ஈடுபடுவதுதான் நமக்கு வருங்காலத்தில் விமோசனம் அளிக்கும்.

"பரந்த தமிழ்ப் பிரதேசம் நம் கையில் இருக்கிறது. காடுகளை வெட்டி நாடாக்கி, நாட்டையெல்லாம் பொன்விளையும் பூமியாக்கும் அறிவும் ஆற்றலும் நம்மவருக்கு இருக்கிறது. தேவையும் சந்தர்ப்பமும் அங்கே "போ, போ" என்று வற்புறுத்துகின்றன. நாம்மட்டும் பின்னிற்கலாமா? போகத்தான் வேண்டும்!"

வடபகுதி கிருஷிகத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் பேசியதாவது:—

"இன்று, நிலமெல்லாம் விவசாயிக்கு தானாகத் தொழிற் செய்யும் விவசாயிக்கு என சட்டப்படி உரிமை இருக்கிறது. அவர்களது நன்மையை இச்சட்டம் பெருமளவிற் பாதுகாக்கிறது. எனவே, பெருந்தொகையானோர், இத்துறையில் ஈடுபடுவது மிகவும் சிறந்தது. இன்று மிகவும் அவசியமானதும் இதுவே.

"இச்சங்கத்தில், பெண்கள் அங்கத்தவராகாதிருப்பது வருந்தத்தக்கது. பெண்களும் ஏராளமாகச் சேர்ந்து கொள்ள வேண்டும். 10 வயதுக்கும் 30 வயதுக்கு மிடையேயுள்ள பெண்கள் சகலரும் சேரலாம். அவர்களுக்கு ஆலோசனையும் உதவிகளும் செய்து உதவப் பெண் உத்தியோகஸ்தர் உளர். பெண்களும் இவ்வசதிகளை எல்லாம் நன்கு பயன்படுத்த வேண்டும்".

ஆண்டுவிழா ஒரு பொருட்காட்சியுடன் ஆரம்பமானது. பெருந்தொகையான விவசாயப் பொருள்கள் காட்சிக்கிருந்தன. ஏராளமான பொது மக்கள் சமுகங் கொடுத்திருந்தனர். வடமாகாண உதவி அதிபர் திரு. ஏ. தெட்சணமூர்த்தி அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்கள். காரியாதிகாரி திரு ஜே. ரி. சபாபதிப் பிள்ளையவர்கள் பொருட்காட்சியைத் திறந்துவைத்தார்கள்.

பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்
சுத்த சைவ போசனத்திற்கும்
சிறந்த இடம்
விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957
மலாயா கபே
உரிமையாளர்: M. K. கதிரவேலு
36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

சிறுகதை

# மாற்றம்

வல்லிக்கண்ணன்

வசந்தகாலம் வருவதற்கு இன்னும் பல மாதங்கள் இருந்தன ...

மாதவன் பத்மாவுடன் பேசிப் பொழுது போக்குவதிலும், உலவித் திரிவதிலும் பசுமைபெற முயன்றான். அவனுக்கு அவளிடம் காதல் அரும்பி, அலர்ந்து, முழுதும் புஷ்பிக்க வேண்டிய நிலையில் இருந்தது.

பத்மாவுக்கும் மாதவன் பேரில் ஆசைதான். அவனோடு சிரித்துப் பேசுவதிலும், அவனைத் தொட்டவாறு உட்கார்ந்திருப்பதிலும், கையோடு கை சேர்த்து இடித்துக்கொண்டு நடப்பதிலும் அவள் பெற்ற மகிழ்ச்சியை அவ்வளவு இவ்வளவு என்று சொல்ல முடியாது.

ஆனாலும், 'பத்மா, நாம் இருவரும் ஒன்றுபட்டு வாழ்வதனால் எவ்வளவோ ஆனந்தம் ஏற்படும். நாமிருவரும் மணம் புரிந்துகொண்டு சொர்க்க வாழ்வு வாழலாமே?' என்று மாதவன் சொன்னபோது, 'இப்ப என்ன அவசரம்?' என்று இழுத்தாள் அவள்.

அவளுடைய மனநிலையை அப்பொழுதும் — அதன் பிறகும் கூட — மாதவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவன் திருமணப் பேச்சை ஆரம்பிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவள் 'இப்ப என்ன அவசரம்?' என்றே கூறி வந்தாள்.

பொழுதை எல்லாம் பொன்மயமாக மாற்ற விரும்பிய மாதவனுக்குக் காலம் வரண்டதாய் — வெறுமைப் பாதையிலே எருமை நடைபோடுவதாய்த் தான் தோன்றியது.

'பத்மா, நீ இருக்கிறாய், நான் இருக்கிறேன். உனக்கு நான், எனக்கு நீ என்ற உறுதியும் நம்மிடையே இருக்கிறது. களங்கமிலாக் காதலும் இருக்கிறது. நாம் மணவாழ்வு தொடங்க வேறு என்ன தான் வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாய்?' என்று அவன் கேட்டான்.

அவள் மோகன முறுவலும் காந்தச் சிரிப்பும் அவனுக்கு அளித்து, கரும்பின் சாற்றைக் குரலாக வடித்துக் கொடுத்தாள்: 'பணம் வேண்டாமா அன்பே, பணம்? ஒரு ஆயிரம் ரூபாயாவது சேர்த்து விடுங்கள். உடனே கல்யாணத்தை முடித்துவிடலாம்' என்றாள்.

மாதவன் பெருமூச்செறிந்தான். ஆயிரம் ரூபாயின் அருமை அவனுக்குத் தெரியும். அத்தொகை எந்தக் காலத்திற் சேருமோ!

அதன் பிறகு அவன் அவளிடம் 'திருமணம்' என்று வாய் திறக்கவேயில்லை. அதற்காக, அவர்கள் சந்தியாது இருந்துவிடவில்லை. சிரித்துப் பேசாமலோ, சினிமாவுக்குப் போகாமலோ இருந்துவிடவில்லை. உற்சாகமாக உலாப் போவதையும் விட்டுவிடவில்லை.

மாதங்கள் நகர்ந்தன. மழையும் காற்றும், பனியும் குளிரும், வெயிலும் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்தன.

திடீரென்று —

இயற்கை புதுவனப்புப்பெற்றுவிட்டதுபோலத் தோன்றியது. மரங்களில் எல்லாம் மோகன எழில். செடி கொடிகளில் எல்லாம் பூத்துக் குலுங்கும் இனிமை. வானிலே ஒரு தனிக் கவர்ச்சி. மின்னும் வெயிலிற் கூட விசேஷ அழகு புகுந்திருந்தது. எங்கும் புத்திளமை. எதிலும் உணர்வின் கிளுகிளுப்பு. காலத்தின் மோக சக்தி சகல ஜீவராசிகள் மீதும் ஆட்சிபுரிந்தது. மனிதர்கள் மட்டும் விதிவிலக்காகி விடுவார்களா என்ன?

'அன்பே!' என்றாள் பத்மா.

'ஊம்?' என்று அவன் அவள் பக்கம் திரும்பினான். ஆசைப் பார்வையால் அள்ளி விழுங்கினான் இனிய முகத்தை.

அவள் கண்கள் மினுமினுத்தன. உதடுகள் துடித்தன. உணர்ச்சி பரவசமுற அவள் பேசினாள். 'உங்களிடம் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கிறது?" என்று கேட்டாள்.

'கொஞ்சம் தான்'.

'எவ்வளவு? அதைத்தான் சொல்லுங்களேன்!'

'இருநூறு ரூபாய் இருக்கும்' என்று முணுமுணுத்தான் அவன்.

'ஏயம்மா, இவ்வளவு போதுமே! நாம் கல்யாணம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழலாம்' என்று சொன்னாள் பத்மா. அவன் மார்பில் சாய்ந்து, தோளில் இரு கைகளையும் சேர்த்தாள்.

அவனுக்கு அவள் போக்கு விளங்கவில்லைத்தான். 'வசந்தம் செய்கிற வேலை இதெல்லாம்!' என்பதும் அவனுக்குத் தோன்றவில்லை. எனினும், அவள் சுமையாக விளங்கவில்லை அவனுக்கு. அவளின் செயல் கசக்கவுமில்லை.

காதலர்களைப் பித்துறச் செய்யும் வசந்தம் மோகன எழிலுடன் அற்புதமாகச் சிரித்தது நெடுகிலும்.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிறுப்பர்

Std. 14.


இங்கே வெட்டவும்

**ஈழநாடு**
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

ஈழநாடு வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து இதனுடன் மனிஓடர்/செக்/மூலம் அனுப்பி வைக்கின்றேன்

....................................
கையொப்பம்.

பெயர்: ..........................................................

விலாசம்: ......................................................

இங்கே வெட்டவும்

# பாரதக் குடியரசு பஞ்சகம்

**பாரதத்தின் பதினன்கு மொழிப்பாவாணர்களும் பாரதத் தலைநகரில் ஜனநாயக தேவியின் கொலுவிழாவிற் கூடிப் பல்லாண்டிசைத்தபோது, தமிழ்மொழியின் சார்பாக**

'பொற்காசுப் புலவர்' — திருலோக சீதாராம்
அவர்கள் இயற்றிய பாடல் இது.

வங்கக் கடல்மூன்று மால்வரையு மெல்லையாய்
வாழ்ந்துசெங் கோல்ந டாத்தும்
வாய்மையாற் குடிமன்னர் வாக்கெனும் வலிமையால்
வையமே லமைதி யொன்றே
தங்கும் படிச்செயும் தார்மீக சக்தியாய்த்
தாரணியி லொளிவி ளக்காய்ச்
சன்மார்க்க வாழ்வெனும் பஞ்சசீ லத்தினைச்
சார்ந்துபன் னாட்டி னரெலாம்
பொங்குவெங் கோபம் பொறாமைபகை போக்கிநின்
புன்னகை முன்னர் நாணிப்
புதுவாழ்வு பெற்றிடப் புரிகுவை பாரதப்
பொதுமையாம் அஹிம்சை என்னும்
தங்கம் தழைத்திடும் சிங்கா தனத்திருந் (து)
ஆண்டிடுங் குடிமை அரைசே
தமிழொடும் பதினன்கு தனிமொழியும் ஒன்றிநின்
தத்துவம் ஓங்க அருளே. 1.

பேரிமய வெற்பெல்லை யாக்கொண்ட பாரதப்
பெருநிலத் தெல்லை யெல்லாம்
பேசிடும் மொழியெல்லை யில்லையென் றுலுமவர்
பேணுங் கருத்தி லொன்றே
போரினிற் சோதரர் பொருததும் வாழ்வெலாம்
போராட்ட மான பழியும்
போதுமினி பாரதப் பொதுமையில் மொழிஇனப்
பொல்லாத வெறியு முண்டோ?
பாரறிய வேபறை முழக்கிடும் ஒற்றுமைப்
பண்பெனும் புதிய வாழ்வே
பண்ணெழுகும் இன்னிசைப் பதினன்கு மொழிகளிற்
பாவரங் கேறி நின்றே
சாரமெய்ஞ் ஞானமொழி சாற்றிடுங் கவிவாணர்
சார்ந்து நின்பு கழ்பாடவும்
சாத்திரம் கோடிபல தந்திடும் இந்தியச்
சக்தி தமிழ்ஏற் றருள்கவே. 2.

ஆரிருட் பொய்மையில் அடிமையாம் தளையினில்
ஆட்பட் டிருந்த மக்கள்
அவரவர்க் கேற்ற தொழில் ஆயிரம் புரியவும்
அருங்கலைகள் பயின்று கொளவும்
ஊரினில் ஒதுப்புறச் சேரிகளில் ஒண்டியே
ஊமையர் களாயி ருந்தோர்
உணர்வுபெற வுங்கல்வி உண்மைகொள வும்புகழில்
ஓங்கிடவும் வலிமை தந்தாய்
யாரெனிலும் இந்தியர் அனைவரும் சரிநிகர்
அவரவரும் குடிய ரசரே
அவரிடுங் கட்டளை ஆட்சிமுறை யாகுமென
அவருடை வாழ்வு கந்தாய்
சீரெலா மீண்டிடச் செந்நெறி தழைத்திடச்
செய்த ஜனசன நாயகீ
செம்பவள வாய்மொழி சிந்திநல் முத்துதிரும்
செந்தமிழ் சந்த மிதுவே. 3.

கங்குல்பகல் என்றிரு கால்மாறி யாடிடுங்
காலமென் கின்ற கள்ளி
காலையில் ஒளியெனுங் கள்ளூற்றி மாமயற்
கண்காட் டிவெறி யூட்டுவாள்
எங்குநிறை தாவரச் சங்கமும் எழிலாகி
இன்ப நிறை வாகி நிற்ப
இன்றுநாம் என்செய்ய எமைவெருட் டும்பசிக்(கு)
என்னவழி என்று மாந்தர்
பொங்குவார் பகைகொண்டு புகையுயிர்த் தேயவர்
பொற் பழிந் தேங்கி டாமல்
பூதான சம்பத்து தானமென் றேயொரு
புதியவொளி தோற்று வித்தாய்
சங்கத்திருந்து தமிழ்ச் சந்தங் குழைந்தகவி
சாற்றித் துதிக்க வந்தேன்
சாந்தமெய்ஞ் ஞானபா ரதசக்தி யருளினைச்
சர்வோ தயம்எ மூகவே! 4.

திரைகடல் சூழவும் தென்குமரி மாதவம்
செய்யவும் முடிது ளக்கிச்
சென்றுவிண் தொட்டுநிற் கின்றமலை சேவகம்
செய்கின்ற முன்றி லுடையாய்
கரையிலாக் காலமெக் காலுமே தன்னிரு
காற்சிலம் பொலிகு லுங்கும்
கங்கைமுதல் தென்திசைக் காவிரிப் பொருனைசவை
கற்கண்டு வைகை மடவார்
தெருவீதி நின்றுவிளை யாடிநின் புகழ்பாடும்
திருவிழாப் பெருமை காணத்
திரைகொழித் திடுகின்ற தரளநகை முத்தமிழ்த்
தேன்அலைந் திட்ட கவிதை
தரவல்ல கற்பனைக் கொருகவிஞன் வந்துநின்
தண்ணருள் வேண்டு கின்றேன்
தணியாத நல்லுயிர்த் தாபமும் செந்நெறியும்
தந்தெமை வாழ்த்தி யருளே! 5.

பழமொழிகள் மக்கள் வாழ்வு எனும் பெரிய ஆய்வுக் கூடத்திலே பலருடைய அனுபவத்தின் பயனாகத் தோன்றியவை என்பதை இக் கட்டுரையில் அதன் ஆசிரியர் நன்கு விளக்குகின்றார்.

# ஓர் அனுபவ உண்மை

[ப. முருகன் தமிழ்ப் பேராசிரியர் அரசினர் கலைக்கல்லூரி, கோவை]

பழம் பெருமைமிக்கது நம் நாடு. அனாதி காலந்தொட்டு நாள்தோறும் கலை, பண்பாட்டிலும் வளர்ந்துவந்து, இன்று உலகநாடுகள் அனைத்திலும் தனிசிறந்தநாடாக விளங்குகின்றது. நம் நாட்டின் பண்பாட்டின் வளர்ச்சியினைப் பின்நோக்கிக்காணின், நம்நாடு எவ்வகையில் வளர்ந்துவந்திருக்கிறது என்பதைக்காணமுடியும். அங்ஙனம் பின்நோக்கிக் காண்பதற்கு நமக்குத் துணை செய்வன நம்மவர் படைத்த நூல்களும், சமைத்த கட்டிடங்களும், அமைத்த கதைகளும், பாடிய நாடோடிப் பாடல்களும், பழமொழிகளும், கையாண்டுவந்த பல்வேறு கருவிகளுமேயாகும். மானிட இயலினை ஆராய்கின்ற ஆசிரியர்களுக்கும், நில நூலினர்க்கும், புதைபொருள் ஆராய்ச்சியாளர்க்கும் கற்பாறைகளும், மக்கள் பயன்படுத்திய கருவிகளும் எத்துணையளவு துணை செய்து நிற்கின்றனவோ அத்துணை நலம்பயந்து நிற்பன நாட்டிலே மக்கள் வழங்கிய பழமொழிகள். பழமொழிகள் அவ்வந் நாட்டுமக்களின் ஒழுகலாற்றினையும், நாகரிகத்தினையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கும் "பொருட்கூறுகள்" எனலாம். நூல்கள்தோன்றுவதன் முன்னம் பழமொழிகளே மனிதனுடையவாழ்க்கையில்பெரும் பங்குகொண்டு செம்மைசெய்து வந்தன.

## வாழ்க்கை அனுபவம்

மனிதன் பிறவிலங்குகளைப் போல் அல்லாமல், பிறருடைய அனுபவங்களின்மீது வளர்ந்து வருகின்றான். பிறருடைய அனுபவங்களையெல்லாம் ஒருங்கு திரட்டி அதன்மீது தன் வாழ்க்கையைக் கட்டுகிறான். தன் எண்ணத்தால் உயர்ந்துசெல்கின்ற மனிதனுக்குப் பிறருடைய அனுபவம், நல்ல கடைகாலாக நிற்கின்றது; நல்ல உரமாகி ஆக்கம்பயக்கின்றது. பிறருடைய அனுபவத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் முறை மனிதனுக்கே உரியது. இது எவ்வாறு முடிகின்றது? மக்கள் தம் அனுபவங்களையெல்லாம் தமக்குள் அடக்கி வைத்துக்கொள்ளுதலே இல்லை. வஞ்ச நெஞ்சம் படைத்தவர்கூடப்பிறர்க்குத் தம்அனுபவத்தைக் கூற விரும்புகின்றனர். நல்ல நெஞ்சம் படைத்தோர் தம் அனுபவங்களை நூல்க்ளாகப் படைத்துத் தருகின்றனர். நூல்கள் அனைத்தும் வாழ்க்கையனுபவங்களே. மனிதனுடைய வரலாற்றில், மிக அண்மைக்காலத்தில்தான் எழுத்தும் நூல்களும் தோன்றின. நூல்கள் தோன்றுவதன் முன்னம் என்ன செய்திருந்தான்? அனுபவங்களையெல்லாம் பாடல்களாகவும், பழமொழிகளாகவும், நாடோடிக் கதைகளாகவும் கூறிவந்திருக்கக்கூடும். அதனாலேதான் நாட்டுப் பாடல்களையும், பழமொழிகளையும், பழங்கதைகளையும் பொன்போற் போற்றவேண்டியவர்களாக ஆகின்றோம்.

## அனுபவத்தின் பயன்

நம் நாட்டில் வழங்கிவரும் பழமொழிகள் மிகப் பல. அவை நம் முன்னோர் தம் வாழ்க்கையில் கண்ட உண்மைகளையும், அந்த உண்மைகளை வாழ்க்கை அநுபவமாகக் கண்டுணர்ந்தோரின் மன நிலையினையும், அவர் தம் அறிவின் திறனையும் தெள்ளிதின் எடுத்தியம்பும்: இந்நாளில் உள நூல் ஆசிரியர்கள் தம் ஆய்வுக்கூடத்தில் சோதனை பல செய்து திரட்டித்தரும் பல உண்மைகளைச் சுருக்கமாகவும், மிகத் தெளிவாகவும் நம் நாட்டுப் பழமொழிகள் கூறிவிடும். இந்நாளில், பரிசோதனை மூலம் கண்டுணர்ந்து உள நூலினர் கூறும் சில உண்மைகள் மாறவும் கூடும்; ஏனெனில் இவர்கள் குறுகிய காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற் சில உண்மைகளைத் தமக்குக் கிடைத்த சிலரை வைத்துக்கொண்டு காண்கின்றனர். ஆனால் பழமொழிகளோ ஒருகாலத்தில்ஒருவருடைய ஆய்வுக் கூடத்திலே தோன்றவில்லை; மக்கள் வாழ்வு எனும் பெரிய ஆய்வுக் கூடத்திலே பலருடைய அனுபவத்தின் பயனாகத் தோன்றியவை. ஆயின் என்றும் மாறாத பேருண்மைகளைக் கூறுவனவாக அவை இருக்கின்றன. எனில் அவைகளை நாம் புறக்கணிக்கலாமோ?

## உற்ற நண்பன்

நாய் என்றாலே நமக்கு ஒரு பற்று உண்டு. அது வாலைக் குழைத்து வருவதும், சிறிது அன்பு காட்டினால் முகத்தை நக்குவதும் நாம் கண்டதுண்டு. நம் பள்ளிக்கூட ஆசிரியர்கள் நமக்குப் பல கதைகளின் மூலம் மனிதனுடைய உற்ற நண்பன் நாய், நன்றிமிக்கது நாய் என்றெல்லாம் கூறியிருக்கின்றனர். மனிதன் அன்று காட்டிலே வேட்டையாடித் திரிந்து வந்த நாள்முதற் கொண்டு பெரிய அரண்மனை வாழ்வுவரை, நாய் மனிதனுக்குப் பக்க பலமாக இருந்துகொண்டு வந்திருக்கின்றது. சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் நாயினும் கடையேன் என்று தம்மைக் கூறிக் கொள்கின்றனர். பெரிய வேதாந்திகளும், சைவ சித்தாந்திகளும் அத்துவைத கருத்துக்களை எளிதாக "நாய் காணின்கல்காணார்" என்றுகூறியிருக்கின்றனர். மெய்ஞ்ஞானமுணர்ந்தோர் நல் வழிப்படாத மனத்தின் தன்மையினை நாய் வாலோடு ஒப்பிட்டுக் கூறியிருக்கின்றனர். இங்ஙனம் அன்று காட்டிலே திரிந்துவந்த மனிதன் முதற்கொண்டு, சந்திரனையும் சூரியனையும் நோக்கி விரைந்து கொண்டிருக்கும் இக்கால அறிவியல் மனிதன்வரை நாயை மறக்கவில்லை! நாயுடன் மிகப்பழகி நாயின் அருங்குணங்களையெல்லாம் உணர்ந்து நம் முன்னோர்கள் நாய் பொருளாகப் பல பழமொழிகள் வழங்கி வருகின்றனர். அவைகளுள் ஒன்றே "நாற்பதுக்குமேல் நாய்க் குணம்" என்பது.

## நன்றி மறவாமை

நாய்க்குணம் என்று பொதுவாகக் கூறியிருக்கின்றனர்; நாய் நன்றிமறவாமைக்குப் பேர் போனது; எளிமையுடையது; உற்ற நண்பனாக அமைந்து உற்றுழி உதவுவது; துன்பத்திற்குத் துணையாகும்; தினையளவு நன்றி செயினும் பனையளவாகக் கொண்டு வாலையாட்டும்; நிற்க நேரமில்லாமல்ஓடியலையும்; இந்தக் குணங்கள் பலவற்றுள், நாற்பதுக்குமேல் எந்தக்குணத்தினை மனிதனுடைய குணமாகக் கூறியிருக்கக் கூடும்? இதனையுணர்ந்துகொள்ள வேண்டுமாயின் நாற்பதுக்குமேல் மனிதனுடைய குணத்தையும் அறிந்துகொள்ளவேண்டும்; நாயின் குணத்தினையும் மிகத் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும். இது குறித்து நம் நாட்டில் ஒரு கதை வழங்கிவருகின்றது. அக்கதை மூலம் என்ன விளக்கம் காணமுடியும் என்று காண்போம்.

## ஒரு கதை

உலகினைப் படைத்தவன் நான்முகன் என்பது வழக்கு. நான்கு திசைகளுடன், நான்கு நிலத்தினைப் படைத்த நான்முகன் முதன்முதலில் இவ்வுலகத்தில் வாழ நால்வரைத்தான் படைத்தானாம்; அவர்கள் மனிதன், நாய்,மாடு, ஆந்தை ஆகிய நால்வராம். இந்நால்வரைப் படைத்துப்பிரமன் ஒவ்வொருவருக்கும் நாற்பது வயது வாழும் பேற்றினையும் கொடுத்தானாம். ஒவ்வொருவரும் நாற்பதுவயது பெற்று ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகின்றபோது,மனிதன் தன்னோடுதோன்றிய நாய், மாடு, ஆந்தை ஆகிய மூவரையும் மிகக் கொடுமையாக நடத்தத் தொடங்கினான். எப்போதும் ஓய்வு சாய்வில்லாமல் நாயிடமிருந்து வேலை வாங்கினான்; பொறுமையுடன் பொதிசுமக்கச் செய்ததுடன் கொம்பினால் மாட்டையடித்து வந்தான்; இரவும் பகலும் உறங்காமற் காவலில் வைத்துவிட்டான் ஆந்தையை. மனிதனுடைய கொடுமையைப் பொறுமையாகத் தாங்கிவந்தனர். நாள்தோறும் மனிதனுடைய தொல்லைதாங்க முடியவில்லை; வளர்ந்துகொண்டே போயிற்று. அதற்கு முடிவுகாண விழைந்தனர். எப்படியோ 20 ஆண்டுகள் வாழ்ந்துவிட்டனர். அவனிடமிருந்து ஓடிவிடலாம் என்றாலோ விடமாட்டான். எங்குசென்றாலும் பிடித்துக் கொண்டுவந்துவிடுவான். இந்த உலகத்தில்இருக்கின்றவரைதொல்லைதான். அதனால் இருபது ஆண்டு வாழ்வுபோதும். இனிமேல் உலக வாழ்வே வேண்டாம் என்று பிரமனிடத்திற் சென்று முறையிட்டனர். படைத்த பிரமன் அவர் தம் குறைகளைத்தான் இருபது ஆண்டுகளுக்குமேல் மனிதனுடன் வாழ விரும்பாததால், அவர்களின் ஆயுட்காலத்தை எடுத்து மனிதனுக்குக் கொடுத்துவிட்டான். முன்னர் மனிதனுக்கு இருந்த வயது நாற்பது; அதற்குமேல் நாயின் வயது 20 கிடைத்தது; அதற்குமேல் மாட்டின் வயது 20; அதற்குமேல் ஆந்தையின் வயது 20 கிடைத்தது. அப்படி நாற்பது வயது பெற்ற மனிதன் அவனுடன் முதலில் தோற்றுவித்த நாய், மாடு, ஆந்தை முதலியோர் வாழ விரும்பாததால், நூறு ஆண்டுவரை வாழத் தொடங்கினான்! தமக்கு இன்னா செய்தானையும்தம்வாழ்நாளெல்லாம் பெற்று வாழுமாறு நன்னயம்செய்த பண்பாடுதான் இத் தமிழ் மண்ணின் பண்பாடு போலும்! மனிதன் நாற்பது வரை தனக்குமுதலிற் கிடைத்த வாழ்நாளை வாழ்கின்றான். அதனால் நாற்பது வரை மனித இயல்புடன் இருக்கின்றான். அதற்கு மேல் பிறருடைய ஆயுட்காலத்தைப் பெற்று வாழ்வதால், நாற்பதுக்குமேல் அறுபது வரை நாய்க்குணமும், எண்பது வரை மாட்டின் குணமும், நூறு வரை ஆந்தையின் குணமும் மனிதனிடம் அமைந்து விட்டதெனக் கதை சொல்லுகின்றது! இப்படிக் கூறுவது நாயடித்த காசு குலைக்கும் என்பது போலத் தோன்றுகின்றது!

நாற்பதுக்கு மேல், பலர் சீறி விழுகின்றனர். அவர்களிடத்தில் போக அஞ்சுகின்றோம் அன்பில்லாமல் சீறி விழுவதா நாயின் குணம்? நாய் நன்றியுள்ளது! அன்புடையதன்றோ.?

(தொடரும்)

# படித்த இளைஞர்களின் எதிர்காலம் நாட்டை விருத்தி செய்வதே வழி

## பரிசளிப்பு விழாவில் டாக்டர் என். எம். கருத்துரை

"உண்மையான பிரச்சினைகளை எதிர்நோக்கிச் சமாளிக்கச் சக்தி இல்லாதவர்கள், பொதுசன பாதுகாப்பை மேலும் மேலும் பலப்படுத்தும் சட்டங்களைத்தான் இயற்றுகிறார்களேயொழிய வேறொன்றும் செய்யவில்லை," என்று பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவராகிய டாக்டர் என். எம். பெரேரா குறிப்பிட்டார் .சாவகச்சேரி இந்துக்கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்கெனக் கல்லூரி முன்றிலிலே கூடியிருந்த பிரமாண்டமான கூட்டத்திற் பேசும்பொழுதே அவர் மேற் கண்டவாறு சொன்னார். இவ் விழா சென்ற 14-3-59 சனிக் கிழமை மாலை நடைபெற்றது. டாக்டர் பெரேரா தமது பரிசளிப்பு விழா விரிவுரையின் போது மேலும் கூறியதாவது:-

இன்றைய பரிசளிப்பைப் பார்த்துக்கொண்டிருந்த போது எனக்கு ஓர் உண்மை புலனாகியது. இங்கே தமிழ் மொழிக்கென முதற் பரிசு பெற்ற மாணவர் பலர் ஆங்கிலத்திலும் பரிசு பெற்றிருக்கிறார்கள். இதனால் நாம் அறிவதென்ன? ஒரு மொழியைப் பயின்று அதில் வல்லவராகும் திறமை உடையவர்களுக்கு இன்னொரு மொழியையும் கற்றுப் பயனடைவதிலே வில்லங்கம் தோன்றாது. மொழியில் வல்லமை பெறும் திறமை உள்ளவர்கள் எத்தனை மொழியையும் பயின்று கொள்ளலாம். எனவேதான் மொழியின் பேரால் வேலியிட்டுப் பகைமை பாராட்டிச் சண்டையிடுவது அர்த்தமற்ற செயல் என்றுகூற விரும்புகிறேன். மொழியின் பேரினால் பகைமை மனப்பான்மையைப் பயிரிட்டு வளர்க்கும் தீவிரவாதிகளின் பிடிதளர்ந்து, நாட்டு மக்கள் அனைவரும் நாம் இலங்கையர் என்ற உணர்வுடன், சாந்தியையும் சமாதானத்தையும் நிலவச் செய்யும் நன்னாள் வெகு விரைவிலேயே வரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதற்குத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழி அறிவும் விருத்தி ஆக வேண்டியது அவசியமாகும்.

### ஆங்கிலம் வேண்டும்

ஆங்கிலத்தின் தரம்குறைந்து வருவதாக உங்கள் அதிபர் குறிப்பிட்டார். அதைக்கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. இன்றைய ஆட்சியாளர் கையில் எப்போது அதிகாரம் கிட்டிற்றோ, அன்றே இத்தகைய படுமோசமான நிலைக்கும் விதையூன்றப்பட்டது. காலத்தோடொட்டிய வளர்ச்சிக்கும், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரப் பயிற்சிக்கும் ஆங்கிலம் இன்றியமையாதது. அதிகார ஆசைகொண்ட சில நாட்டுத் துரோகிகள் இந்த உண்மையை மூடி மறைக்க முயலலாம். தென்னிலங்கையிலும் பிற பகுதிகளிலும் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நாளைக்கு நடத்திப் பார்த்தாலும் கூட உண்மை விளங்கும். நாட்டு மக்களில் 99% வீதத்தினருக்கு அதிகமானவர்கள் ஆங்கிலம் வேண்டும் என்றுதான் வாக்களிப்பார்கள். பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு வேறு வழியறியாத வங்குரோட்டடித்துப்போன அரசியல் வாதிகள்தான் இச்சீர் கேட்டுக்குப் பொறுப்பாளிகள்.

### நாட்டின் கவலை

படித்த இளைஞர்களின் எதிர்காலம் பற்றியும் உங்கள் அதிபர் கவலை தெரிவித்திருந்தார். அந்தக் கவலையிலே நானும் பங்கு கொள்ளுகிறேன். இந்தப் பிரச்சினைகளைத்தீர்ப்பதற்குரிய ஒரே ஒரு வழி நமது நாட்டைத் திட்டமிட்டு விருத்திசெய்வதேயாகும். அதிகார ஆசை மிகுந்த அரசியல் வாதிகள் இத்துறையில் எவ்வகை முயற்சியும் செய்யக் காணோம். நிபுணர்கள் வருகிறார்கள். திட்டங்கள் வகுக்க முயற்சிகள் நடக்கின்றன. உருப்படியான திட்டம் ஒன்று கூட வெளியான பாடில்லை. உண்மையான பிரச்சினையை எதிர்நோக்கிச் சமாளிக்கச் சக்தி இல்லாதவர்கள் என்ன பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் தெரியுமா? பொதுசனப் பாதுகாப்பைப் பலப்படுத்துகிறார்களாம், சட்டங்கள் இயற்றி!

சென்ற ஆண்டிலே, மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகள் கிளறிவிடப்பட்டபோது அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. எனினும் நாம் நம்பிக்கை இழந்துவிடத் தேவையில்லை.

கல்லூரி அதிபர் திரு ஏ. மண்டலேஸ்வரன் வாசித்த அறிக்கையிலே, சமயக் கல்வியின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். கல்லூரி கீத இன்னிசையுடன் விழா நிறைவேறியது.


வாழ்க்கையில் இன்பந்தருவது எது?
உங்கள் வனப்பைக் காட்டும்
மங்களகரமான புகைப்படங்கள் தான்!
தத்ருபமான புகைப்படங்கள் பிடிக்க
பாரத் ஸ்ருடியோ
தயாராயிருக்கிறது.
யாவரும் விரும்பும் எல்லா வித சந்தர்ப்பங்களிலும்
போட்டோ பிடிக்க அழையுங்கள்
BHARAT STUDIO
PHOTOGRAPHERS
Phone 252 Grams BHARATFOTO
82/1, Kasturiar Road, JAFFNA

மாதர் பகுதி

# குடும்ப சேவை

கனகம்

குடும்ப வாழ்க்கையின் உய்வுக்கும்உயர்வுக்கும் ஆதாரமாக அமைந்தவள் பெண். இல்லம் என்னும் தீபம் அவளது பண்பெனும் நெய்யினாற்றான் துலங்குதல் வேண்டும். அதை ஒளிரச் செய்வதன்மூலம் நாட்டுக்கும் வீட்டுக்கும் அவள் மாபெருந் தொண்டு புரிந்தவளாகுகிறாள்.

மென்மையான பண்டங்கள் இலகுவில் நலங்கித் தூய்மை இழந்துவிடுவதுபோல் மெல்லியல் என்ற காரணப்பெயர் கொண்ட பெண்களின் பண்பாடுகளும் குறுகிய சில பலவீனங்களினால் நலனிழந்து விடுகின்றன.

வீட்டின் கடமைகள், கணவனின் தொண்டு, பிள்ளைகளைப் பேணல் ஆகிய எல்லையுடன் நிற்கும் பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் யந்திரங்களாக இருந்தாலும்—அவர்கள் வாழ்க்கையின் அமைதி, புயலாக மாறுவதில்லை.

காலத்தோடு ஒட்டிய, கல்வி, கேள்விகளில் தம்மை மேம்படுத்திக் கொண்ட பெண்மணிகள் வெளி விவகாரங்களில் தலையிட வேண்டி நேரிடுகிறது. அதிற் தவறில்லை. கட்டுப்பெட்டியாக வீட்டினுள் முடங்கிக்கிடக்கும் நிலையை மாற்றி உலகத்துடன் ஒட்டியதான செயலில் இறங்கத் தான் வேண்டும். ஆனால் அதற்கு ஓர் எல்லை உண்டென்பதை மறந்து விடுவதினாலேயே இப்படியான நிலை ஏற்படுகிறது.

உதாரணமாக இளம் வயதினளான பெண் தனது பண்பாட்டினின்றும் முற்றாக விலகாதவளாக இருக்கினும், அத்துமீறிய சுதந்திரம் அவளை மற்றவர்களுக்குக் குறைபடக் காட்டும்.

'கட்டுமட்டில்லாமல் திரிகின்றாள்' என்னும் அவப் பெயர் அவளை வந்தடைகிறது. இப்படியான நிலையில் சிறுகச் சிறுக அவள் மனவைராக்கியம் அடைந்து தனது சுதந்திரத்தை முற்றாகப் பயன்படுத்துகிறாள். அவப்பெயரும் இறுக்கமடைகிறது. எனவேதான், எவ்வளவு நிலையான அறிவு ஞானம் படைத்துவிட்ட போதிலும் பெண்கள் தங்கள் நிலையிலிருந்தும் வழுவக்கூடாது.

சிரித்துச் சிரித்து நேரில் பேசும் அடுத்தவீட்டுச் சகோதரி அவள் மறைந்ததும் மற்றவருடன் தாக்கிப் பேசுவது சர்வ சாதாரணம். பெண்ணுலகத்தில் அது ஒரு நோய் என்றுதான் மதிப்பேற்படும்.

பெண்மையெனும் சிறந்த நிலைக்கு மனத்தோடொட்டிய குணச்சிறப்பு அவசியமானாலும், வெளியுலகத்தின் கண்களுக்கும் தப்பி அடக்கமாக வாழ வேண்டும்.

மேலைத்தேசத்தின் நாகரிகத்துக்கு ஒரு பெண் தனித்து—உலகம் முழுவதையும் சுற்றிவருவது சுலபம். அவர்களது பண்பாடுகள் அதற்கு ஒத்தன. அதில் குறையும் காண எவரும் முற்படமாட்டார்கள். ஆனால் பாரதப் பண்பாடு—அதாவது தமிழரது பண்பாடு இதற்கு முற்று முழுதான மாற்றமுடையது. அது தவறு என்று வாதாடுவதற்கில்லை.

புராண இதிகாசங்களில் வாழ்ந்த பெண்களையோ, அன்றி சரித்திரகாலப் பெண்களையோ நாம் ஊன்றி அறிந்தோமானால் அது புலப்படும். அவர்கள் தமது நிலையில் உறுதிப்பாட்டுடன் நின்றமையாற்றான், சிறந்த நிலையடைந்து மேன்மையுற்றார்கள்.

எனவே,அப்படியான புராண இதிகாசத்துக்குப் பெண்களோடு ஒப்ப நாம் வாழவோ, அவர்களது சாதனைகளை நிலைநிறுத்தவோ முடியாது. ஆனால் வழிவந்த எமக்கென்ற பண்பாட்டின் நியதியை—கட்டுப்பாட்டைத் தகர்த்தெறியாத வகையில் வாழ்க்கையைச் சீர்பெற அமைத்தல்வேண்டும்.

புதுமை, புரட்சியென்று நாம் தீவிரமாகக் கூறித் திரிவதைவிட வாழ்க்கையில் எம்மைச் சுற்றியுள்ள கடமைகளைச் சரிவரச்செய்வதே சாலச்சிறந்தது.

முதலில், பெண் என்பவள் தாய். அதற்குப்பின்தான் இந்த நாட்டின் சேவகியாதல் வேண்டும். முற்றுமுழுதான சேவகம் செய்ய முனைந்தாலும்கூட வாழ்க்கையில் பூரணத்துவம் பெறாத குறையொன்று சுற்றி வருவதை உணரவே வேண்டும்.

நமது நாட்டின் நிலை உயர, பெண்கள் செய்ய வேண்டிய மகத்தான கடமை மேடையில் நின்று முழக்குவதன்று, ஆசாபாசங்கள் நிறைந்த—இகவாழ்வில் தனது கடமையைச் செய்வதே. அதுதான் நாட்டிற்கு அவள் செய்யும் மகத்தான சேவையாகும்.

சகோதரிகள் சுதந்திரம் என்று சொல்வதைத் தமது பண்பாட்டை விலக்கி ஆணுடன் சமதையாகச் சேவை செய்வதையோ, ஆண்கள்போன்று தொழிலாற்றி விடுவதையோ பெரிதெனக் கொள்ளக்கூடாது. தொழில் எது புரியினும் நாம் பெண், நமது பண்பாட்டிற் கால் கொள்ளவேண்டும் என்ற சிந்தனையும் ஒன்றோடொன்று இணைந்துவருதல் வேண்டும்.

## கோண்டாவில் மாதர் சங்கம்

### நெசவுசாலை நிறுவ முயற்சி

இதுவரை காலமும் பெருந்தொகையான சிறு மாணவிகளுக்கும் யுவதிகளுக்கும் தையற் கலையைக் கற்பித்து அருஞ்சேவை புரிந்த கோண்டாவில் மாதர் சங்கம், ஒரு நெசவுசாலை நிறுவும் பெரு முயற்சியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளது. பல நாட்களாகத் திட்டமிட்டு ஆலோசனை செய்துவந்த அச்சங்கத்தின் செயற்குழு, கடந்த வார இறுதியிற் கூடியபொழுது, இவ்விஷயம் பற்றி மீண்டும் ஆலோசனை செய்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது. திருமதி. நவரத்தினராஜா அவர்கள் தலைமையில் கூடிய செயற்குழு, இம்முயற்சியில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கத் தங்களுக்கு நிதி உதவி புரியுமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இச்சங்கம் நிறுவப்பட்டபின், இங்குள்ள பெருந்தொகையான மாணவிகளும் யுவதிகளும் தையற் கலையைத் திறம்படப் பயிலவும், மற்றும் வீட்டுப் பணியின் சில அம்சங்களைத் தெளிவாக அறியவும், பழவகைகளிலிருந்து 'ஜாம்' முதலியன செய்ய அறிந்து கொள்ளவும் நல்ல வசதிகள் செய்யப்பட்டன. இப்பொழுது, இச்சங்கம் மேற்கொண்டுள்ள அருமையான திட்டம் நடைமுறைக்குவரின், அது மிகவும் வரவேற்கத்தக்க பலன்களை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. பலருக்குத் தொழிலையும், அதன்மூலம் தமது நிதி நிலைமையைச் சீர்ப்படுத்திக் கொள்ள நல்ல சந்தர்ப்பத்தையும் அளிக்குமென்பதில் ஐயமில்லை.

— ந. நி.

# அன்புத் தோழிக்கு

எஸ். கே. யமுனா

"பிறை கண்டதைப் போல்" இன்று உனது விலாசமிட்ட கடிதத்தைக் கண்டதும் அளவிலா மகிழ்ச்சி எய்தினேன்.

வாரந் தவறாமல் எனக்கு உனது உள்ள நிலையைச் சொல்லி; அன்பு மடல் எழுதி; என் அன்பைப் பெற்ற நீ; திருமணமாகி உனது கணவனுடன் புக்ககம் சென்றதும், என்னை மறந்து கடிதமே எழுதாமல் விட்டுவிட்டாய், என்றாலும் தற்போது உனது குடும்பச்செலவு அதிகரித்த பின்தான் என்னை எண்ணினாயோ? இப்போதாவது என்னை நினைத்தாய் அல்லவா? அதுவே போதும்.

எனது அன்புத் தோழியின் கடிதம் பலநாள் கழித்து வந்ததேயென்று மனமகிழ்ந்து, ஆர்வமுடன் அக்கடிதத்தைப் பிரித்துப் படித்த என்னுள்ளம் சொல்லொணாத் துயருற்றது.

கல்லூரி சென்று படித்துப் பயன் பெற்ற நீ; அரசாங்க உத்தியோகத்தில் தொழில் நடத்தும் கணவனைக் கைப்பிடித்த நீ; இன்று உனது குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாமல், கணவன் தரும் பணம் உன்குடும்பச்செலவுக்குப் போதவில்லையே என்று மனம் வருந்தி எழுதியிருந்தாய். அவற்றைப்படிக்கும்போது என்னுள்ளம் கரைகின்றது. இப்படிப்பட்ட கடிதத்தை எனக்கு நீ எழுதுவாய் என்று நான் என்றுமே எண்ணியதில்லை.

நீ ஒரு பெண்ணாய்ப் பிறந்தும், கல்லூரி சென்று கல்வி பயின்றும்; மிக்க அறிவுத்திறன் உள்ளவளாய் வந்தும், உன் கணவனின் பணம் குடும்பச் செலவுக்குப் போதாமல் உன்னை வருத்துவது உனது ஊக்கமின்மையேயாகும். உன்னைப் போல் ஊக்கமில்லாத பெண்கள் பலர் இன்று நம் அன்னை மடியில் மண்டியிட்டுக் கிடப்பதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இப்படியே பலரும் இருந்தால் பெண்குலம் எப்படி முன்னேறும்? இதை நீ இன்னும் உன்னளவில் உணர்ந்தாயில்லை. உனது ஊக்கமின்மையே உன் குடும்ப வீழ்ச்சியின் காரணமாக இருக்கலாம்.

உன்னிலும் பார்க்கக் கீழ் நிலைமையில் உள்ள ஒரு குடும்பப் பெண் எப்படித் தன் குடும்பத்தைக் கொண்டு நடத்துகிறாள் என்றும்; எவ்வளவு சந்தோஷமாய்த் தன் கணவனுடன் இல்லறம் நடத்துகிறாள் என்றும், நீ இன்னமும் அறியவில்லையா? ஊக்கமுடனும், சிக்கன வாழ்வுடனும் இருப்பதினாலேயே அவள் எந்நேரமும் தன் பதியுடன் இன்பமாய் இருக்கிறாள்.

உன்னைப்போல் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணோடு சிநேகம் செய்வதைவிட, அறிவுள்ள, ஊக்கமுள்ள ஏழைப் பெண்ணுடன் சிநேகம் செய்தால் உன் செலவு சிறிது குறைந்து உன் குடும்பமும் சற்று விருத்தியடையும்.

நீ ஆடம்பரமான பெண்மணிகளை நட்புக் கொண்டதினாலேயே, அவர்களால் உனக்குப் பணக்கஷ்டம் ஏற்படுகின்றது.

விலையுயர்ந்த ஆடை அணிகள் வாங்குதல்; நகத்திற்கும், உதட்டிற்கும் சாயம் பூசுதல் ஆகிய நாகரிகப் பழக்கத்திற் கெல்லாம் பணம் வேண்டுந்தானே? நீ உன் ஆடம்பரத் தோழியிடம் பணத்தைச் செலவு செய்யக் கூடிய பழக்கங்களைப் பழகிக் கொண்டதேயல்லாமல், பண்புடன் வாழ்ந்து உனது குடும்பத்தை மேன்மையுறச் செய்யக் கற்றுக்கொள்ளவில்லை. உன் கணவன் தரும் பணம் உன் ஆடம்பர வாழ்வுக்கே போதாது. மேற்கொண்டு நீ குடும்பத்தை எப்படி இன்பமுடன் நடத்த முடியும்?

உன்னைப் போன்ற பெண்மணிகள் நாட்டின் நலத்தைச் சிறிதும் கவனிப்பதில்லை. டாம்பீக வாழ்வில் ஈடுபட்டுள்ள பெண்களே இன்று தங்கள் கணவர்மார் தரும் பணம் போதவில்லையே என்று வருந்துகிறவர்கள். இவர்கள் தங்கள் பணத்தையும், நேரத்தையும் வீணாக்கிக் கொள்கின்றார்கள். சிறிதளவேனும் தங்கள் குடும்பத்தின் பொருளாதாரத்தைச் சீராக்க முனைவதில்லை.

அருமைத் தோழியே! தயவு செய்து தமிழ்ப் பண்பைப் பேணிக்கொள். தேவையற்ற செலவுகளை நீக்கிக்கொள்! உனது டாம்பீக வாழ்வைக் குறை கூறினேன் என்று என் மீது கோபங் கொள்ளாதே. உனது நன்மைக்கே இவற்றை எழுதினேன்.

உனது அருமைத் தோழி.


'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.



★ பெண்களுக்குத் தேவையான நவநாகரிகமான பொருள்களுக்கும்

★ மற்றும் குழந்தைகளின் 'விளையாட்டுச் சாமான்'களுக்கும்

★ "ரேயல்" தலைமுடிகளுக்கு

சிறந்த இடமெனப் பெண்கள் கூறுவது

★

பென்ஸி பலெஸ்

ஒன்றே!

மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

# கருத்தரங்கம்

பொருளாதாரம், அரசியல் முதலான பல்வேறு துறைகள் சம்பந்தமாக மக்களிடையே நிலவிவரும் பலதரப்பட்ட கருத்துக்கள் இப்பகுதியில் இடம் பெறும்.

## அரசியல் உரிமைகளும் தமிழரும் சிங்களத் தலைவர்களை நம்பலாமா?

*சிலாம்பட்டி சி. வை. கண்ணன்*

ஈழநாடு *14. 3. 59* இதழில் ஆர். என். ஆர். "தமிழினத்தின் எதிர்காலம் என்ன?" என்ற தலைப்பில் இலங்கைத் தமிழர்கள் எதிர்காலத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் பலத்திலேதான் சுமுகமாக வாழ முடியும் என்ற கருத்தமைய எழுதியிருந்தார்.

அக் கருத்து இன்றைய சூழ்நிலைக்குப் பொருத்த மற்றது. கடந்த காலத்தில் ஐக்கிய இலங்கையை உருவாக்க வேண்டு மென்ற மனோபாவம் கொண்ட தமிழரிலே சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அதன் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டனர். ஆனல் ஐக்கிய தேசியக் கட்சியோ தனது இறுதிக்காலத்தில் "சிங்களம் மட்டும்" எனும் கொள்கையை ஆதரிக்கும் தீர்மானத்தை களனி மகாநாட்டில் நிறைவேற்றியது.

இதன் பிறகும் தமிழர்களின் நலம் சிங்களருடன் இணைந்த தேசிய ரீதியான கட்சியினுற் கிடைக்கு மெனச் சொல்வதற்கில்லை. அப்படியான ஒற்றுமையில் நல்வாழ்வு கிடைக்குமென நம்பினுல் முடிவில் நாம் ஏமாற்றமே அடைவோம்.

ஆர். என். ஆர். குறிப்பிட்டபடி சமசமாஜக் கட்சியினர் ஆட்சிக்கு வந்து தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கொடுத்தாலும் சிக்கல்கள் தீர்ந்துவிடப் போவதில்லை.

இந்நாட்டின் எதிர்கால சந்ததியினர் — எதிர்காலத்தில் இங்கு தமிழர்கள் வாழ்ந்தார்களா ? என்று ஐயுறும் வண்ணம் இன்றைய அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றிச் சிங்களமயமாக்கி விட முற்பட்டுள்ளது.

இந்தக் குடியேற்றத் திட்டத்தில் சமசமாஜக் கட்சியின் திட்டவட்டமான கொள்கை யாது? அவர்கள் கூறுகிறபடி குடியேற்றத் திட்டங்களிலும், தமிழ்ப் பகுதிகளிலும் சிங்களரும் தமிழரும் கலந்து வாழ்வார்களானல், காலகதியில் இங்கு தமிழர் பலம் குன்றிச் சிங்களரால் சீரணிக்கப்பட்டு விடுவார்கள். இன்றுள்ள பிரதிநிதித்துவம் ஒன்றுகூட இல்லாது போய் விடலாம். அகில இலங்கையிலும் ஒரே சமுதாயம் உருவாகுதல் வேண்டுமெனும் எண்ணம் நிறைவேறுமே தவிர — எமது வழிவந்த மொழியும், கலாச்சாரமும் புதையுண்டுபோம்.

இன்று அமைச்சராக விருக்கும் திரு. இலங்கரத்தின அவர்கள் முற்போக்கு வாதியாக விருந்து 1948-ஆம் ஆண்டில் நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிட்டுத் தமிழர்களின் பக்கபலத்தால் கண்டியில் வாகை சூடியவர். ஆனல் இன்று தமிழ் ஒழிப்பில் அவரே முன்னணியில் இருக்கிருர். இலங்கை இந்தியப் பிரசா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் முக்கிய காரணம் இந்திய வம்சா வளியினர் இலங்கரத்தின போன்ற முற்போக்கு வாதிகளை ஆதரித்ததேயாகும்.

இனி, கல்வி அமைச்சர் தஹநாயக்காவைப் பற்றிக் கவனிப் போம். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்த போது அரசாங்க மொழிப் பிரச்சினை ஒருமுறை எழுந்தது. அப்போது திரு. தஹநாயக்கா "தமிழும் — சிங்களமும் இரு கண்கள்" என்றும் அவற்றைப் பாகுபாடு படுத்தாது ஒரே தன்மையில் மதிக்க வேண்டுமென்றும் பேசியவர். அவரின் இன்றைய நிலை என்ன ?

சமசமாஜிகளின் கண்ணோட்டப்படி சம அந்தஸ்து கேட்டுக் கிளர்ச்சி செய்வது வகுப்பு வாதமாக விருப்பின் 27-2-59 'வீரகேசரி' இதழில் வெளியான செய்தியிற் காணப்படும் சமசமாஜிகளின் மொழிப்பற்று எது ? அச்செய்தி வருமாறு:

"இந்தியருக்கு தோட்டங்களில் முதலிடம் கொடுக்கிருர்கள்".

தொழில் மந்திரிக்கு அகலவத்தை எம். பி. புகார்.

"தமது தொகுதியிலுள்ள சில தோட்டங்களில் தொழிலாளர் வேலைக்கமர்த்தப் படுகையில் இந்தியத் தொழிலாளருக்கு முதலிடம் கொடுக்கப்படுவதாக அகலவத்தை எம். பி. திரு. அனில் முனசிங்க தொழில் மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்னவுக்கு எழுதியிருக்கும் ஒரு கடிதத்தில் கூறியுள்ளார். இந்தியருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தோட்ட நிர்வாகிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அவர் தொழில் மந்திரிக்கு வற்புறுத்தியிருக்கிருர்

"சில தோட்டங்களில் சிங்களத் தொழிலாளரின் இடத்துக்கு இந்தியத் தொழிலாளர் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று திரு. முனசிங்கா தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்."

"திரு. முனசிங்காவின் புகார் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று தொழில் மந்திரி தொழில் இலாகாவுக்கு அறிவித்துள்ளார்."

திரு. முனசிங்காவின் கூற்று எவ் வர்க்கத்தைச் சார்ந்தது? அது வகுப்பு வாதமா?— அன்றி வர்க்கவாதமா? சாதி மத பேதமின்றி, தமிழ் சிங்கள பாகுபாடின்றி இலங்கை இந்தியர் என்ற வேறுபாடுகளைக் களைந்து- வர்க்க ரீதியான தொழிலாளர் அரசாங்கத்தை அமைப்பதே இலட்சியமென்று கூறிவரும் சமசமாசக் கட்சியைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த பாராளுமன்ற அங்கத்தவர் மேற்காட்டிய செய்தியில் நடந்துகொண்டதை கவனிக்கின் அவரது கொள்கை— சமசமாசிகளின் இலட்சியம் என்பவை புலனுகும்.

இந்த நிலையில் தமிழர்களின் எதிர்காலம் சிங்கள முற்போக்கு அரசியல் வாதிகளினுல் சிறக்குமென்று ஆர். என். ஆர் கருதுவாரானல் அது பேதைமையாகும்.

தமிழர்களுக்கு நியாய உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வெளியிடும் வெளிநாட்டு அறிஞர்களுக்குக் கொடுக்கும் மதிப்பை — சம அந்தஸ்து வேண்டுமென்று கூறும் சிங்கள முற்போக்கு அரசியல் வாதிகளுக்குக் கொடுக்கலாமே தவிர, முழு அரசியல் உரிமைகளும் அவர்கள் பெற்றுத் தருவார்களென நம்பி வாளாவிருப்போமாகில் கடந்த காலத்தில் ஏற்பட்ட கதியே நமக்குக் கிடைக்குமென்பது திண்ணம்.

எனவே, தமிழர்களாகிய நாம் நமக்குள்ளிருக்கும் வேறுபாடுகளை மறந்து, எதிர்காலத்திற் சுதந்திரத்துடன் வாழ வேண்டுமென்ற, நோக்கை மனதில் பதித்து நம்மை நாமே ஆளும் சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன்வரவேண்டும்.

## ஜனநாயகம் செத்துவிட்டது!

*ஜகன்*

சமீபத்தில், லண்டன் 'ஒப்சேவர்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகையின் நிருபருக்குப் பேட்டியளித்த இலங்கை முதலமைச்சர் திரு. பண்டாரநாயக்கா, "சோல்பரித் திட்டத்தின் கீழ் நாம் இலங்கையில் ஆங்கில ஆட்சிமுறை ஜனநாயகத்தைக் கைக்கொண்டோம். ஆனல் அது, அந்த ஜனநாயகம் இலங்கையிற் பிழைத்து விட்டது" என்று கூறியுள்ளார்.

'அந்த ஜனநாயகம்' இலங்கையிற் பிழைத்து விட்டதற்கு முதலமைச்சர் என்ன காரணம் கூறினுரோ தெரியாது. ஆனல், முதலமைச்சர் திரு. பண்டாரநாயக்கா சொல்லாத, சொல்ல விரும்பாத ஒரு விஷயத்தை நாம் கூறவேண்டியிருக்கிறது: இலங்கையில் 'அந்த ஜனநாயகம்' பிழைத்து விட்டது என்று கூறுதல் பொருந்தாது. ஜனநாயகம் என்ற ஒன்று பூரணமாய்க் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது என்றே கூற வேண்டும்.

கன்றுக்குட்டி இறந்துவிட, அதன் தோலைக் கொண்டு வைக்கோற் பொம்மை செய்து பசுவை ஏமாற்றுவார்களே, அதே மாதிரித்தான் இலங்கையில் ஜனநாயகத்தின் புறத்தோலினுள்ளே வகுப்பு வாதத்தையும் பொதுஜனப் பாதுகாப்புச் சட்டம் என்பவை போன்ற அடக்குமுறைச் சட்டங்களையும் மறைத்துக் கட்டி, மக்களை ஏமாற்றி, அவர்களிடமிருந்து வாக்குகளைக் கறக்கிருர்கள்.

ஜனநாயகம் செத்துவிட்டது. குழியும் தோண்டிப் புதைத்தாயிற்று. நாம் எல்லாம் அதை எண்ணி எண்ணி அழுகிறோம். மேடைகள் ஏறிப் புலம்புகிறோம். மாநாடுகள் வைத்து மாரடிக்கிறோம். ஆனல் ஜனநாயகம் ஏன் மறைந்தது என்று துளி கூடச் சிந்திப்பதில்லை. ஏன் ?

"எமக்குச் சிந்திக்கச் சக்தியில்லை. சிந்திக்கிற பழக்கமுமில்லை" என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இல்லை என்றுல், இதுவரை ஒருவராவது, ஜனநாயகம் ஏன் மறைந்துபோயிற்று என்று நிதானமாகக் கூறியிருக்க முடியாதா ?

ஜனநாயக வெற்றிவீரன் என்று மார் தட்டிய, 'மக்களால் தெரிவு' செய்யப்பட்ட மக்களின் முதலமைச்சர்' திரு. பண்டாரநாயக்காவே ஜனநாயகம் செத்துவிட்டது என்று கூறிவிட்டார். "ஜனநாயகம் ஏன் மடிந்தது ?" என்று அவர் தன் நெஞ்சைத் தொட்டுக் கேட்கட்டும். பதில் கிடைக்கும்.

மொழி வெறி, இனத்துவேஷம் என்ற வகுப்புவாத விஷத்தினுலேதான் ஜனநாயகம் இறந்துபோயிற்று.

சோல்பெரித் திட்டத்தின் கீழ், *1947*-இல் நடைபெற்ற முதல் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி இந்த வகுப்புவாத அடிப்படையில், முதலாளித்துவக் கொள்கைகளோடு அரசியற்களத்திலே குதித்து வெற்றிகண்டது. அந்தத் தேர்தலின்போது இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியும் ஐ. தே. கட்சியைப் பலமாக ஆதரித்தது. வடமாகாணத்திலே தமிழ்க் காங்கிரஸ் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றது.

அடுத்த தேர்தலின்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தோன்றிற்று, அதுவும் வகுப்பு வாதத்துக்கு இடங்கொடுத்து, வடகீழ் மாகாணங்களிலே வகுப்பு வாதத்தைக் 'காப்பாற்ற' தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும், 'தியாக உணர்ச்சி' யோடு போராடின.

ஜனநாயகத்தின் பேரிலே, வகுப்பு வாதம் வளர்ந்தது;

(10 ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

இரும்புச் சாமான்களுக்கு

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ் வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும் எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

சண்முகம் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: ஆ. சண்முகராசா

222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 697

உங்கள் கார் பற்றறிகளைத் திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்றிங் முதலிய வேலைகளுக்கும் உகந்த இடம்




சுந்தரம்ஸ்

பற்றறி சேவிஸ்

402, கே. கே. எஸ். வீதி : : யாழ்ப்பாணம்

ஈழநாடு

யாழ்ப்பாணம், விளம்பி ஆண்டு பங்குனி மீ 8 உ (21-3-59)

## அவரை அழைக்க வேண்டும்

பாரத நாட்டின் ஜனாதிபதி பாபு இராஜேந்திரப் பிரசாத், இப்போது கிழக்கு ஆசியாவில் கம்போடியா, இந்துசீனம் முதலிய நாடுகளுக்கு விஜயஞ் செய்துள்ளது வெறும் உல்லாச யாத்திரையல்ல. சென்ற ஆண்டில் அவர் ஜப்பான், இந்தோனேஷியா முதலிய நாடுகளுக்குச் சென்றிருந்தார். அந்நியரின் அடிமை ஆட்சியிலே ஆசியா மக்களாகிய நாம் பிரிந்துகிடந்தோம். நம்மிடையே நல்லுறவு ஏற்பட முடியாதிருந்தது இப்பெரும் குறையை நீக்கி, மீண்டும் ஆசியா நாடுகளனைத்தும் நெருங்கிய நட்புக்கொண்டு பரஸ்பர நன்மைக்கான முறையில் வாழச்செய்ய வேண்டும் என்ற நன்னேக்கத்துக்காகவே இராஜேந்திரர் இந்த ஆசிய திக்விஜயம் செய்துவருகின்றார்.

ஆனால், இந்தியாவுக்கு நம் இலங்கை மிகவும் அண்மையிலிருந்தும், அவர் இங்கு இதுவரை வரவில்லை. இது பெருங்குறை. நாம் அழைத்தால்தானே அவர் வருவார்! நேருஜி இங்கு பன்முறை வந்திருந்தாலும் அரசியல் காரணங்களுக்காகவே வந்திருந்தார். அவ் வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டவர் ராஷ்டிரபதி. அவர் விஜயம் செய்வதற்கு விசேஷ வேற்றுமையும் பலனுமுண்டு. இருதேசங்களுக்கும் வேற்றுமைகளைத் தீர்க்கவும் நாட்டிற்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவும் அவர் விஜயம் பெரிதும் உதவுவதாகும்.

நல்லவேளையாக இலங்கையின் பிரதமர் பண்டாரநாயக்காவுக்கும் பாரதப் பிரதமர் நேருஜிக்கும் நெருங்கிய நட்பும் பரஸ்பர மதிப்புமுண்டு. இந்த நட்பு இரு தேசங்களுக்கிடையே துரதிருஷ்டவசமாக வளர்ந்துள்ள பிரச்சனைகள் அன்பு வழியிலே மனிதாபிமானத்துடன் தீரவும் வழி செய்யமுடியும். தப்பெண்ணமும் சுயநலமுமே இப்பிரச்சனைகள் வளரக் காரணமாகும். இவற்றை நீக்கவும், நல்லெண்ணச் சூழ்நிலை வளரவும் ராஷ்டிரபதி ராஜன் பாபுவின் விஜயம் உதவியாக இருக்குமாதலால், அதற்கான ஏற்பாட்டைச் சீக்கிரத்தில் இலங்கைப் பிரதமர் செய்வது இந்தியாவின் அபிமானத்தைப்பெற்று, இலங்கை முன்னேறவும் வழிசெய்வதாக இருக்கும்.

## இலங்கை - சீன வர்த்தக ஒப்பந்தம்

நடப்பதெல்லாம் நன்மைக்கே என்பார்கள். முன்னர் சேர். ஒலிவர் குணதிலக அமைச்சராக இருக்கையில், அமெரிக்காவுக்குக் காவடி தூக்கினர். நமது ரப்பருக்கு நியாயமான விலை கொடுக்கவேண்டுமென்றும், அரிசியையும் நியாயமான விலைக்கு நமக்குத் தரவேண்டுமென்றும் கேட்டார். என்றாலும் அச்சமயம் அமெரிக்க அதிகாரிகள் அனுதாபம்காட்டவில்லை. கை விரித்துவிட்டனர். அதுவும் நல்லதாகவேமுடிந்தது. 'முடியாது' என்று அமெரிக்கா பதில்கூறிய காரணத்தால்தான், சீனத்துடன் இலங்கை லாபகரமான முறையில் வர்த்தக ஒப்பந்தத்தை செய்துகொள்ள முடிந்தது. இதன் பயனாக இங்கு ரப்பர் செய்கைக்கு ஏற்பட்ட நெருக்கடி தீர்ந்ததுடன், அரிசியும் தட்டில்லாமல் மலிவாகக் கிடைக்க வழிபிறந்தது.

இலங்கையிலே பங்கீட்டு அரிசியின் விலையை அரசாங்கம் குறைக்கமுடிந்ததாயின் அதற்கு ஒரு காரணம் இந்த ஒப்பந்தமே வருஷத்திலே நாம் இறக்குமதி செய்யும் 8 லட்சம் தொன் அரிசியில், 4 அல்லது 5 லடசம்தொன்களை, சீனம், பர்மிய அரிசியைவிட குறைந்த விலைக்கு நமக்கு இந்தஒப்பந்தப்படிவிற்கின்றது. நாம் உற்பத்திசெய்யும் 50 ஆயிரம் டன் ஷீட் ரப்பரில் 30 ஆயிரம் தொன்னை சீனம் உத்தரவாதவிலை கொடுத்து வாங்குகிறது. மேற்கு நாடுகளே கதி என்று நம்பியிராமல் நாம் சீனம் முதலிய சமதர்ம நாடுகளுடனும் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள முடிந்ததால், இங்கு ரப்பர் செய்கைக்கும் அரிசி விநியோகத்திற்கும் நெருக்கடி ஏற்படவில்லை. முன்னேறிவரும் சீனத்துடன் வர்த்தக உறவு கொண்டதால், நமக்குப் பலவிதங்களிலும் நன்மை.

இவ்வளவு நன்மை பயக்கிய ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கான பேச்சுகள், இதை நாம் எழுதுகையில் கொழும்பிலே நடக்கின்றன. ஒப்பந்தத்தை முறித்துவிடசில சுயநல வட்டாரங்கள் முயல்வதாகக் கூறப்படுகிறது. இந்தக் கூடாத முயற்சிக்கு இடம் கொடாமல் இந்த வர்த்தக உறவை மேலும் லாபகரமான முறையில் பலப்படுத்தி, இருதேசங்களின் பரஸ்பர நன்மையை வளர்க்க வழி செய்யப்படுமென்பதே பொது மக்களின் ஆவலும் நம்பிக்கையுமாகும்.

## காங்கேசன்துறை துறைமுகம்

காங்கேசன்துறை துறைமுக விருத்திக்காக நாற்பது லட்சம் ரூபாய்க்குமேல், தேசியசேவை போக்குவரத்து அமைச்சு திட்டம் தயாரித்ததாயும், அதை யாழ்ப்பாணப்பகுதி இணைப்புச் சபை அங்கீகரித்துள்ளதாயும் ஒரு செய்தி கூறுகிறது. செய்தி நல்லதுதானென்றாலும், இந்த வேலை ஆரம்பிக்கப்பட்டு, பூர்த்தியடையுமுன் இதைக் குறித்து அவசரப்பட்டு மகிழ்ச்சியடைய முடியாது. இதற்குமுன் திரு. சு. நடேசன் அமைச்சராக இருக்கையில், இதே துறைமுகத்துக்காக அடையாள மான்யமும் பார்லிமெண்டில் அனுமதிக்கப்பட்டது. என்றாலும் எல்லாம் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிட்டது! இலங்கையில் இப்போது அதிக துறைமுக வசதி தேவை என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கலாம். ஆனால் வடமாகாண அபிவிருத்தி என்றால், இதுவரை மாற்றாந்தாய் மனப்பான்மையே காட்டப்பட்டு வந்துள்ளது, இந்தநிலை மாறி காங்கேசன்துறை துறைமுகத்தை முதல்தரமான துறைமுகமாக்கி, வர்த்தகத்துக்கும், பிரயாணிகள் போக்குவரத்துக்கும் அதை அரசாங்கம் இனிக் காலம்தாழ்த்தாமல் திறந்துவிட்டால், துறைமுக நெருக்கடிகள் குறைவதுடன், வடமாகாணப் பொருளாதாரம் உயர்ந்து, அம்மக்களின் இழந்த நம்பிக்கையையும் அரசாங்கம் ஓரளவு பெறக்கூடியதாக இருக்கும்.

## மாலைத்தீவு

மாலைத்தீவு விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கம் காட்டும் மனப்பான்மை மிகவும் துரதிருஷ்டமானதுடன் சாம்ராச்சியத்துக்கு அதுபெரும் தீங்குமாகும். திருக்கோணமலை, கட்டுநாயகா இவ்விடங்களிலிருந்த பிரிட்டிஷ் கடல், விமான, தளங்களை அகற்றவேண்டி ஏற்பட்டபின், இலங்கைக்குத் தென்மேற்கே சுமார் 400 மைல் தூரத்திலுள்ள மாலைத்தீவிலே விமான தளத்தை ஏற்படுத்த பிரிட்டன் ஏற்பாடு செய்தது. பாவம் இராமேச்சுரம் சென்றும் சனீச்சுவரன் விடவில்லை அங்கும் அதற்குத் தொல்லை ஏற்பட்டது. பிரிட்டிஷ் தளம் வருவதால் பெரிய நன்மை என்று எதிர்பார்த்த மாலைத்தீவு மக்களின் வாழ்வு இதனால் சீர்குலைந்தது. அங்கு அதிருப்தியும் அதிகரித்தது.

மாலைத்தீவுக்கு அரசியல் சுதந்தரம் அளித்துவிட்டதாக அறிவித்த பிரிட்டன், அவர்களை நம்பாமல், அவர்களுக்கு உண்மை உரிமைகளை வழங்காமல் தனது சுயநலனையே பாதுகாத்துக்கொள்ள முயன்றது. அந்த சுதந்தரத்தை வெறும் ஏட்டுச் சுதந்தரமாக்க முற்பட்டனர் அது ஒரு சின்னத்தீவுதானே என்ற அலட்சியம்போலும்.

ஆனால் அண்மையிலே இலங்கை, இந்தியா முதலிய சுதந்தர நாடுகள் விழித்தெழுந்துவிட்டவிதமும் சைப்பிரஸ் மக்களுக்கு சுதந்தரம் வழங்க பிரிட்டன் உடன்பட்டதையும் கண்ட மாலைத்தீவு அரசாங்கம், புதிய தைரியம் கொண்டு தங்கள் உரிமைகளுக்காகப் போராட கச்சைகட்டினர். இது பிரிட்டனுக்குப் பிடிக்கவில்லை அங்கு புரட்சிகளைக் கிளப்பி, போட்டி அரசாங்கத்தை ஏற்படுத்தியதுடன், உணவுப்பொருளை நேரடியாக வழங்கவும் முன்வந்தனர். குதிரை கீழே, தள்ளியது மல்லாமல், குழியும் பறித்தது! இதைக்கண்ட மாலைத்தீவு அரசாங்கம், பிரிட்டனுடன், விமான தள ஒப்பந்தம் பற்றி நடத்திவந்த பேச்சுகளையும் முறிததுவிட்டது. இதில் வியப்பில்லை.

பிரிட்டன், இலங்கை, மாலைத்தீவு எல்லாம் ஒரே சாம்ராச்சியக் குடும்பத்திலிருந்தும், அதன் பாதுகாப்புக்கான தளத்துக்கு இடம் கிடைக்காமல் விரட்டப்படுவானேன்? நல்லறிவுடன் இதை பிரிட்டன் சிந்திக்கவேண்டும். ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா முதலிய நாடுகளில் தாண்டவமாடும் வர்ணபேதம், சாம்ராச்சியத்லுள்ள வெள்ளையரல்லாதாரையும் வெகுவாக அவமதிக்ககின்றது. பிரிட்டனில் வர்ணபேதமில்லைத்தான் ஆனல் இந்தத் தளங்கள், ஆஸ்திரேலியா, ஆபிரிக்காவிலுள்ள வர்ணபேதத்தை ஆதரிப்பதாகவே உள்ளன. சாம்ராச்சிய நாடுகளுக்கு இதில் பங்களிக்காமல், பழைய ஏகாதிபத்திய முறையிலேயே காரியங்கள் செய்யப்படுகின்றன. உலகப் போக்கை அனுசரித்து வர்ணவாதம் சம்ராச்சியத்தில் இருக்கப்படாதென்று பிரிட்டன் கண்டிப்பான மனப்பான்மை காட்டுவதுடன், அதில் வெள்ளையரல்லாதாருக்கும் சரிசமமான உரிமை உண்டென்று செய்யும் போதுதான் இந்தச் சங்கடங்கள் நீங்கி, சாம்ராச்சியக் குடும்பம் பலப்படும். அதைவிட்டு மாலைத்தீவை பீரங்கிப் பலத்தால் அடக்கினல், அங்கு அமைக்கும் தளம் உதவிக்குப் பதில் உபத்திரவத்துக்கே காரணமாகும்.

## அமைச்சரின் போட்டி

காலி நகரசபையின் மேயராகவும், அங்கத்தவராகவும் ஸ்ரீ தகநாயக்கா நீண்ட காலம் தொண்டுசெய்திருக்கலாம். ஆனல் அவர் அமைச்சர்பதவி ஏற்றபின், நகரசபை அங்கத்தினர் பதவிக்கான தேர்தலில் போட்டி போடுவது அந்த நகரசபைக்கோ, கல்வி அமைச்சுக்கோ அன்றி அவருக்கோ நல்லதாகாது.

அமைச்சராகிக் கிட்டத்தட்ட மூன்று வருடகாலத்திலும் அவர் தொடர்ந்து அச்சபையில் அங்கம்வகித்து வந்துள்ளார். என்றாலும் சபைக் கூட்டங்களுக்குச் சரிவரச் செல்ல முடியவில்லை. பார்லிமெண்டில் அங்கம் வகிப்பவர்கள், நகரசபை போன்ற ஸ்தலஸ்தாபனங்களில் அங்கம்வகிக்க சட்டப்படி தடையில்லாவிடினும், ஒருவர் இரு கடமைகளையும் சரிவரச் செய்ய முடியாது. பெரிய உத்தியோகத்துக்கு மாற்றப்பட்டவர் பழைய சிறிய பதவியையும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்வது போல் ஆகும் இது.

எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, இனி நகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று செய்துள்ள முடிபு வரவேற்கத்தக்கது. இது மற்றவர்களுக்கு முன்மாதிரியாகும். இங்கிலையில் பொறுப்பான கல்வி அமைச்சர் பதவியை வகிக்கும் ஸ்ரீ தகநாயக்கா காலி நகரசபைக்குப் போட்டியிடுவதும் சவால் விடுவதும் ஜனநாயக வளர்ச்சிக்கு உகந்ததல்ல; அழகுமல்ல.

## பூஜ்யம் 'போஸ்ட்'

**ஸ்ரீ விஜயானந்த தகநாயக்கா,**
**கல்வி மந்திரி,**
**கொழும்பு.**

மந்திரியாரே!

ஆயுபவன்.

இலங்கையிலுள்ள ஆசிரியர்கள் ஒற்றுமையாக இப்போது 'பெரியவெற்றி'யைக் கொண்டாடுகிறார்கள். எல்லாம் தங்கள் சித்தம் அவர்கள் பாக்கியம். பூர்வம் ஒரு பள்ளி ஆசிரியராக இருந்த தாங்கள் ஆசிரியர்களைக் கைவிடுவீர்களா?

ஆனல் எனக்கு ஒரு சந்தேகம். அடுத்தபடி தாங்கள் என்ன 'ஓடர்' போடுவீர்கள்? சாதகமா? பாதகமா?

பூஜ்யம்.

குறிப்பு: தங்கள் சகாவான மரைக்காரரின் போஸ்டில் அனுப்பினல், கடிதம் தங்களுக்குக் கிடைக்குமென்று நிச்சயமில்லை யல்லவா? அதனல் தான் இப்படிப் பகிரங்கமாக எழுத நேரிட்டது. மன்னிக்க வேண்டும்.

—பூஜ்யம்.

* * *

**ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயக்கா,**
**வர்த்தக மந்திரி,**
**கொழும்பு.**

அன்பரே,

நமஸ்காரம்!

மதச்சார்புடன் கூடிய கல்வி அளிக்க வேண்டிய அவசியத்தை நாரம்மலைக் கூட்டத்தில் தாங்கள் சரியாக வற்புறுத்தினீர்கள்.

மதச்சார்பு இல்லாத கல்வியால் தான் படித்தவர்களில் பலர், பொதுமக்களுக்குத் தொல்லையாக கூடாத முறையில் நடக்கிறார்கள் என்றும், மதச்சார்புடன் கூடிய கல்வி கற்ற மாணவன் உலகத்துக்கே முன்மாதிரியாக இருப்பான் என்றும் கூறியிருக்கிறீர்கள்.

ஆனல் எனக்கு ஒரு சின்ன சந்தேகம். கொழும்பிலே மஞ்சள் உடையைத் தரித்து சிலர் தார்ச்சட்டி கோஷ்டிக்குத் தலைமை வகித்து தெருத்தெருவாக எடுத்துச் சென்றதையும், மதத்தின் பெயரால் பல கொடும் செயல்கள் நடப்பதையும் நினைத்தேன். பயமாக இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?

பூஜ்யம்.

* * *

**திரு. ஸ்டான்லி சொய்ஸா,**
**நிதிமந்திரி,**
**கொழும்பு.**

மந்திரியாரே!

நமது கைத்தறிகளை ஆதரிக்க வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறீர்கள். மிகவும்மகிழ்ச்சி.

ஆனல் மன்னிக்க வேண்டும். தாங்களும் தங்கள் வீட்டாரும் கைத்தறித் துணிகளைக் கட்டுவதில்லை என்று கூறுகிறார்களே. உண்மைதானு?

ஊருக்கு உபதேசம் செய்யுமுன், இந்த மாதிரி சந்தேகங்களுக்கு இடமளிக்காமல் சுதேசியைத் தவிர வேறு கட்டுவதில்லையென்று பகிரங்கமாக பிரமாணமெடுத்து, அவ்விதமே நடப்பது அதிக பலன் அளிக்குமென்பதை நான் தங்களுக்குச் சொல்லியா தெரியவேண்டும்.

— பூஜ்யம்.

# முறையான கல்வித்திட்டம் நாட்டுக்கு அவசியம்

சுதந்திரங்கிடைத்த பின்னர் நவமான பல திட்டங்கள் நாட்டில் வகுக்கப்பட்டு வருவதும் அவற்றைப் பற்றிய பிரசாரம் பலமாக நடைபெறுவதும் இன்று சாதாரண விஷயங்களாகிவிட்டன.

இப்படித் திட்டங்கள் போடுவதாற் பயனெதுவுமில்லை; அவற்றைச் செயலில் நிறைவேற்றி வைப்பதே நாட்டின் விருத்திக்கேற்ற செயலாகுமென்பதை வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவின் போது அதன் அதிபர் திரு. கே. ஏ. செல்லையா அவர்கள் தமது அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆண்டுப் பரிசளிப்புவிழா சென்ற 14-3-59 சனிக்கிழமை மாலை நடைபெற்றது. கல்லூரியின் பெருந் தலைவர் வண. எஸ். கே. பங்கர் தலைமை வகித்தார்.

ஒருமுகப்படுத்தும் திட்டங்களை வகுத்து அவற்றை முறையாகக் கையாளாதிருப்பதே அரசினரின் முக்கிய குறைபாடாகும். சமுகம், கல்வி, உள்ளூர் விருத்தி ஆகிய சகல துறைகளிலும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அத்திட்டங்களைப்பற்றித் தேனொழுகப் பேசப்படுகின்றனவேயன்றி செயலளவில் ஒன்றையுங்காணோம் என்பதையும் அதிபர் தமது அறிக்கையிற் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

அரசியல் வாதிகளின் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் முறையிற் கல்வித் திட்டம் அமையாது அதற்குரித்தான சீரிய முறையில் அது கையாளப்படுமாயின் ஐக்கிய இலங்கையை உருவாக்க முடியுமென்ற நம்பிக்கையை யாழ்ப்பாணக் கல்லூரி இழக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## சம்பத்திரிசியார் கல்லூரியில் திருப்பாடுகளின் காட்சி

யூதேயா நாட்டில் அன்று தேவசுதன் பட்ட பாடுகளைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் திவ்விய யேசுவின் திருப்பாடுகளின் காட்சி சம்பத்திரிசியார் கல்லூரியிற் சென்ற 14, 15ஆந் தேதிகளில் நடைபெற்றது, பாவத்தையும் அதனல் சருவேசுரனுக்குச் செய்த துரோகத்தையும் சிந்தித்துத் துக்கப்பட்டுப் பரிகாரம் தேடும் பாஸ்கு காலம் கிறிஸ்தவர்களுக்குத் தவத்தின் காலமாகும். தபசு காலத்தின் மையமாக விழங்கும் திவ்விய யேசுவின் திருப்பாடுகளின் காட்சியை அன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு பரவசநிலையடைந்தனர்.

யேசுநாதராக நடித்தவரின் திறமை பெரிதும் பாராட்டத்தக்கதாகும். அன்னஸ், கைப்பாஸ், ஏரோது என்போரின் நடிப்பும் சிறப்பாக அமைந்தது.

## பத்தாண்டு நிறைவு விழா

பெரிய விளான் கிராம முன்னேற்றச் சங்கத்தின் 10-ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பொருட்காட்சி களியாட்டங்கள் என்பனவும் அங்கு இடம் பெற்றிருந்தன.

இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நடந்த பொருட்காட்சியை யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா திறந்து வைத்தார்.

வண எல். ஏ. சிங்கராயர் ஓ. எம். ஐ அவர்களும் மற்றும் சில பிரமுகர்களும் பேசினர். சங்கத் தலைவர் திரு. சி. அந்தோனிப்பிள்ளையால் நன்றி கூறப்பட்டது. அன்று மாலை வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி திரு. மு. நடராசா பரிசில்களை வழங்கினர்.

# பணியாளர் சத்தியாக்கிரகம் வெற்றிகரமாகத் தீர்ந்தது

யாழ்ப்பாணம்.

வேலை தராது புறக்கணிக்கப்பட்டமைக்குப் பரிகாரம் தேடும் முகமாகச் சத்தியாக்கிரகம் செய்துவந்த யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த சமயோசித பணியாளர்களின் பிரச்சனை திரு. அ. அமிர்தலிங்கம் எம்.பி. யின் தலையீடுகாரணமாக மிகச் சுலபமாகத் தீர்ந்துவிட்டது. அவர்களுக்கு நிரந்தர பதவி கிடைப்பதற்கான மார்க்கமும் இப்போது பிறந்திருப்பதாக அறியப்படுகிறது.

சத்தியாக்கிரகம் பற்றிய செய்தி திரு.அமிர்தலிங்கத்தின் கவனத்திற்குக் காலதாமதமாகவே கொண்டுவரப்பட்டதாம். ஆயினும் அவர் ஸ்தலத்துக்குச் சென்று விபரம் அறிய முயன்றபோது சுகாதார சேவையாளர் சங்க உப காரியதரிசி திரு.எஸ். ஆர்.அருமைநாயகம்விபரம்கொடுக்க மறுத்தாரெனவும் அறியப்படுகிறது.அவர்நடந்துகொண்டவிதம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்குப் பெரும் விசனத்தை உண்டுபண்ணியதெனவும் தெரிகிறது.

திரு. அமிர்தலிங்கம் சுகாதார அமைச்சரிடமும், நிரந்தரக் காரியதரிசியிடமும் தொலைபேசி மூலம் தொடர் பேற்படுத்திப் பேசியதன்விளைவாகாவேஅவர்கள் ஒரு மகாநாடு கூடி ஆலோசித்துப் பிரச்சனையைச் சமரசமாகத் தீர்க்க முன்வந்தனர்.

ஏறத்தாழ 32 தொழிலாளரின் இரண்டுநாள் சத்தியாக்கிரகப் போராட்டம் அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையொன்றை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்துள்ளது.

## யாழ்ப்பாணத்துக்கு குழாய் மூலம் தண்ணீர்

யாழ்ப்பாணத்துக்குக் குழாய் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும் திட்டம் மிக விரைவில் நடைமுறைக்கு வருமென்பது இப்போது முடிவாகிவிட்டது. 135 ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகைய திட்டம் அவசியமென்பதை யாழ்ப்பாண மக்கள் உணர்ந்தனர். எனினும் இப்போதுதான் அது உருவாகும் நிலையில் இருக்கின்றது.

இதற்கென யாழ்ப்பாணம் மாநகரசபை திருநெல்வேலியில் ஒரு காணியை வாங்கிற்று பகிரங்க வேலைப் பகுதியினர் இக்காணியைப்பொறுப்பேற்று வேலையையும் ஆரம்பித்துவிட்டனர் இத்துறையில் யாழ்ப்பாண மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா அவர்கள் அமைச்சர்மாரைச் சந்தித்துத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சகல முயற்சிகளிலும் கவனஞ்செலுத்திவந்தார்.

# பலாலியிற் கொந்தளிப்பு பொலிஸ் நடவடிக்கை

நமது நிருபர்

யாழ்ப்பாணம்.

மறைந்துவரும் சாதிச்சிக்கல் மீண்டும் தலைதூக்கும் முறையில் சமீபகாலமாகப் பலாலியில் சம்பவங்கள் நிகழ்ந்துவருகின்றன. இவற்றால் உண்டான கொந்ளிப்பு அப்பகுதிமக்களைப் பீதிக்குள்ளாக்கியிருக்கிறது.

பல நோக்குக் கூட்டுறவு சங்க நிர்வாக சபைத் தேர்தல் மூலம் இரு பகுதியினருக்குமிடையில் ஏற்பட்ட சிறு சச்சரவு பெருமளவுக்கு இப்போது வளர்ந்துவிட்டது. அது வேளாளர், கோவியர் ஆகிய இரு வகுப்பினருக்குமிடையிலும் பகைமையை நிரந்தரமாக்கிவிட்டது.

### அசம்பாவிதங்கள்

ஒரு பகுதியினரின் பயிர்களை இன்னெரு பகுதியார் நாசஞ் செய்வது காணிகளிலிருந்துவெளியேற்றுதல், கைகலப்பு முதலான அசம்பாவித சம்பவங்கள் சில மாதங்களுக்கு முன் நடைபெற்றன. காங்கேசன்துறைப் பொலிசார் தலையிட்டுக் குழப்பக்காரரை எச்சரித்தது மூலம் சிறிதுகாலம் அமைதிநிலவியது. சமரசம் ஏற்பட்டு விட்டதெனக் கருதப்பட்ட இரண்டொரு வாரங்களுக்கிடையிலேயே துப்பாக்கிப் பிரயோகமொன்று நடந்து மீண்டும் அமைதியைக் கெடுத்தது. அதிலிருந்து ஆரம்பமான புகைச்சல் இவ்வாரம் வெங்காயம் அறுவடை செய்யக் கூலிகளை அமர்த்துதல், சாவு வீட்டிற்கு மேளம் பிடிப்பது ஆகியவற்றோடு சேர்ந்து பெருநெருப்பாக மூண்டுவிட்டது.

எறிவெடியெனச் சொல்லப்படும் உள் நாட்டு 'வெடிகுண்டு'கள் கூடவெடித்தன.

### மக்கள் திகில்

இச்சம்பவங்களின்விளைவாக அப்பகுதிமக்கள் வெளியே தலைகாட்ட முடியாத நிலையில் திகிலடைந்துள்ளனர். எச்சமயத்திலும் எதுவும் நிகழலாமென எதிர்பார்க்கப்படுகிறது. குழப்பத்தை அடக்குவதில் ஈடுபட்டுள்ள போலிசார் இப்போது ஆயுதபாணிகளாக நடமாடிவருகின்றனர்.

### வட்டுக்கோட்டையில்

சமீபகாலத்தில்வட்டுக்கோட்டைப் பகுதியில் இருபகுதியினருக்கிடையில் ஏற்பட்ட குழப்பத்தை முளையிலே கிள்ளிவிடச் சங்கானைப் போலிசார் தீவிர நடவடிக்கையொன்றைக் கையாண்டனர். இரு கோஷ்டிகளையும் நீதி மன்றத்திற் கொண்டுபோய் நிறுத்துவது மூலம் பரிகாரம் தேடினர். அதேபோலப் பலாலி விவகாரத்திலும் நடப்பது அமைதிக்கிடமளிக்குமெனக்கருதப்படுகிறது.

### மற்ரெரு தீ

கடந்த சனிக்கிழமை இரவு மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை தீக்கிரையானமைக்குக் காரணம் சாதிக்குமுறலே என்று கூறப்படுகிறது.

## வானொலி ஒலிப்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இடங்களில் ஒலிப்பதிவு நிலையங்களையாவது ஏற்படுத்தினல், கலைஞர்களின் கஷ்டம் நீங்குவதுடன் அரசாங்கத்துக்கும் செலவு மிச்சமாகும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு தனி வானொலி நிலையம் ஏற்படுத்தும் யோசனையைச் சில காரணங்களால் இப்போதைய அரசாங்கம் நிறைவேற்றத் தயங்கினலும், அங்கு ஒலிப்பதிவு நிலையத்தையாவது ஏற்படுத்துவது அரசாங்கம் உள்ளிட்டுப் பலருக்கும் நன்மையாகும். அதிக இளைஞர்கள் பங்குபற்றி வானொலி சிறக்கவும் வாய்ப்பாக இருக்கும் என்றும் வானொலி அமைச்சர் இவ் விஷயத்தை உடனே கவனிக்க வேண்டுமென்றும் பலத்த அபிப்பிராயம் சிறப்பாகத் தூர இடங்களில் உள்ள கலைஞர்களிடையே நிலவுகிறது. இதற்குச் செலவும் அதிகமாகத் தேவையில்லை.

# வெங்காய இறக்குமதி கட்டுப்பாடு அவசியம்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாஜ அதிகாரசபையின் உபதலைவர் திரு. எம் கந்தசாமி, யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதார முன்னேற்றம் சம்பந்தமாகத் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:

எங்கள் கமக்காரரில் அநேகர் வெங்காயச் சாகுபடியைத்தான் நம்பி வாழ்கின்றனர். வேறு நாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் வெங்காயத்தின் சத்துப் பொருள்கள் குறைவாயிருப்பதை அதிகாரிகள் பிரசார மூலம் பொதுமக்களுக்கு வெளியிடவேண்டும்.

மேலும், சில போகங்களின் போது தேவைக்கு மேலதிகமான யாழ்ப்பாண வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறதென்ற பிழையான எண்ணம் மக்களிடையே நிலவுகிறது. வேறு தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யபபடும் தரம் குன்றிய வெங்காயத்தின் தொகை அமோகமாயிருப்பதால்தான் இந்தத் தப்பபிப்பிராயம் பரவுகிறது. முற்றிலும் இறக்குமதியைத் தடைசெய்வது சாத்தியப் படாமலிருந்தால், அதன் தொகையை மட்டுப்படுத்தல் அவசியம்போலத் தெரிகிறது. இதை அரசாங்கம் நன்கு உணரவேண்டும்.

இவ்விதமே நம்நாட்டில் உற்பத்தி செய்ய, அல்லது தயாரிக்கக் கூடிய பொருள்களை அதிகமதிகமாய் அன்னிய தேசங்களிலிருந்து வரவழைக்கும் தீய பழக்கத்தின் நேரடியான விளைவாய்ப் பெரும் தொகையான பணம் வருடாவருடம் இலங்கையிலிருந்து அந்தத் தேசங்களுக்குப் போகும் நிர்ப்பந்தம் நிலவுகிறது.

இன்னுமொரு விஷயத்தில் நாம் கவனஞ் செலுத்தவேண்டும். பொது மக்கள் விருப்புடன் சுதேசிப் பொருள்களை உபயோகிக்க வேண்டுமாயின், அந்த முன்மாதிரியிற் செல்வம் படைத்த, உயர் பதவிகள் வகிக்கும் பிரமுகர்கள் ஈடுபடுவதின் அவசியத்தையும் வற்புறுத்த விரும்புகிறேன்.

# தமிழாசிரியர் சங்கக் கூட்டம் ஒழுங்கற்றதென ஆட்சேபம்

நமது நிருபர்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்திலிருந்து கிளம்பிய எதிரொலி மாற்றுச் சங்கம் ஒன்றை நிறுவுவதுபற்றி ஆலோசிக்குமளவுக்கு வலுப்பெற்றுவிட்டது.அந்தக் கூட்டம் ஒழுங்கற்றதென ஆட்சேபித்திருக்கும் ஆசிரியர் கோஷ்டியொன்று கூட்டத்தில் நிகழ்ந்த ஊழல்கள்பற்றி விவாதிக்க மற்ரெரு பொதுக் கூட்டத்தை நடத்துமாறு உடனடியாகக் கேட்டிருந்தது. இதுவரை பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்படவில்லையென ஆத்திரப்படும் அவர்கள் மேற்கொண்டு கையாளவேண்டிய நடவடிக்கைகள்பற்றித் தீவிர ஆலோசனை செய்துவருகின்றனர்.

அவர்கள் தமது முறைப்பாட்டைப் பிரதேச தலைமைத் தாபனமாகிய வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துக்கும், தாய்ச் சங்கமான அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துக்கும் அனுப்பிவைத்திருந்தனர். வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் இவ் விவகாரம்குறித்து எழுத்துமூலம் விளக்கம் கோரியதெனினும். அதனைத் தர யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கம் மறுத்துவிட்டதாம். மேற்கொண்டு நிலைமையைப் பரிசீலனை செய்வதில் அச் சங்க நிர்வாகிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

கூட்டம் ஒழுங்கற்றதென ஆட்சேபிப்பவர்களில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. இ. க. தியாகராசாவும் ஒருவராவர். அவர் யாழ்ப்பாணச் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களில் ஒருவராக இம்முறை தெரிவு செய்யப்படவில்லை. தேர்தலின்போது அவரது பெயரை ஒருவர் பிரேரித்தாராயினும் அப்போது கூட்டத்தில் அவர் இருக்கவில்லை என்ற காரணத்தால் பிரேரணையைத் திருப்பிப் பெற்றுக் கொண்டார்.

# பூமிசம்பந்தப்பட்ட உண்மைகள்
## சர்வதேச புவிப்பௌதிக ஆண்டின் சாதனை

[யாழ்ப்பாண ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் கிளை நூல்நிலைய மன்றத்தில் இலங்கைப் பல்கலைக்கழக புல்பிரைட் பௌதிகவியல் விரிவுரையாளராகிய டாக்டர் லியோ பகெர்லி 16-3-59 ல் ஆற்றிய விரிவுரையின் சாரம்.]

1-7-57 ல் ஆரம்பமாகி 31-12-58 ல் உத்தியோக பூர்வமாக முடிவடைந்த புவிப்பௌதிக ஆண்டு காலத்தில் 64 தேசங்களைச் சேர்ந்த 8,000 விஞ்ஞானிகள்வரை ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தனர். இன்னும் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளைக் குறித்து ஆராய்ச்சிகள் நடந்தவண்ணமிருக்கின்றன. இதுவே உலகில் இதுவரை சர்வதேசமுறையிற் பூமி சம்பந்தப்பட்ட உண்மைகளை அறிவதற்குக் கூட்டாக விஞ்ஞானிகள் திட்டமிட்டு மிகப்பெரிய அளவிற்செய்த முயற்சியாகும்:

### புவியீர்ப்புச் சக்தி

இடத்துக்கிடம் புவியீர்ப்புச் சக்தி வேறுபாட்டளவுகள் கணிக்கப்பட்டிருக்கின்றன. வேறுபாட்டிற்குரிய காரணங்களுள் ஒன்று சமுத்திர நீரின் வற்றுப்பெருக்கு எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நமக்குத்தெரிந்துள்ள நெடுங்கோட்டு அகலக் கோட்டளவுகள் இடத்துக்கிடம் சரியாகக் கணிக்கப் பட்டிருக்கின்றனவா எனப் பரிசோதனைகள் நடைபெற்றிருக்கின்றன. அவதானிக்கப்பட்டுள்ள தூர வித்தியாசங்கள் கண்ட நகர்வு கோட்பாட்டை (Theory of continental Drift) நிரூபிக்கின்றனவா என்பதைப்பற்றித் திடமாகக் கூறமுடியாமல் இருக்கின்றது. இதற்கு மீண்டும் ஆராய்ச்சிகள் தேவை.

### ஒரு பெரிய இயந்திரம்

பூமியைச் சூழ்ந்திருக்கும் வாயுமண்டலம் (Atmosphere) ஒரு பெரிய இயந்திரம்போல் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதிலேற்படும் மாற்றங்களுக்கும், அசைவுகளுக்கும், காட்சிகளுக்கும் உரிய காரணங்கள் குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. சமுத்திர நீரோட்டங்களும் அவற்றின் வேகம் குறித்தும் நடைபெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து சமுத்திரத்திலுள்ள சில பள்ளங்களில் நீரடைந்து தங்கிவிடுகின்றது எனக் கண்டுபிடித்துள்ளனர்.

காற்றிலடங்கியுள்ள வாயுக்களின் அளவுகள் வேறுபடுகின்றனவாஎன ஆராயப்பட்டுச் சமுத்திரம் உட்கொள்ளும் கரியமில வாயுவின் (Carbon-dioxide) அளவு அதிகரிக்கின்றது என மதிப்பிடப் பட்டிருக்கின்றது.

### செய்மதிகள்

செய்மதிகள் மூலமும் 'ரொக்கெட்டு'கள் மூலமும் வாயு மண்டல அமைப்புப் பற்றியும் பரந்த வானவெளியின் நிலைமைகள் பற்றியும் விபரங்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. மத்திய கோட்டில் காற்றின் அடர்த்தி துருவத்திலுள்ள காற்றின் அடர்த்தியிலும் பார்க்க அதிகமானதாக இருக்கின்றது. 250 மைல் உயரத்தில் இத் தன்மை நேர்மாருக இருக்கின்றதென ஆராய்ச்சிகளிலிருந்து தெளிவாகியிருக்கின்றது. 500க்கு அதிகமான 'ரொக்கெட்டு'கள் அனுப்பி இவ்விபரங்கள் அறிந்துகொள்ள முடிந்தது.

சூரியனிற் தோன்றும் கரும் புள்ளிகள் அயன் மண்டலம் (Ionosphere) இவற்ருல் வானொலி அலைகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனஎன்பவை குறித்து ஆராய்ச்சிகள் நிகழ்த்தப் பட்டுள்ளன.

இக்காலத்தில் வட துருவ வழியாக நீர்மூழ்கிப் பிரயாணமும் அன்டாட்டிக் கண்டம் வழியாகத் தரை மார்க்கமாகவும் முதன் முதலாக நிகழ்ந்தன. தென் துருவத்திற் பனிக்கட்டியின் கன அளவு, வெப்பநிலை பற்றிய விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. சிலவிடங்களிற் பனிக் கட்டியின் ஆழம் 9,600 அடியென்றும் 11-5-57 ல் வெப்பநிலை —104° F ஆக இருந்ததெனவும் கணக்கிடப் பட்டுள்ளது.

### கொஸ்மிக் கதிர்

இலங்கைப் பல்கலைக் கழகத்திற் கொஸ்மிக் கதிரியக்கம் குறித்தும் அயன் மண்டலம் குறித்தும் ஆராய்ச்சிகள் நடத்தப் பட்டுள்ளன. இலங்கை அரசாங்க வானிலை ஆராய்ச்சி நிலையத்தினர் வானிலைகுறித்து விபரங்கள் சேகரித்துள்ளனர். இலங்கையும் சிறிதளவில் புவிப்பௌதிக ஆராய்ச்சியிற் கலந்துகொண்டு அரிய தொண்டாற்றியிருக்கின்றது.

ஆகவே மனிதன் இக்காலத்தில் எல்லாவற்றையும் அளந்து அறிபவன் ஆகிவிட்டான் என்றே கூறவேண்டும்.

---

# ஜனநாயகம்செத்...

(7 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வகுப்பு வாதம் வென்றது; வகுப்பு வாதம் தலைதூக்கியது, வகுப்பு வாதம் மக்களைக் கொன்று குவித்தது. சர்வம் வகுப்பு வாத மயம்!

எனினும் வகுப்பு வாதம் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம். "வகுப்பு வாதம் வகுப்புவாதத்தையே வளர்க்கும்" என்ற உண்மைக்கு எடுத்துக் காட்டாய், இன்று இலங்கையிற் பல கட்சிகள் உள.

இந்த நிலையில், வகுப்புவாதங்களின் பிடியுள் வகுப்புவாத வெறிகொண்டு இலங்கைமுழுவதும் ஏற்பட்டிருக்கும் அவல நிலையில், சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் ஓர் உண்மை புலனுகும்.

"உலகம் முழுவதும், சரித்திர காலம் முதல் இன்றுவரை, மக்களிடையே — சமூகங்களிடையே — நாடுகளிடையே ஏற்பட்ட சிக்கல்களை வகுப்புவாதம் தீர்த்து வைக்கவில்லை; அதனல் தீர்க்கவும் முடியாது"

இந்தச் சந்தர்ப்பத்தில், வகுப்புவாதம் சிக்கல்களை அதிகரித்துப் பெருகச் செய்யுமே தவிர, அதில் ஒன்றைத்தானும் தீர்க்கமாட்டாது என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். இந்த உண்மையை நாம் அநுபவரீதியாகக் கடந்த ஆண்டில் நன்ருகக் கண்டோம்.

இவற்றிலிருந்து வகுப்புவாதம் ஆலகால விஷத்தினும் கொடியது என்பதை நாம் உணரவேண்டும்.

அப்படியானல் நமது உரிமைகள்......?

அதையிட்டுத்தான் நாம் சிந்திக்க வேண்டும்; வெறுமனே உணர்ச்சி வசப்படுவதில் அர்த்தமில்லை. எமது சிக்கல்களை நிரந்தரமாகத் தீர்த்து வைத்து நாட்டின் சுபிட்சத்துக்கு அடிகோலும் வழி வகைகளை, அரசியல் முறைகளை நாம் ஆராயவேண்டும்.

நிதானமான சிந்தனை எம்மை அழிவுப் பாதையினின்றும் மீட்டு, நல்வழி நடத்தும்.

---

# சென்ற வாரத்தில்

### சனி 14

இலங்கையில் சென்ற 10 மாதகாலமாக இருந்துவந்த அவசரகால நெருக்கடி பிரகடனம் அகற்றப்பட்டது.

மாலைத்தீவில் புரட்சி; மூன்று தீவுகள் சேர்ந்து 'ஐக்கிய சுயாதீவ்' எனும் புதிய அரசாங்கத்தை நிறுவியுள்ளது.

இந்திய ஜனதிபதி பாபு இராஜேந்திர பிரசாத் இந்தோசீனத்தில் 10 நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்ய கல்கத்தாவிலிருந்து புறப்பட்டார்.

வருடத்தில் 84500 சைக்கிள்களை உற்பத்தி செய்யக்கூடிய 19 சிறிய தொழிற்சாலைத் திட்டங்களை இந்திய அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இந்தியாவிலுள்ள பழைய அந்நிய ஆட்சியாளரின் விரும்பத் தகாத சிலைகளை அகற்றிவிடுவதுபற்றி ஆலோசித்து வருவதாயும் கேட்பவருக்கு அவை இனமாக வழங்கப்படுமென்வும், எஞ்சிய சிலைகளை, தேசிய பொருட்காட்சிச்சாலை கட்டியதும் அங்கு வைக்கப்படுமெனவும், லோகசபையில் மந்திரி தத்தர் அறிவித்தார்.

பிரென்சு காமரூன்ஸ் (மேற்கு ஆபிரிக்க) மக்களுக்கு 1960ஆம் வருடம் ஜனவரியில் சுதந்திரம் அளிப்பதென்று ஐக்கியநாட்டு டிரஸ்ட் கமிட்டி தீர்மானித்தது.

இந்தியாவுக்கும் ஸெக்கோஸ்லேவியாவுக்கும் புதிய வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இதன்படி அடுத்த 12 மாதங்களுக்கு 11 கோடி மதிப்புள்ள இந்திய சரக்குக்களை வாங்குவதுடன் அதே மதிப்புள்ள ஸெக் சரக்குக்களை இந்தியாவுக்கு அனுப்பிவைக்கும்.

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக வந்த 43 பேர்களை ஆவரங்காலில் இலங்கைப் பொலிசார் கைதுசெய்தனர்.

18 வயதடைந்தவர்களுக்கு வாக்குரிமை அளிப்பதென்ற புதிய தேர்தல் திருத்த மசோதா இலங்கை ஜனப்பிரதிநிதிகள் சபையில் இரண்டாம் முறை நிறைவேறியது.

### ஞாயிறு 15

வடக்குறி நைஜீயாவுக்கு சுயாட்சி அளிக்கப்பட்டது.

ஈராக்கின் வடபகுதியிலுள்ள மோதலில் ஏற்பட்ட புரட்சி அடக்கப்பட்டு 2000 பேர் கொல்லப்பட்டனர். பலருக்குக்காயம்.

நியாயமான அளவு தமிழ் உபயோக மசோதாவை எதிர்த்ததிற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து திரு. பெலிகமன வெளியேற்றப்பட்டார். கட்சி மாநாட்டை வருகிற மே மாதம் குருநாகலில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

அனுரதபுரம்—புத்தளம் வீதியில் 20 வயதுள்ள ஓர் அழகி பயங்கர முறையில் கொலைசெய்யப்பட்டார். உடல்மீது மோட்டார் பலமுறை செலுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் திருத்த மசோதாவைப் பொதுக் கூட்டத்தில் எதிர்த்துப் பேசிய நான்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களும் தாங்கள் தொழிற்சங்க நிர்வாகிகள் என்ற முறையிலேயே பேசியதாகக் கூறி அரசாங்கத்துக்குப் பதில் அனுப்பியுள்ளனர்.

விவசாயம் மட்டுமன்றி கைத்தொழில்களிலும்கூட கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நடத்தவேண்டுமென்று நேருஜி புது டில்லியில் ஒரு கூட்டத்தில் கூறினர்.

பஸிபிக் சமுத்திரத்திலுள்ள 'ஹாவாய்' தீவுகளை அமெரிக்கரின் 50 வது புதிய மாகாணமாக அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரித்து, அமெரிக்க தேசியக் கொடியில் 50 வது புதிய நட்சத்திரத்தைப் பொறிப்பதென்றும் தீர்மானித்தனர்.

இந்தோனிஸியாவிலே டச்சுக்காரருக்குச் சொந்தமான 227 தேயிலை,றப்பர் தோட்டங்களைத் தேசவுடைமை ஆக்கியுள்ளனர். சென்ற மாதம் 38 டச்சு புகையிலை தோட்டங்கள் இவ்விதமே தேசியமயமாயின.

சென்ற 18 மாதகாலமாக சென்னையில் முகாம் செய்து, இந்து தர்ம பிரசாரம் செய்த காஞ்சி காமகோடி ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள், நகரிலிருந்து காஞ்சிபுரத்திற்குத் திரும்பினர்.

### திங்கள் 16

ஒரு தொழிற்சாலையிலே பல போட்டி யூனியன்கள் இருக்கப்படாதென்றும், இப் பிளவுகள் தொழிலாளரின் நன்மைக்கு மாருகுமென்றும் இதைத் தடுக்கச் சட்டமியற்ற வேண்டுமென்றும் சென்னை ராஜ்ய சபையில் வற்புறுத்தப்பட்டது.

தடை உத்தரவை மீறிப் பஞ்சாப்பில் பிரவேசித்த கொம்யூனிஸ்ட் தலைவர் ஏ. கே. கோபாலனைக் கைதுசெய்து, டில்லிக்குக் கொணர்ந்து விடுதலை செய்தனர்.

இலங்கையிற் பல இடங்களிலும் கடும் வரட்சி. பல ஆஸ்பத்திரிகளிருந்து நோயாளர், தங்கள் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

முதலிக்குளம் (மொரவேவை) குடியேற்றத் திட்டத்திலே, திருக்கோணமலை தளத்தில் வேலைபார்த்த முன்னுள் தொழிலாளருக்கே முதலிடம் அளிப்பதாக, நிலமந்திரி சமஷ்டிக் கட்சி தூதுக் கோஷ்டிக்கு வாக்குறுதி அளித்தார். 500 பேருக்கு நிலம் அளிக்கப்படும்.

இலங்கை ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுக்க பள்ளிக்கூட முகாமைக்காரருக்கு அதிகாரமளித்த சுற்றறிக்கையை ஆசிரியர்கள் ஏகோபித்து எதிர்த்ததால், கல்வி அமைச்சர் தகநாயக்கா அதைத்திருப்பிப் பெற்றுக்கொண்டார்.

இஸ்ரேலிலிருந்து இலங்கைக்கு சிமிந்தியும், உரமும் ஏற்றிவந்த கப்பலை எகிப்து அரசாங்கம் மறித்து. அதிலிருந்த சரக்குக்களை இறக்கிக் கொண்டது. இலங்கை ஆட்சேபித்தும், எகிப்து அனுமதிக்கவில்லை.

சீன—இலங்கை வர்த்தகப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம். வர்த்தகத்தை மேலும் விஸ்தரிக்க யோசனைகள் நடைபெறுகின்றன.

பார்லிமெண்டில் மலைநாட்டுத் தமிழருக்கு பிரதிநிதித்துவ உரிமையை அளிக்க வேண்டுமென்று தொகுதி நிர்ணய சபைமுன் வற்புறுத்த ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இ. ஜ. காங்கிரஸ் இவற்றின் மத்திய சபை தீர்மானித்தது.

களனியா தோட்டத்தில் 8 நாட்களாக நடந்து வந்த வேலைநிறுத்தத்தில் சமரசம் ஏற்பட்டு வேலை மீண்டும் ஆரம்பமாயிற்று.

### செவ்வாய் 17

ஆப்பிரிக்காவைச் சேர்ந்த நியாஸாலந்தில் இராணுவ போலீஸ் சுட்டதில் ஒரு ஆபிரிக்கர் கொல்லப்பட்டார். இருவருக்குக் காயம். 79 ஆபிரிக்கர் கைது செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் திகதியிலும், தமிழர் திருவிழாக் கொண்டாடுவதென்று யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நோய்வாய்ப் பட்டிருந்த அமெரிக்க மந்திரி டல்லஸ் குணமடைந்து வருகிருர்.

கொழும்பு வல்லரசுகளின் (ஆசிய, ஆபிரிக்க) பொருளாதார மகாநாட்டை கொழும்பில் நடத்த பிரதமர் பண்டாரநாயக்கா முயற்சி எடுத்து 35 நாடுகளைக் கேட்டதில் இதுவரை இந்தியாவுள்ளிட்டு 25 நாடுகள் ஆதரித்துள்ளன. மே மாதம் கொழும்பில் இம்மகாநாடு கூடலாம்.

இம்மாதம் 23-ந் திகதி பார்லிமெண்டில், தலைவர் எச். எம். இஸ்மாயில் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்படும்.

உலகில் வறுமையை ஒழிக்க 1000 கோடி டாலர் அமெரிக்கா உதவ வேண்டுமென்றும், கம்யூனிஸத்தைவிட ஏழ்மைதான் பேரபாயமானதென்றும் இந்திய தூதர் சக்ளா போஸ்டன் சர்வகலாசாலையில் கூறினர்.

### புதன் 18

பாகிஸ்தானுடன் அமெரிக்கா செய்து கொண்டுள்ள புதிய இராணுவ ஒப்பந்தம், சமரசத்துக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளதாக லோக சபையில் நேருஜி தெரிவித்தார்.

ஜெர்மனியைப் பற்றி ரஷியாவுடன் "உச்சிப் பேச்சு"கள் நடத்த அமெரிக்கா தயார் என்று ஜனதிபதி ஐஸனோவர் ரேடியோ மூலம் பேசுகையில் அறிவித்தார்.

ஈராக்கை நஸார் இணைத்துக்கொள்ள விரும்புவதாயும், இதுவே ஐக்கிய அரபு குடியரசின் நோக்கமென்றும், ஈராக்கும் எகிப்தும் சமரசமாய் போகவேண்டுமென்றும், நாஸரின் கம்யூனிஸ எதிர்ப்பு வருந்தத்தக்கதென்றும் குருஷேவ் தெரிவித்தார். ஈராக் அரசாங்கத்துக்கு ரஷ்யா உதவி அளிக்கும் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

மாலைத்தீவு பிரிட்டிஷ்விமானதளம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அல்லவென்று நேருஜி லோக சபையில் மறுத்தார். மாலைத்தீவு ஆட்சேபித்தும், அமெரிக்கா 'மனிதாபிமானத்துக்காக' உணவுப் பொருள்களை அங்கு அனுப்பி வைக்கிறது!

### வியாழன் 19

இலங்கையை மூன்று இராணுவப் பிரிவுகளாக்குவதென்றும், வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு பிரிவிலிருக்குமென்றும், குழப்ப நிலைமையை சமாளிக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் லண்டனிலிருந்து விமானமூலம் அமெரிக்காவுக்குப் புறப்பட்டார்.

அமெரிக்க ஜனதிபதி ஐஸனேவர், "உச்சி மகாநாட்டுக்குத் தயார்" என்று வெளியிட்ட அறிக்கையை பிரிட்டிஷ் அதிகாரிகளும், மாஸ்கோ ரேடியோவும் வரவேற்றுள்ளனர்.

கம்போடியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இந்திய ஜனதிபதி இராஜேந்திரபாபு, சைகோனுக்குப் புறப்பட்டுச் சென்ருர்.


"ரேயல்" தலைமுடிகளுக்கும் மற்றும் பெண்கள் விரும்பும் கவர்ச்சிகரமான நாகரிகமான பல வித பொருள்களுக்கும் சிறந்த இடம்

**பென்ஸி பலெஸ்**

மெயின் வீதி : யாழ்ப்பாணம்

# சிறுவர் பகுதி

*சீனத்துச் சிறுகதை*

## மந்திரத் தூரிகை

[தமிழாக்கம்: **சரோஜினிதேவி** நடராசா ப. எ. 39]

— 4 —

ஈற்றில் அரசன் அந்த மந்திரத் தூரிகையால் தனக்கு ஒரு பலனும் இல்லையெனக் கண்டு மா-லியாங்கை விடுதலைசெய்து அன்பான மொழிகளாலும், பொன், தங்கம் முதலியவற்ருலும் அவனை மயக்கி ஓர் அரச குமாரியையும் அவனுக்கு மணம் முடித்துவைப்பதாக வாக்குக் கூறினுன். ஆனல் மா-லியாங்கோ முன்பே ஒரு திட்டம் வகுத்திருந்தான். பகிரங்கமாகத் தான் திருமணத்திற்குச் சம்மதிப்பதாகக் காட்டிக்கொண்டான். இதனல் அரசனும் மனமகிழ்ந்து மாயத் தூரிகையை அவனிடம் திருப்பிக் கொடுத்தான். "மா-லியாங் ஒரு மலையை வரைந்தானேயானல் அதிலிருந்து கொடிய மிருகங்கள் வெளிப்படும் ஆகவே முதலில் கடலை வரையட்டும்" எனத் தனக்குள் எண்ணிய சக்கரவர்த்தி முதலிற் கடலை வரையும்படி கூறினன்.

அடுத்த கணம் மா-லியாங் தனது மாயக்கோலாற் கடலை வரைந்தான். சக்கரவர்த்தியின் கண் எதிரில், பரந்த எல்லையற்ற கடல் காட்சிதந்தது. களங்கமின்றி நிர்மலமாக இருந்த கடலின் மேற்பரப்பு மிகப்பெரிய நிலைக்கண்ணடியை ஒத்திருந்தது.

"எங்கே இதில் மீன் ஒன்றையும் காணவில்லையே" எனச் சக்கரவர்த்தி நீலக்கடலை நோக்கியவாறு கேட்டார். உடனே மா-லியாங் தனது மந்திரத் தூரிகையால் சில புள்ளிகள் வரைந்தான். மறுகணம் வானவில்லில் உள்ள நிறங்களில் மீன்கள் பல தோன்றின. அவை நீந்திக் கடலில் வெகு தூரம் செல்வதை ஆச்சரியத்துடன் நோக்கினர் சக்கரவர்த்தி. மா-லியாங்கைப் பார்த்து "விரைவில் எனக்கொரு கப்பல் வரைந்துதா. நான் கடலில் பிரயாணம் செய்ய விரும்புகிறேன். அத்தோடு அந்த மீன்கள் அதிக தூரம் சென்றுவிட்டன. அவற்றின் அழகை நான் ரசிக்க வேண்டும்" எனத் தூண்டினர். உடனே மா-லியாங் பிரமாண்டமான கப்பல் ஒன்றை உருவாக்கினன். அதில் சக்கரவர்த்தி, அவருடைய குடும்பத்தினர், மந்திரிமார், உத்தியோகத்தர்கள் முதலியோர் ஏறினர்கள். கப்பல் சிறிது தூரம் சென்றதும் காற்று வீசியது. கடலில் சிற்றலைகள் கிளம்பின.

இருந்தும் கப்பலின் வேகம் குறைந்திருப்பதைக் கண்ட சக்கரவர்த்தி கப்பலின் மேற்தளத்தில் இருந்துகொண்டே, "காற்றுப் பலமாக வீசட்டும்" எனக் கத்தினர்.

மா-லியாங் மாயத் தூரிகையினல் சில கோடுகள் வரைந்ததும் காற்று உக்கிரமாக வீசியது. கடலில் பேரலைகள் தோன்றின. கப்பலும் நடுக்கடலுக்குத் தள்ளப்பட்டது. மா-லியாங் மேலும் சில கோடுகள் வரைந்தான். அடுத்த கணம் புயல் வீசிக் கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது.

"காற்றின் வேகம் தணியட்டும்" எனப் பெருங்குரல் கொடுத்துச் சொன்னர் சக்கரவர்த்தி. ஆனல் மா-லியாங் அவற்றைக் காதிற் போட்டுக் கொள்ளவில்லை. பேரலைகள் வந்து கப்பலில் மோதியடிக்கக் கப்பலின் மேல் தளம் உடைந்தது. சக்கரவர்த்தி நீரில் நனைந்துகொண்டு பாய்மரத்தைப் பிடித்தவாறு கையை உயர்த்தி மா-லியாங்கைப் பார்த்து உரத்த சத்தம்போட்டார். ஆனல் மா-லியாங் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தன் வேலையில் நாட்டம் கொண்டான். புயல்காற்று வீசியது. மையிருள் சூழ்ந்தவானம் மழையைப் பொழியத் தயாராயிருந்தது. அலைகள் மேலெழுந்து கப்பலில் மோதின. அடுத்த கணம் கப்பல் குடைகவிழ்ந்து நொருங்கிற்று. உடனே, சக்கரவர்த்தியையும் சுற்றத்தவர்களையும் சமுத்திரம் விழுங்கியது.

சக்கரவர்த்தியின் சாவுக்குப் பின் மா-லியாங்கும் அவனது மந்திரத் தூரிகையும் என்ற கதை தொடர்ந்து சென்றுகொண்டே இருந்தது. ஆனல் மா-லியாங் என்னவானுன் என்பது ஒருவருக்கும் உறுதியாகத் தெரியாது. சிலர் மா-லியாங் மீண்டும் தன் சொந்த ஊருக்குச் சென்று புதிய சகாக்களோடு வாழ்ந்தான் எனக் கருதுகிருர்கள். மற்றையோர் உலகத்தில் வாழும் ஏழைகளுக்கு உதவிசெய்தான் எனக் கூறுகிருர்கள்.

(முற்றும்)

---

செல்வச் சிறுவர்களே !

இன்று நீங்கள் சிறுவர்களாக இருக்கின்றீர்கள். எதிர்காலத்தில் நீங்கள் பெரியபெரிய காரியங்களைச் செய்யப் போகின்றீர்கள். இளமையில் உங்கள் மனத்திலே உதிக்கும் நல்ல எண்ணங்களே எதிர்காலத்தில் உங்களை நல்லவர்களாக்கும். காந்தித் தாத்தாவை உங்களுக்குத் தெரியும் அல்லவா? குழந்தைகள்மீது அவருக்கு மிகுந்த அன்பு. சிறு குழந்தைகளைக் கண்டால் அவர்களைக் கட்டித் தழுவி முத்தமிடுவார். அவர்களுடன் சேர்ந்து விளையாடுவார். இனிய கதைகள் சொல்லி அவர்களை மகிழ்விப்பார்.

காந்திஜி விளையாட்டுக்கேனும் பொய் சொல்லியதே இல்லை. தாய் தந்தையர் சொன்னபடி நடந்து நல்ல பிள்ளையாக ஒழுகி வந்தார். நீங்களும் கவனமாகப் படித்து நல்ல பழக்கங்களைப் பழகிக் கொள்ள வேண்டும். எனது மருமக்கள் எல்லாரும் நல்ல பிள்ளைகள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். அனைவருக்கும் வணக்கம்.

இன்னமாமா

---

## புதிய மருமக்கள்

**பெயர்களும் பதிவு இலக்கமும்.**

62. சா. அம்பிகேஸ்வர ஐயர்
26, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

63. இ. மல்லிகாதேவி
64, டீல்பிளேஸ் (DealPlace)
கொள்ளுப்பிட்டி.

64. எம். தங்கவேல்,
166, அலுத்கம வீதி,
மத்துகமம்.

65. த. கல்லையா,
மீசாலை தென்கிழக்கு,
மீசாலை.

66. கி. அருளானந்தம்
7/2, காவாந்துறை (வடக்கு)
யாழ்ப்பாணம்.

67. பா. குமாரசாமி
26, நீராவியடி
யாழ்ப்பாணம்.

68. கே. இராசரத்தினம்
சிவயோகவாசா
கம்போலை,
கரவெட்டி மேற்கு.

69. பொ. தங்கவேலன்
29/1 கோணல் தெரு
மட்டக்களப்பு.

---

## நான் கண்ட விபத்து

[**ஆ. சாவித்திரி** பதிவு எண் 49]

விடிந்தால் பொங்கல் திருநாள். என் தம்பியும் நானுமாகக் கடைப்பக்கம் சென்ருேம்.

தெருவில் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்ருகச் சென்றுகொண்டிருந்தன. எங்குப் பார்த்தாலும் ஒரே கூட்டம். வாகனங்களின் இரைச்சல் காதைத் துளைத்தது. நாங்கள் ஒரு வழியாகப் போய்க்கொண்டிருந்தோம். ஒரு பெரிய சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தோம். வேகமாக வந்த கார் ஒன்று "கிறீச்" ஒலியுடன் நின்றது. நான் கண்டதை எப்படிச் சொல்லுவேன். என் கண்கள் இருண்டன. சத்தம் காதை அடைத்தது! உடம்பெல்லாம் புல்லரித்தது! ஒரு மனிதன் அந்தக் காரின் கீழே கிடந்த ஒரு பிள்ளையை இழுத்து எடுத்தான். அப்பிள்ளை கண்களை மூடியபடி குப்புறக் கிடந்தது. தூக்கி நிறுத்திய பின்னரும் பேச்சு மூச்சில்லை. முகத்தில் நீர் தெளித்தார்கள். அறிவு வந்ததும் என்ன நடந்தது என்று கேட்டான். இவற்றையெல்லாம் பார்த்து விட்டு நேரம் போய் விட்டதே என எண்ணி வீடு திரும்பும் போது டபார்! டபார்!! என்று சத்தம் கேட்டது. எனது தம்பிதான் மோட்டாரில் அடிபட்டு விட்டானென எண்ணி ஐயோ! என்று கத்தியபடி கண்விழித்தேன். என் தம்பி பட்டாசுகளைச் சுட்டுத் தள்ளியபடி இருந்தான். அப்போதுதான் நான் இவ்வளவு நேரமும் கண்டதெல்லாம் கனவு என்று எண்ணி ஆச்சரியமடைந்தேன்!

---

## ஏமாந்தேன்

[**க. ரவீந்திரன்** பதிவு எண் 35]

அன்று ஞாயிற்றுக்கிழமை; ஐந்துமணி ஆகிவிட்டது. எனக்குப் பொழுது போகவில்லை. கடற்கரைக்குப் போகலாம் எனஎண்ணிஅங்குச்சென்றேன்.

அங்கே குழந்தைகளின் ஆரவாரம், அத்துடன் கடல் அலைகளின் பேரிரைச்சலும் ஒன்று சேர்ந்து ஒலித்தன. இரைச்சலைக் கேட்டுக் கொண்டே தரையிலே படுத்திருந்தேன்.

ஆதவன் பூமாதேவியுடன் போராடித் தோல்வி அடைந்து மேற்கு வாயிலிலே மறைகிருன். நானும் இனி வீடுதிரும்புவோம் என்ற நோக்கத்துடன் எழுந்தேன். வாயு வேகத்தில் வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன்.

நான் போய்க் கொண்டிருக்கும் பொழுது, ஒரு முகமூடி போட்ட உருவம் கையில் பளபளக்கும் புத்தம் புதிய 'ரிவால்வர்' ஒன்றுடன் என்முன்னே வந்துநின்றது. நான் முகமூடி மனிதனைக் கண்டவுடன் திடுக்கிட்டேன். எனது நாக்குத் தளதளக்கத்தொடங்கியது. வாயிலிருந்து சொற்கள் வெளிவர மறுத்தன. நான் நடுங்கிக்கொண்டே "என் ... னை... ஒ...ன்றும் ... ... செ...ய்யாதே என்னி...டம் ... ஒன்று ... மி ... ... ல்லை" என்றேன்.

அந்த உருவம் புன்சிரிப்புடன் தனது முகமூடியைக் கழற்றியது. அப்பொழுது தான் நான் அறிந்தேன் அந்த உருவம் எனது பாடசாலை நண்பன் சுந்தரம் என்று. அவன் கையிலிருந்த 'ரிவால்வர்' சிறுவர்களின் விளையாட்டுத் துப்பாக்கி என்பதை அறிந்து நான் வெட்கத்துடன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தேன்.

---

## புன்னகையின் சக்தீ

— ம. ஜீவரத்தினம் —

நல்லதோர் தமிழ்நூ லொன்றை
நயந்துநான் படிக்குங் காலை
இல்லாளென் மகனைச் சுட்டி
"இவன்செயும் செய்கை பாரீர்
தொல்லையே யிவனல் வீட்டில்
சும்மாவே கதறு கின்ருன்
சொல்வழி கேட்க மாட்டான்
தூக்குங்கள் இவனை" யென்ருள்.

படிப்பதை நிறுத்தி விட்டுப்
பையன்மேற் கோபம் பொங்க
பிடித்துதை கொடுக்க எண்ணிப்
பெயர்ந்தேனென் னிருப்பை விட்டு
'அடிப்பதோ எட்டு மாதம்
ஆகாத குழவி யை'யென்
றிடித்துரைத் ததுஎன் நெஞ்சம்
எனின் சினம் ஆறவில்லை.

வெறுப்புடன் புத்தகத்தை
வீசினேன் பயலை நோக்கி
முறைத்துநான் பார்த்த போது
முன்னுக்குத் தவழ்ந்து வந்து
இறைஞ்சுவான் போல என்றன்
வேட்டியை இழுத்தான்; ஓர்புன்
முறுவலால் என் சினத்தை
முறியடித்திட்டான் ஆகா!

என்னடா சொல்வே னந்த
இனியபுன் னகையின் சக்தி!
என்னுடைக் கோபமெல்லாம்
எங்குசென்றது வோ தேரேன்
இன்னறுங் கனியோ பாலோ
எழில்மிகு நூலோ தேனே
அன்னவை யாவும் பாரில்
அதற்கிணை ஈடுமில்லை.

அள்ளியான் அணைத்தேன் மைந்தன்
'அப்பிள்' கன்னத்தைக் கையால்
கிள்ளியே சொரிந்தேன் முத்தம்
கிறங்கினேன் மறந்தேன் யாவும்
கள்ளுண்டான் நெஞ்சம் போலக்
களிகொண்டேன் அடடா என்ன
சொல்லுவதுண்டோ அந்தச்
சுகத்துக்குச் செகமீடில்லை.

# நமது நூல் நிலையம்

**இலக்கணச் சுவாமிகள் என்னும் ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான் நினைவுமலர்** வெளியீடு: கலாநிலையப்பதிப்பகம், சிவன் கோவில் மேலைவீதி, யாழ்ப்பாணம்.

எல்லாவற்றையும் இழந்த பிறகும் மகான்களுடைய ஆதர்ஸமே மறுபடியும் உலகத்துக்கு உயிர் தருகிறது.

இலக்கணச் சுவாமிகள் நமது நாட்டிலே பிறந்தவர்கள். குழந்தையாக இருக்கும்போதே விட்டகுறை முடிக்க வந்தவர்கள் என வாழ்ந்து, யாருமறியாதபடி அறியாப் பருவமான 14 வயசில் ஜன்ம பூமியை விட்டுப் பாரதநாடு போய்ச் சேர்ந்து விட்டார்கள். சிதம்பரத்தில் சில வருஷங்களுக்கு முன்வரை வாழ்ந்தவர்கள்.

> மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

சிதம்பரத்தில் அவர்களுடைய இயற்பெயர் பிரதானமாயில்லை. "இலக்கணச் சுவாமிகள்" என்றாலே போதும். எல்லோரும் தெரிந்து கொள்வர்.

மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிய அகிலாண்ட நாயகிபதிகத்துக்குச்சுவாமிகள் எழுதியருளிய உரை இந்த மலரில் ஓர் எடுத்துக் காட்டாக மட்டும் தரப்பட்டது. அவர்கள் பதிப்பித்த நூல்கள், எழுதி வெளியிட்ட உரைகள் பற்றிப் பிரஸ்தாபிப்பது இங்கே தனிக் கட்டுரையாகி விடும்.

சுவாமிகளைப் பற்றி ஆதீனங்களும், சிவக்கவிமணி ஸ்ரீ சீ. கே. சுப்பிரமணிய முதலியார், நெல்லை ஸ்ரீ எம். எல். பிள்ளை போன்றவர்களும் எழுதிய கருத்துக்கள் இம் மலரில் பிரகாசிக்கின்றன.

சுவாமிகளின் அருள் வழிப்பட்ட பிரகாசமான வாழ்வுக்கு இச் சிறு மலர் நினைவு மலராதல் போதாது. ஆயினும், அவர்களுக்கு ஒரு நினைவு மலர் வெளிவந்தது நமது பாக்கியமே. மகான்களைப் போற்றாத சமுதாயம் நிச்சயம் அழிந்து விடும்.

மகான்களைப் போற்றுகிற பண்புடையவரும் போற்றப்படத் தக்கவரே. மலரின் உள்ளே உள்ளவைகளை எல்லோரும் தெரிந்து கொள்வார்களாக. அதன் தோற்றம் ஞானப் பிரகாசத்துடன் விளங்கிய அவருடைய மெலிந்த புண்ணிய உடல் போலப் பரிசுத்த எண்ணங்களை நமக்கு உண்டு பண்ணுகிறது.

—சம்பந்தன்

**மாணவ ஒலி:** திங்களிதழ்—; தபாற்பெட்டி எண் 13, சம்பத்தரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்; **தனிப்பிரதி** சதம் 10.

'மாணவ ஒலி' யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி மாணவரின் மாத இதழாகும். மாணவர்களின் இனிய கட்டுரைகளும் கதைகளும் இதில் வெளி வருகின்றன. பள்ளிக்கூடச் சிறுவரின் முயற்சியை வாழ்த்துகின்றோம்.

## பின்வந்த நூல்கள்

**மகாத்மாகாந்தி நூல்கள்** மூன்றாம் தொகுப்பு; **ஆசிரியர்**: ரா, வேங்கடராஜுலு; **துணையாசியர்:** கு. அழகிரிசாமி **வெளியீடு:** காந்திநூல் வெளியீட்டுக் கழகம், சர்க்கார் எஸ்டேட், சென்னை 2; **விலை** ரூபா 7-50.

**உளநூலும் கல்வியும்: ஆசிரியர்** த. இராமநாதபிள்ளை பி.ஏ; **வெளியீடு**: ஸ்ரீலங்கா அச்சகம், கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்; **விலை** ரூ. 3-50.


இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

**ஹெப்பற்ரோ - B12**

**(Hepato - B12)**

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்

**பாண்டு, இரத்தமின்மை**

ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்

அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:

**புதிய மலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி**

268, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்


பலசரக்கு

# பேரீச்சம்பழப் பிரசாரம்

"பேரீச்சம்பழம் சாப்பிடுங்கள். அதிலும் ஈராக்கிலிருந்து வரும் பழமாகப் பார்த்துச் சாப்பிடுங்கள். அது மிகவும் சத்தான உணவு. 'உங்கள் உடலுக்கு மிகவும் நல்லது" என்பது போன்ற பிரசாரத்தை நீங்கள் இலங்கையிலே இனி அதிகம் கேட்கலாம்.

இலங்கைத் தேயிலைப் பிரசார சபையார், இனி இந்தப் பேரீச்சம்பழப் பிரசாரத்தைச் செய்யத் தீர்மானித்திருக்கிறார்களாம். நீங்கள் நம்ப மறுக்கிறீர்களா? உண்மைதான்.

### தேயிலை

காரணம் என்ன தெரியுமா? சமீபத்தில் புரட்சியெல்லாம் நடந்து, உலகப் பத்திரிகைகளில் அடிபட்டதே, அந்த ஈராக் தேசத்தவர்களுக்குத் தேயிலை என்றால் உயிர். வருஷா வருஷம் 2 கோடி ரூத்தல் தேயிலையை இறக்குமதி செய்து, சாப்பிடுகிறார்கள். அதிலும் இலங்கைத் தேயிலை என்றால் அவர்களுக்கு மிகவும் பிரியமாம். 100-க்கு 99 விகிதம் இலங்கைத் தேயிலையையே வாங்கி வருகிறார்கள். இதனால் நம் இலங்கைக்கும் நல்ல வருமானம். ஆனால் இதற்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறதாம்.

ஈராக்கின் தேயிலை 'மார்க்கெட்'டைப் பிடிக்க இந்தியாவும், சீனமும் இப்போது போட்டி போடுகின்றனவாம்!

ஈராக் நம்மிடமிருந்துதேயிலை வாங்குவதற்குப் பதிலாக நாம் ஈராக்கிடமிருந்து ஒன்றும் வாங்குவதில்லை. இதனால் நாணய மாற்று, வர்த்தகமிக்க சிக்கல்கள் ஏற்பட்டன. ஈராக்கில் உற்பத்தியாகும் பேரீச்சம்பழத்தை நாம் வாங்கினால் தான், நமது தேயிலையைத் தாங்களும் வாங்க முடியுமென்று ஈராக் ஒரு நிபந்தனையைப்போட்டது. இது காரணமாகவே, ஈராக் தேயிலைமார்க்கெட்டை இழக்க விரும்பாமல், இலங்கையின் தேயிலைப்பிரசார சபையார், இப்போது, பேரீச்சம்பழப் பிரசாரசபையாக மாறிவிட முன்வந்துள்ளனர்!

### இந்தியாவும் சீனமும்

ஈராக்கின் தேயிலை 'மார்க்கெட்'டைப் பிடிக்க இந்தியாவுக்கு வெகுநாளாகக் குறியுண்டு. இதுவரை நூற்றுக்கு ஒன்று விகித தேயிலையையே இந்தியா அனுப்பி வந்தது. இப்போது ஈராக்கிடமிருந்து அதிக பேரீச்சம்பழம் வாங்கியதா? அப்படி வாங்கினால், ஈராக் தேயிலை மார்க்கெட்டைப் பறிக்க முடியுமா! என்று இந்தியத் தேயிலை வர்த்தக வட்டாரங்கள் முனைந்திருக்கின்றன.

இதற்கிடையே சீனமும் சும்மா இருக்கவில்லை. ஈராக்கிலிருந்து 20 ஆயிரம் தொன் பேரீச்சம்பழத்தை அவர்கள் வாங்கிக்கொண்டு அதற்குப் பதில், தங்கள் தேயிலையை ஈராக்குக்கு விற்க ஏற்பாடு செய்துவருகிறார்கள்.

சீனத் தேயிலையின் ரசம் முன்னையில் இப்போது பெரிதும் உயர்ந்துள்ளது. விலையோ மிகக் குறைவு. ஆகவே சீனம் ஈராக்கின் தேயிலை 'மார்க்கெட்'டை நம்மிடமிருந்து வெகுவாகக் கைப்பற்றிவிடக்கூடிய நிலை உருவாகிவருகின்றது.

### அதிகரிக்கிறது

1958-ம் வருஷத்திலே உலகிலே தேயிலை உற்பத்தி, முந்திய ஆண்டைவிட 5 கோடி 50 லட்சம் இருத்தல்கள் அதிகமாகும்! 1956 ம் ஆண்டைவிட 1957-ம் வருஷத்தில் உற்பத்தி 3 கோடி 70 லட்சம் இருத்தல்கள் அதிகம். தேயிலை உற்பத்தி இவ்விதமே அதிகரித்துக் கொண்டு போனால், அது தாங்கமுடியாதென்றும் தேயிலைச் செய்கை குட்டிச் சுவராகிவிடுமென்றும் பொருளாதார நிபுணர்கள் அஞ்சுகின்றனர். ஆனால் உற்பத்தியோ மேலும் ஐந்தரைக் கோடி உயர்ந்தும், தேயிலைச் செய்கை இன்னும் உயிருடன் தானுள்ளது. தேயிலைக்குடி அதிகரித்துக்கொண்டே போகிறது! இது நமது இலங்கைக்கும் நல்லதுதானே!

பிரிட்டன் மட்டும் 1957-ம் ஆண்டிலே 15 கோடி பவுண் மதிப்புள்ள தேயிலையை வாங்கியுள்ளதாம்! நமக்குப் பக்கத்திலுள்ள துறைமுகத்திலிருந்து 10 கோடி இருத்தல் அந்த ஆண்டில் ஏற்றுமதியாகியுள்ளதாம். சென்ற பத்து ஆண்டுகளுக்குள்ளாக, கொச்சி உலகிலே மிக முக்கியமான தேயிலை ஏற்றுமதித் துறைமுகமாக வளர்ந்துவிட்டதென்பதும் இனியும் வளர்ந்து வருகிறதென்பதும் குறிப்பிடத் தக்கது.

# வான மண்டலம்

## பங்குனி மாதம்

எஸ். எஸ்.

**ப**ங்குனி மீ 1உ (15-3-59) ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்குக் கீழ்த்தொடு வானத்தில் துலா ராசி உதயமாகிக் கொண்டும், மேல் தொடுவானத்தில் மேட ராசி அஸ்தமித்துக் கொண்டும் இருக்கும். அப்பொழுது இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி ஆகிய ராசிகளை மேற்கில் இருந்து கிழக்கு நோக்கிக் காணலாம்.

வட வானத்தில் துருவன் (Polaris) தோற்றிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அதற்கு மேலாக அசுரன் (Draco) சிறிது சிறிதாக உதயமாகி வருகிறான். இவற்றிற்கு மேலாக ஸப்தரிஷி மண்டலம் (Ursa Major) காட்சியளிக்கிறது. இதற்கும் கன்னி ராசிக்கும் இடையே அருந்ததி கூந்தற் (Coma Berenices). கூட்டம் அமைந்துளது. இக்கூட்டம் அநேக புகைக் கோளங்(Nebulae) களையுடையது. ஸப்தரிஷி மண்டலத்திற்குச் சிறிது மேற்காகப் *பூனை (Lynx) பதுங்கியிருத்தலைப் பார்க்கலாம். இதற்கு வடமேற்காகக் களியோப்பியா (Cassiopiea) என்னும் யயாதியின் மனைவி மறைந்து போவதைப் பார்க்கலாம். இந்நட்சத்திரக் கூட்டத்தில் ஐந்து நட்சத்திரங்கள் மிகப் பிரபையுடையன. வடமேற்காக அரிகா ((Auriga) என்னும் பிரம மண்டலமும், பேர்ஸியஸ் (Perseus) என்னும் யயாதிக் கூட்டமும் மேற்கு நோக்கிப் போவதைப் பார்க்கலாம். பிரம மண்டலத்தில் உள்ள பிரம ஹிருதயம் (Capella) என்னும் நட்சத்திரம் சிறிது செந்நிறமுடையது.

தென் வானத்தின் தென் கீழ்ப்பாகம் நீர்ப்பாம்பி (Hydra)னாலும், தென்மேற்பாகம் வளைந்து வளைந்து ஓடிக்கொண்டிருக்கும் ஆகாயநதி (Eridanus)யினாலும், நடுப்பாகம் ஆகோநேவிஸ் (Argo Navis) என்னும் கப்பலினாலும் அமையப்பெற்றுள்ளன. கப்பலிலிருக்கும் அகஸ்தியர் (Canopus) நட்சத்திரம் மிக்க பிரபையுடையது. கப்பலுக்கு மேலாக கனிஸ் மேஜர் (Canis Major) என்னும் பெரிய நாய்க்கூட்டமும், கனிஸ் மைனர் (Canis Minor) என்னும் சிறிய நாய்க் கூட்டமும் இருக்கப் பெற்றுள. பெரிய நாய்க் கூட்டத்திலிருக்கும் மிருக வியாதர் (Sirius) என்னும் நட்சத்திரம் வெண்ணீல நிறமுடைய இரட்டை (Double Star) நட்சத்திரங்களைக் கொண்டதாகும். இவற்றிற்குத் தென்கிழக்காகத் திரிசங்கு (Crux) க் கூட்டம் காணப்படும். இக்கூட்டம் தென் சிலுவை என்றும் சொல்லப்படுவதுண்டு.

மறு நட்சத்திரங்களாவன மேடத்திலுள்ள பரணி (Arietis-41) யும், இடபத்திலுள்ள கார்த்திகை(Pleiades)யும், ரோகிணி (Aldebran)யும், ஆரியன் (Orion) கூட்டத்திலுள்ள மிருகசீரிட (Orionis) மும், திருவாதிரை (Betelguese) யும், மிதுனத்திலுள்ள புனர்பூச (Pollux)மும், கடகத்திலுள்ள பூச (Cancri) மும், நீர்ப்பாம்பிலுள்ள ஆயிலி (Hydrae)யமும், சிங்கத்திலுள்ள மக (Regulus)மும், பூர (Leonis) மும், உத்தரமும், (Leonis) காகத்தின் (Corvus) மேலுள்ள அத்த (Corvi) மும், கன்னியிலுள்ள சித்திரை (Spica) யுமாகும்.

இம்மாதம் பால்வீதி மண்டல (Milky Way) மானது வடமேற்கிலிருந்துஉச்சிவழியாய்த்தென் கிழக்கை நோக்கி அமைந்திருக்கிறது. இது களியோபியா, பேஸியஸ், அரிகா, இடபம், மிதுனம், ஆரியன், கனிஸ்மேஜர், ஆகோநேவிஸ், திரிசங்கு வழியாகச் செல்வதைக் காணலாம்.

நட்சத்திரங்கள் முதனாளிலும் மறுநாள் 4 நிமிஷம் வரை முந்தி உதயமாவதால் இம்மாதம் 15ந் திகதி இரவு 8 மணிக்கும், 30ந் திகதி இரவு 7மணிக்கும் ஏறக்குறைய அதே இடங்களில் மேற்கூறிய நட்சத்திரக்கூட்டங்கள் இருப்பதைக்காணலாம்.

* நாய் என்றும் வழங்கப்படுகிறது.

அருள் வழி

# சம்பூரண மனிதன்

கவி இக்பால்

உலகிலுள்ள சகல பொருள்களுக்கும் உயிரினங்களுக்கும் அவ்வவற்றின் தனித்தன்மைகளுண்டு. தன்னுடைய இந்தத் தனித்தன்மையை எந்த அளவுக்கு ஒரு பொருளோ, உயிரினமோ வளர்கிறதோ அந்த அளவுக்கே அது மதிப்புடையதாகிறது. அதன்மூலம் அது தன் சூழ்நிலையின்மீதே ஆதிக்கம் பெறுகிறது. மனிதனிடம் தான் இந்தத் தனித்தன்மை மிக உன்னதமாக வளர்ந்துள்ளது. இங்கே அதற்குக் குணதிசயம் என்று பெயர் உண்டாகிவிடுகிறது.

## இறைவனும் மனிதனும்

உடலளவிலும், ஆத்மாவளவிலும் மனிதன் தனக்குள் யாவும் உடையவனாக இருக்கிறான். ஆயினும் அவன் சம்பூரணமான, தனித்தன்மையான ஒரு ஆகவில்லை. அவன் இறைவனை விட்டு எந்த அளவுக்கு அப்பால் விலகியிருக்கிறானோ அந்த அளவுக்கு அவன் தனித்தன்மையும் குறைவானதாக இருக்கிறது. இறைவனுக்கு மிகச் சமீபத்தில் வருபவன் சம்பூரண மனிதனாகிவிடுகிறான். ஆனால், அவன் இறைவனோடு ஐக்கியமாகிவிடுவதில்லை; இறைவனின்—அதாவது அவனோடு சம்பந்தப் படுத்தும்—தன்மைகளைத் தன்னோடு ஐக்கியப் படுத்திக் கொள்கிறான்.

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஐக்கியப் படுத்திக்கொண்டே முன்னேறும் சக்தியாகும். தன் பாதையிலுள்ள இடையூறுகளையெல்லாம் அது தன்னுள் இழுத்துக்கொண்டு முன்னேறும். அதன் சாராம்சம், ஆசைகளையும், இலட்சியங்களையும் ஓயாது சிருஷ்டித்துக்கொண்டு இருப்பதாகும். தன் பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும் தன்னில் நின்றே அது புலன்கள், அறிவு போன்ற சில கருவிகளைக் கண்டுபிடித்து அல்லது வளர்த்துத் தந்துள்ளது. இக்கருவிகளே தடைகளை இழுத்துக் கொள்கின்றன. வாழ்க்கைவழியிற் பெருந்தடையாய் உள்ளது இயற்கைதான். எனினும் இயற்கை தீமையானதன்று. ஏனெனில் வாழ்க்கையின் அகச்சக்திகள் தாமாக வெளிப்பட இது உதவுகிறது. தன்பாதையிலுள்ள சகல தடைகளும் அகற்றப்படுவதால் அகம் சுதந்திரம் அடைகிறது. அகம் ஓரளவு சுதந்திரமாகவும், ஓரளவு உறுதியுடனும் பூரண சுதந்திரனை இறைவனை நெருங்கியதும் பரிபூரண சுதந்திரம் அடைந்துவிடுகிறது.

அதாவது, இயற்கையோடு போராடிப் பெறுக் கொள்ளும் அகம் சுதந்திரமடைகிறது. மேலும் அது ஓயாது உழைத்துச் சோம்பிக்கிடக்காது அமர நிலையை எய்துகிறது. இதன் மூலம் அது காலத்தையும் தூரத்தையும் வெல்கிறது. போராட்டத்தின் மூலம் சுதந்திரம்; சுதந்திரத்தின் மூலம் இறைவனை நெருங்குதல்; சதா உழைப்பது; அதன்மூலம் அமரத்துவம் எய்தல்.

அகத்தைப் பலப்படுத்து வதற்கு அன்பு, உலக ஆசைகளைப் பற்றிய அக்கறையை முற்றுமற்ற திருப்தி, தீரம், சகிப்புத் தன்மை ஆகுமான—குற்றமற்ற—உணவு தேடல், திறனை வளர்த்தல் ஆகிய ஆறு சக்திகள் உதவுகின்றன.

## அன்பு

அன்பு மகத்தானது. இலட்சியங்களையும், மதிப்புக்களையும் உண்டாக்கி அவற்றை எய்த முயற்சிப்பதே அன்பின் உன்னதமான படித்தரமாகும். மனிதனின் தனித்தன்மையை வளர்ப்பதற்கு அன்பு மிகவும் அவசியமானது.

## திருப்தி

இவ்வுலக, மறு உலக வெகுமதிகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இருப்பதுதான் திருப்தியான நிலையாகும். சுயநலமோ, பற்றுதலோ இல்லாமல், மறு உலக வாழ்க்கையில் வரக்கூடிய இலாபங்களையெல்லாம் எண்ணிப்பாராமல் உலகின் நன்மைக்குப் பாடுபடுவது. இதைத்தான் ஆசைகளே முற்றும் அற்ற திருப்தி என்பது.

## தீரம்

இது உடல் பலத்தையும், மனோபலத்தையும் குறிப்பிடுவது. இவை யாண்டுமின்றி எவரும் உலகில் உண்மையிலேயே ஐக்கிய மனத்தையும் எய்திட இயலாது. முன்னேற்றம் என்றாலே முட்டுக்கட்டைகளும் உண்டு. ஆனால் தடைகள் தயங்குபவர்களையே வீழ்த்தும். தீரமுடையவர்களுக்கோ அவர்கள் இயல்பும், அவர்களிடம் மறைந்துகிடக்கும் சக்திகளும் வளர அவை உதவுகின்றன. அவர்கள் சபலமின்றி முன்னேறுகிறார்கள். பிறர் இகழும் போதும், சந்தர்ப்பங்கள் அனுகூலமாயில்லாதபோதும் நம்பிக்கை இழக்காமலிருப்பதும், நண்பர்களும், எதிரிகளும் தூற்றும்போதும் அமைதியாக அதை ஏற்பதும் தீரமாகும்.

## சகிப்புத்தன்மை

மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்கும், பழக்கங்களுக்கும் மதிப்புத் தருவது சகிப்புத்தன்மையாகும். இத்தகைய சகிப்புத்தன்மை சுகத்தை ஊட்டிப் பலப்படுத்துகிறது. உண்மையில் சகிப்புத்தன்மை பலத்தால் வருவது. பலவீனத்தால் வருவதன்று.

## குற்றமற்ற உணவு

ஆகுமான—குற்றமற்ற—உணவு தேடல். திருட்டாலோ, ஏமாற்றுலோ, பித்தலாட்டத்தாலோ அல்லது இவைபோன்ற வேறு தீயவழியிலோ வராத—நியாயமான, சட்டபூர்வமான செல்வத்தைக் குறிப்பிடுவதாகும்.

## திறனை வளர்த்தல்

போலியாக நடந்துகொள்வதை ஒதுக்க வேண்டும். சிருஷ்டிச் சக்தியிருக்கவேண்டும். எல்லோருக்கும் ஓரேமாதிரித் தன்மையும், சிருஷ்டித்திறனும் இல்லைத்தான். எனினும் ஒவ்வொரு அகத்திலும் இத்திறன் இருக்கவே செய்கிறது. ஆனால், நாம் பெற்ற தவறான கல்வி காரணமாகவோ, தவறான போதனை காரணமாகவோ அது உருப்பெற இடமில்லாதிருக்கிறது. இந்த இடையூறுகளை அகம் அகற்றி நல்ல சிருஷ்டிவேலைகளில் முனைந்துநிற்க வேண்டும். மனிதனுடைய செயலாற்றல் அவன் தெய்வீகத்தன்மையுடைய உதவிபுரிகிறது. இச் சக்தி உருவாகாமல் நசிந்துபோவதால் மனிதனின் இயல்பே குன்றிப்போய்விடுகிறது.

அகத்தைப் பலப்படுத்த உதவும் இந்த ஆறு சக்திகளை அறிந்து கொண்டதுபோல் அகத்தைப் பலஹீனமாக்கும் நான்கு விஷயங்களையும் நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். அவை முறையே அச்சம், யாசகம், அடிமைத்தனம், குலப்பெருமைபேசுதல் ஆகியவையாகும்.

## அச்சம்

கவலை, ஆத்திரம், ஆவல், கோபம், பொறாமை, தயக்கம் யாவும் அச்சத்தைச் சேர்ந்தவைதாம். இதுவே மனிதவர்க்கத்தின் பெரிய எதிரியாகும். மற்ற எந்தச் சக்தியையும் விட இதுவே மனிதனைக் கோழையாக்கி அவன் முன்னேற்றத்தைத் தடுத்து அவன் திறமையையும், மகிழ்ச்சியையும் கொள்ளைகொண்டு போகிறது. இத்தகைய அச்சத்தை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும்.

## யாசகம்

தன் சொந்த முயற்சியால் அடையாத எதுவுமே யாசகம் தான். தந்தை சொத்தை வாரிசாகப் பெறுபவனும், பிறரிடமிருந்து கருத்துக்களைக் கடன் வாங்குபவனும் யாசிப்பவர்களே. இது அகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் தீங்குபயப்பதாகும். எத்தனைதான்செல்வத்தில் புரண்டுகொண்டிருந்தாலும் பிறரைச் சுரண்டும் யாவருமே பிச்சைக்காரர்கள் தாம். அவர்கள் அகத்திற் சொந்த முயற்சியின் ஊட்டமில்லாது போய்விடுகிறது. சொந்த முயற்சியின்றிப் பிறரை உறிஞ்சி வாழ்பவர்களும் பிச்சைக்காரர்கள்தாம்.

## அடிமைத்தனம்

அடிமைத்தனத்தைப்போல் இழிவான எதையும் மனிதன் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. அடிமைத்தனம்மனிதனின் அகத்தை அழித்து அவனைமிருகமாக ஆக்கிவிடுகிறது. சுதந்திரமில்லாவிடின் உண்மையான மனிதர்களை உண்டாக்க இயலாது. உலகின் பெரும்பகுதியில் அரசியல் அடிமைத்தனம் என்பது இன்று இல்லாதுபோயினும் அரசியல், பொருளாதாரச் சுரண்டல்களாக அது நெடுகிலும் நிலவியே வருகிறது. இதனாலும் அகத்தின் வளர்ச்சி குன்றிப்போகிறது. எனவே, சகல அரசியல் ஆதிக்கங்களும், பொருளாதாரச் சுரண்டல்களும் ஒழிந்தால்தான் மனிதர்கள் நீதி, ஆத்மிக வளர்ச்சியடைய முடியும்.

## குலப்பெருமை

தனது குலம், சாதி, இனம், மொழி முதலியவற்றில் பெருமையும், அகந்தையும் கொள்ளுதல் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிற் பல தடைகளை உண்டாக்கிவிடுகிறது. இதுவும் தவிர்க்கப்படவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட வளர்க்கும் சக்திகளையும் தடுக்கும் சக்திகளையும் உணர்ந்து அவற்றிற்கேற்ப நாம் வாழ்ந்தும் போதுதான் சம்பூரண மனிதனாகும் பாதையை, அருள் வழியை நாம் அடைய முடியும்.

---

## வண்ணையில் வாழீசன் வரந்தருவான்!

கண்ணையிமை காப்பதுபோற்
காத்த வடியவர்க்கு
வண்ணையில் வாழீசன்
வரந்தருவான் திண்ணமிது
சேருங்கள் ஒன்ருய்ச்
சிவசிவா வென்று கவி
கூறுங்க ளெல்லாம்
கொடுத்து.

* * *

கொடுத்தார்க்கு முண்டோ
குறைதா னவரை
யடுத்தார்க்கு முண்டோ
விடுக்கல் எடுத்தான்
தலைபத்துந் தந்தளிக்கச்
செய்த சிவனைத்
தலையால் வணங்குந்
தமக்கு.

—கற்சிந்தனை

---

## இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| பு. வெ. கே. | | செ. | |
| சூ | இவ்வார கிரக நிலை | | |
| | | | |
| சனி | வியா | | ரா |

இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.

(21-3-59 — 27-3-59)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்) சத்துருக்களால் தீமை அடைதல், எக்கருமத்திலும் அதிகணக்கம், உதவி ஆட்களின் நஷ்டம், பெரியோர் நட்பு, தொழில் மந்திம சித்தி ஆகியன உண்டாம்.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் கால்கள்) குடும்ப மகிழ்ச்சி; புத்திரர்களாற் கவலையடைதல், காத்திராப்பிரகாரமான பணவரவு, தேகாரோக்கியக் குறைவு ஆகியன வரப்பெறும்.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3, 4-ம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3-ம் கால்கள்) உத்தியோக உயர்வு, வாழ்க்கையிற் சிற்சில மாறுதல்கள் ஏற்படல், பெண்பாலார் சிநேகம், வீண்பழி கேட்டல், சுப கருமநிகழ்ச்சிகள், சத்துரு ஜெயம் ஆகியன உண்டாம்.

**கடகம்** (புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்) விஷ சீரப் பீடை, இனக் கவலை, தருமச் செய்கைகளில் அதிக விருப்பு, வருவாய்க்குமேல் அதிகமான செலவு, இடமாற்றம், உஷ்ண சம்பந்தமான ரோகம் ஆகியன வரப்பெறும்.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம்கால்) நற்கீர்த்தி, ஆயுதபயம், புதிய கருமங்கள் சித்தியடைவதில் தாமதம், ரோகபயம், பிரயாசை மிகுதி, குடும்ப ஒற்றுமைக் குறைவு, சகாக்களால் ஏமாற்றப் படல், நன்மைக்கேற்ற விஷயங்களைச் செய்யா திருத்தல் ஆகியன நிகழும்.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4-ம் கால்கள், அத்தம், சித்திரை 1, 2-ம் கால்கள்) வீண் பெருமை, சினேகிதர்களாற் கவலையடைதல், நிலை மாற்றம், புத்தி தடுமாற்றம், நாற்கால் விலங்குகளால் தாக்கப் படுதல், வாகனச் செலவு, புத்திரர்களால் சந்தோஷ மிகுதி ஆகியன உண்டாம்.

**துலாம்** (சித்திரை 3, 4-ம் கால்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் கால்கள்) பெண்களால் கஷ்டமடைதல், தூரதேசப் பிரயாணம், கண் ரோகங்கள், தாரப் பிரிவு, பெரியோர் சன்மானம், போசனசுகம் ஆகியன வரப்பெறும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம்கால், அனுஷம், கேட்டை) பிறதேச சஞ்சாரம், பொருள்வரவு, சத்துரு ரோகபயம், அடிமையாட்களினால் நஷ்டம், பிரயாணத்தால் கவலைப்படல், தொழில் மத்திமசித்தியைக் கொடுத்தல் ஆகியன உண்டாம்.

**தனுசு** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்) சுப அசுப நிகழ்ச்சிகள் ஒருங்கு நிகழ்தல், உத்தியோக வீழ்ச்சி, நினைத்த கருமத்தை மனந் தளராது நடாத்தி முடித்தல், பெரியோர் நட்பு, அக்கினியபயம் ஆகியன உண்டாம்.

**மகரம்** (உத்தராடம் 2, 3, 4-ம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் கால்கள்) வீண்பழி கேட்டல், பிரயாசத்திற்கேற்ற லாபமின்மை, குடும்ப மகிழ்ச்சி, ஸ்திரீகளாற் பொருட் சேதம், தேகசுகக் குறைவு ஆகியன உண்டாம்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் கால்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்கள்) இராசபயம், பெரியோர் மதிப்பு, அடிமையாட்களின் சகாயம், நீரிலை ஆபத்து நிகழ்தல், வீண் பிரயாசம், கவியாட்டங்களில் ஈடுபடுதல் ஆகியன வரப்பெறும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி) நிலை மாற்றம், உத்தியோகக் கவலை, சுபகருமங்கள் நிகழப்பெறுதல், வஞ்சகர்களால் ஏமாற்றமடைதல், புதிதாகத் தொடங்குங் கருமங்களில் தாமத சித்தி, பிரயாணம் ஆகியன உண்டாம்.

சினிமா உலகம்

# மஞ்சள் மகிமை

இந்து மதத்தின் உயர்ந்த தத்துவத்தையும், மகத்துவத்தையும் கொண்டது மாங்கல்யம். ஒரு பெண்ணின் வாழ்வுக்கு வேலியாக அமைந்து—நெறிதப்பிப் போகாத வகையில் நினைவை இழுத்துப் பண்பான பாதையிற் செல்லத் தூண்டுவது மாங்கல்யம். இக்கருத்தை விளக்கப் பல புராணக் கதைகளுள. நாடகம், சினிமா ஆதியவற்றில் இக்கருத்தைக் கொண்ட பல கதைகள் அடிபட்டமையாற் போலும்; இப்படம் மேற்படி கருத்தைக் கொண்டிருந்தும் "மஞ்சள் மகிமை" எனும் மகுடத்தைப் பெற்றிருக்கிறது.

பிளவுண்டுபோன குடும்பப் பிணைப்பைப் பிள்ளைகளின் திருமணத்தின் மூலம் ஒட்ட முற்படும் சீதம்மாளின் கடைசி ஆசைக்காக சரோஜா, ராஜசேகர் ஆகிய இரு குழந்தைகளுக்கும் திருமணம் நடத்தி வைக்கிறுள் அவளது தாய். இதனுற் குடும்பம் பிணைவதற்குப் பதில்மேலும்பலவெடிப்புக்கள் கிளம்புகின்றன.

தென்னுட்டுத் திரையில் உடலை அலட்டிக்கொள்ளாமல்—கோணங்கிச் சேஷ்டை செய்யாது உணர்ச்சி பாவத்தை சித்திரிக்கும் நடிகருள் ஒருவரே ஏ. நாகேஸ்வரராவ். பாட்டிக்குகந்த பேரனை சேகராக வருமிவர் எந்தக் கட்டத்திலும் தன்னைத் தாழ்த்திவிடவில்லை. சிருங்காரக் காட்சிகளில் எட்ட நின்றுளபோதும் சுவை அப்படியே இருக்கிறது.

பெண்ணுக்குரிய குணும்சம் பொருந்தியவராக — தாலியை மதிக்கும் பாரதப்பெண் சரோஜாவாக வருகிறுர் சாவித்திரி. பருவத்துடன் கூடிய உணர்ச்சியலைகளில் எற்றுண்டு சேகருடன் ஒட்டும் அவரிடம், அறியாப்பருவத்தில் தனக்குந் தாலி கட்டிய கணவன்தான் சேகர் என்று தெரியாது—பலவந்தமாக உணர்ச்சிகளைக் கெல்லி எறியும்போதும்—அவரைத் தெரிந்து ஒன்று சேரும் போதும் சந்தர்ப்பத்துக்கேற்ற குணும்சங்கள் பிரதிபலிக்கின்றன.

பாட்டியாக வருகிறுர் கண்ணும்பா. தன் தோளிலும், மார்பிலும் போட்டு வளர்த்த பேரன் பேத்தியாகிய இருவர்க்காகச் சூடு வாங்கும் வரையிலும் அவரது நடிப்புச்சோடை போகவில்லை.

ரங்கா ராவ் மனைவியின் கோட்டுக்குள் நிற்கும் மார்த்தாண்டன் பாகத்தை ஏற்றிருக்கிறுர். சிற்சில சமயங்களில் மனைவியின் முரண்டுக்கு எத்துப்படாது குணம் நிரம்பிய செயலே செய்ய முற்படும் மார்த்தாண்டம், மகாகோபியாக மாறி ஆரம்பத்திலுள்ள குணப்பண்பை மீறித்துப்பாக்கி கொண்டு மகளையும் மருமகனையும் துரத்துவதினுல் அப்பாத்திரத்தின் குணச் சிறப்பு முன்னுக்குப் பின் முரணுகிறது. ஆனுல் ரங்காராவ் கதைக்காரர் கொடுத்த பாத்திரத்துக்கமையத்தனது உணர்ச்சிகளை சரியாகவே வெளியிடுகிறுர்.

'இது நமக்குள் பேசிக்கொள்கிற பேச்சு' என்று அடிக்கடி பிரயோகிக்கும் சுப்பையாவாகச் சாரங்கபாணி வந்து அங்கு மிங்கும் முடிச்சுப் போடுகிறுர்.

ராஜசுலோசன — தங்கவேலு இருவரும் இக்கணக்குள் வரும் மற்றெரு காதல் சோடி. இடைநேரம் வரை கதையினின்றும் வேறுபட்டு நின்ற இப்பாத்திரங்கள் படிப்படியாகக் கதையோடு இணைந்து அதன் முடிவுக்கு அவசியமாக முடிகின்றன.

ராஜசுலோசன — ராகினி ஆகிய இருவரின் ஆடல் உடுமலை நாராயணகவி, மருதகாசி ஆகியோரின் பாடல்கள், ஸ்ரீதரின் வசனம் இவைகள் கொண்ட "மஞ்சள் மகிமை" பழைய கோலத்தைக் கொண்ட கதையானுலும், மறந்துபோன கருத்துக்களை ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கக் கூடியது. சலிப்பின்றிப் பார்க்கக் கூடிய பாமர ரஞ்சக அம்சங்களும் உள. குடும்பப்பெண்கள் பார்க்கவேண்டிய அம்சங்கள் பல கொண்டது மஞ்சள் மகிமை.

# பொம்மைக் கல்யாணம்

தலைப்புக் கேற்பக் கருத்து இழையோடாவிடினும், ஆரம்பத்தில் வரும் பொம்மைப் பட்டாளத்தின் ஊர்வலம், இது பொம்மைக் கல்யாணந்தான் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

அதீத பணஆசை, பொறுமை, ஜம்பம், மனிதப் பண்பு ஆகிய மாறுப்பட்ட குணும்சம் கொண்ட பாத்திரங்கள் மூலம் பிரதம பாத்திரங்கள் பகடைக் காய்களாக நகர்த்தப் படுகிறுர்களே தவிரப் பூரணத்துவம் பெறக் கூடிய சம்பவங்கள் கதையில் இடம் பெறவில்லை.

மாமிக் கொடுமை, ஆற்ருமையின் உத்வேகம் ஆகியவற்றினுல் அல்லற்படும் 'ராதா'வாக ஜமுன வருகிறுர். பொம்மைக் கல்யாணத்தை நடத்தி வைக்கும் வாத்தியார் வேகத்திலும் — காற்பந்தைத் திருப்பிக் கொடுக்க வந்து கண்ணனைக் கண்டு மயங்கியபோதும் களை கட்டத் தொடங்கும் அவரது நடிப்பு, பின்னுற் பொறுமை — உரிமைக்கு வாதாடும் ஆவேசம் ஆகிய உணர்ச்சிப் போராட்டங்களிலும் சளைத்து விடாது மெருகேறிச் செல்கிறது.

தமிழ்ப்பட உலகில் நடிப்பின் 'எவரெஸ்ட்' டாகத் திகழும் சிவாஜி கணேசன் கண்ணுகத் தோன்றுகிறுர். ராதாவாற் திருப்பித் தரப்பட்ட பந்தைத் தட்டித் தட்டி அவள் கவனத்தைத் திருப்புகையில் மிதமாக அமைந்த இவரது நடிப்புச் சுவையளிக்கிறது. ஆனுல், நன்குபரிமளிக்கும் அவர் இரண்டாவது கல்யாணம் நடத்த ஏற்பாடு செய்து தாய் அழைக்கும் சமயத்தில், தந்தையின் மரண வாக்கும் — மனைவியினுல் ஞாபகப்படுத்தப்பட்ட மணிவாக்கும் சிந்தாகூலத்தில் அமிழ்த்துகையில் — உணர்ச்சி பாவத்தை அதிகம் வெளியிட வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்து விடுகின்றது. இதனுற் சிறிது சலிப்புத் தட்டுகின்றது.

எதற்கும் 'அதுதான் பாயின்ட்' என்னும் பதத்தை வக்கீல் தோரணையில் வாழ்க்கையிலும் கையாளும் வக்கீல் வரதராஜனுக—கண்ணனின் தந்தையாக நாகையா நடித்துத் தமது முத்திரையை ஆழப்பதித்திருக்கிறுர்.

அந்தப் 'பாயின்டுக்கு ஒரு ஜொயின்ட்' என்று கூறும் வக்கீல் குமாஸ்தா பி. டி. சம்பந்தம் தன்னை இப்படத்தில் 'ஜொயின்ட்' பண்ணியதற்கான ஆத்திரம் போலும் இரசிகர்களுக்கு வெறுப்பைத்தான் தருகிறுர்.


சுபேதார் வீரமுத்துவாக — ராதாவின் தந்தையாக வரும் ரங்கராவ் கடந்த ஓரிரு படங்களில் தமக்கேற்பட்ட பலவீனங்களைப் போக்கி முழுத் திறமையையும் காட்டி வெற்றி பெற்றுள்ளார். மகளுக்காகப் பாரம்பரிய கௌரவத்தைக் கைவிட்டு அவரே பல்லக்கைத் தூக்கிச் சென்று தந்தைக்குரிய கடமையை நிறைவேற்றுகையில் அவரது நடிப்பு தத்ரூபமாய் அமைந்துள்ளது.

கொடுமை தரும் மாமியாராக வரும் சாந்தகுமாரி, தூபம் போடும் மைத்துனி பெருந்தேவியாக வரும் சுந்தரிபாய் ஆகியவர்கள் தங்கள் பாத்திரச் சிறப்புக் குன்ருத வகையில் இயங்கியுள்ளனர்.

அசட்டுப் பெண்ணுக வரும் மைனுவதி, நான் பெருந்தேவி புருஷன் என்று மனைவியின் பெயருக்குப்பின்னே தன் பெயரைப் போடும் பிரண்ட் ராமசாமி, மைனுவதியைச் சுற்றி வரும் காக்கா ராதாகிருஷ்ணன் என்ற மூவரும் நகைச் சுவைக்காகப் புகுத்தப்பட்டதோடு கதையின் இயக்கத்திற்கும் தேவைப்படுகிறுர்கள்.

உடுமலை நாராயணகவி, மருதகாசி ஆகிய கவிஞர்களின் பாடல்களும், திரு. எஸ். டி. சுந்தரம் அவர்களின் வசனமும் படத்தில் இடம் பெற்றுள்ளன.

சிருங்கார கட்டங்களில் நெருக்கம் அதிகமாக வரவேண்டுமென்ற எண்ணம் தமிழ்ப்படவுலகில் வலுத்து வருவதற்கொப்ப இதிலும் அமைந்து விடுகிறது.

எங்களிடம்

பவுண் மார்க் ஓடுகள்
மான்தலை மார்க் ஒற்றைப்பீலி இரட்டைப் பீலி ஓடுகளும்

★

நெல்லு, எள்ளு, அரிசி

முதலியனவும்

சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

R. சிவகுமாரன்

76, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்


# பற்றிசியன்ஸ் கோஷ்டி சம்பியனுயிற்று

பண்ணை மைதானத்தில் யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கத்தின் இரண்டாம் பிரிவு இறுதி உதைபந்தாட்டம் சூட்டிங் ஸ்டார்சுக்கும் பற்றிசியன்சுக்கும் இடையே நடைபெற்றது. முதற் பாதி ஆட்டத்திலேயே விறுவிறுப்பாக ஆடிய பற்றிசியன்ஸ் கோஷ்டியினர் இரண்டு கோல்களைப் பெற்றனர். அல்பொன்சஸும் துரைராஜாவும் இக் கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர். பின்னுல் எவ்வளவோ முயற்சிசெய்தும் இரு கட்சிகளாலும் கோல் பெற முடியாமற் போய் விட்டது. பிற்பாதியில் பற்றிசியன்ஸ் தங்களுக்குச் சார்பாக வழங்கப்பட்ட ஒரு தண்டனை உதையைக் கோலாக்கத் தவறவில்லை. ஆட்டம் 3-0 கோல்களினுல் பற்றிசியன்ஸ் கோஷ்டிக்கு வெற்றியாக முடிவடைந்தது. திரு. இ. கனகலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார். இவ்வாண்டுப் போட்டியில் முதலாவது, இரண்டாவது இடங்களைப் பெற்ற இவ்விரு கோஷ்டிகளும் வருகிற ஆண்டு, முதல் பிரிவில் ஆடுவார்கள்.

**மன்மதராயன் வெற்றிக் கேடயத்துக்கான நொக்அவுட் போட்டியில்** நடைபெற்று முடிந்த சில ஆட்டங்களின் முடிவுகள் பின்வருமாறு:

கொக்குவில்-டைனமோஸ் 8-3
யூனியன்ராசா-சென். யோன்ஸ் 7-0
தாசன்ஸ் - தபால்பகுதி 5-0

**மலாயாவில் நடைபெறும் ஆசிய கனிஷ்ட உதைபந்தாட்டக் கோஷ்டிக்குஇலங்கைக் கோஷ்டியைத்** தெரிவுசெய்ய வடபகுதி மாணவர்கள் இறுதித்தேர்வு சென்ற கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாண மாணவரில் ஐவருடன் மொத்தம் 15 பேர் தெரிவு செய்யப் பட்டுக் கொழும்பிற் போட்டியிடச் செல்கின்றனர். இலங்கை அரசாங்கத்தால் இதற்கென 10,000 ரூபா மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**வடமாகாண உடற்பயிற்சி ஆசிரியர்கள் சங்க அங்குரார்ப்பணம்.**
சமீபத்தில் உடற் பயிற்சிப்பரிசோதகர் திரு. பி. ஈ. ராஜேந்திரா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தராகத்தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ஆர். ரி. துரைராஜா உப தலைவர்: டி. ரத்தினசிங்கம், காரியதரிசி: பி. தியாகராசா, உதவிக் காரியதரிசி; வி. சண்முகராசா; தனுதிகாரி: எம்.கிருபாகரன், பத்திரிகாசிரியர்கள்: என். தேவபாலசிங்கம், செல்வி. ஆர். அப்பாத்துரை. நிர்வாகசபை: அறுவர் தெரிவு செய்யப்பட்டனர்.

**வலிவடக்கு விளையாட்டுச் சங்கம் கைப்பந்தாட்டப் போட்டி**யொன்றுக்கு ஏற்பாடு செய்கிறது. அதே வேளையில் வடமாகாணத்திலுள்ள சகல சதுரங்க ஆட்டக்காரர்களும் கலந்து கொள்ளக் கூடியதாக ஒரு சதுரங்கப் போட்டியையும் நடத்தத் தீர்மானித்துள்ளது.

**சென்ற் பற்றிக்ஸ் தோல்வியடைந்தது.**
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டி ஆரம்பத்தில் மத்திய கல்லூரிக்குப் படுதோல்வி ஏற்படும் போலத் தோற்றி, பின்னுல் அவர்களுக்கு வெற்றியாக முடிந்தது. முதலாவது இன்னிங்சில் மத்துய கல்லூரியை 26 ஓட்டங்களில் மடக்கிய சென்ற் பற்றிக்ஸ் 60 ஓட்டங்கள் பெற்றனர். இரண்டாவது இன்னிங்சில் 56 ஓட்டங்களே அவர்களால் பெற முடிந்தது. மத்திய கல்லூரி 8 விக்கட்டுகளை இழந்து வெற்றிக்கு வேண்டிய 91 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை ஈட்டிக் கொண்டது.

# 'நானும் ஒரு மல்யுத்தக்காரன்!'

"நானும் ஒரு மல்யுத்தக்காரன்தான்—வேறெரு அரங்கில்—அதாவது அரசியலில்" என்று பாரதப் பிரதமர் நேருஜி, புதுடில்லியிலே சில குஸ்தி வீரர்கள் அவரைக் காணச்சென்றபோது கூறினர்.

உடன் ஒரு குஸ்தி வீரர் "தாங்கள் அந்த அரங்கிலே உலகத்திலேயே முதன்மையாக இருக்கின்றீர்கள்" என்ருர்.

தேசிய மல்யுத்தப் போட்டியில் கலந்து கொள்ளும் அந்த வீரர்கள், நேருஜியை அவரது மாளிகையில் கண்டனர். அவர்களுடன் நேருஜி பேசுகையில், "மல்யுத்தம் ஒருஇந்திய தேசிய விளையாட்டு, அதற்கு எல்லா ஆதரவும் அளிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு, தன் தந்தை மோதிலால் நேருவுக்கு குஸ்தியில் அதிக ஊக்கமுண்டென்றும், ஒரு குஸ்தி வீரர்கள் கோஷ்டியை அவர் ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்று அவர்களது திறமையை மேலைநாட்டினருக்குக் காட்டியதாகவும் தெரிவித்தார்.

# சங்கீத கதாப்பிரசங்கம்

வண்ணை வைத்தீஸ்வரசுவாமி கோவிலில் 15-3-59 ஞாயிற்றுக்கிழமை முதல் மதுரை ஆதீன முத்தமிழ்மணி, புலவர்மணி வண்ணை ஸ்ரீ ஸி. எஸ். மணிபாகவதர் அவர்களால் கதாப்பிரசங்கங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இப்பிரசங்கம் 25-3-59 புதன் கிழமை நிறைவுறும்.

23-3-59 திங்கட்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும்.

## யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம்திருநெல்வேலிபரமேஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் 28-3-59 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் நடைபெறும். வடபகுதிக் கல்வி அதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமை வகிப்பார்கள். உயர் திரு. எஸ். நடேசபிள்ளை அவர்கள் "சிலப்பதிகார காலம்" என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சி விரிவுரை ஆற்றுவார்கள்.

அன்று மாலை 4 மணி முதல் 5 மணி வரை அங்கத்தவர்களின் கருமக் கூட்டம் நடைபெறும். இதுவரை சந்தாப் பணம் செலுத்தாத அன்பர்களை அதனை அனுப்பி வைக்குமாறு சங்கச் செயலாளர் தெரிவிக்கின்றார்.

## வடலியடைப்புக் கிராம முன்னேற்றச் சங்கம்

வடலி அடைப்புக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவில் சுகாதார—கைத்தொழில் பொருட்காட்சியும் இடம் பெற்றது. 15-3 59 சனிக்கிழமை ஆரம்பமான இவ்விழாவுக்குச் சங்கத்தின் தலைவர் டாக்டர் திரு. ரி. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கினர். அன்று காலை நடைபெற்ற விவசாய—கைப்பணி விழாவை வலிமேற்கு காரியாதிகாரி திரு. எம். நடராஜா அவர்கள் திறந்துவைத்தார். அன்று பிற்பகல் 4-30 மணியளவில் ஆரம்பித்த பொதுக்கூட்டத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அ. அமிர்தலிங்கம் அவர்கள் சொற்பொழிவாற்றினார். அவரது உரையில் தமிழ் மக்கள் அனைவரும் தமது நிலையை ஸ்திரப்படுத்துவதற்கு வேண்டிய பொருளாதாரத் துறையில் ஊக்கம் செலுத்த வேண்டுமென்றும், அதற்காகக் குடிசைக் கைத்தொழில், கமத்தொழில் ஆகியவற்றின் அவசியத்தை உணர்ந்து அவற்றைப் பெருக்கிவருதல் வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் பல பிரமுகர்கள் அரிய விரிவுரைகள் ஆற்றினர்.

## பெண்கள் விவசாயக் கழகம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் முதன் முதலாக இக் கழகத்திலேதான் பெண்களும் சேர்ந்துள்ளனர் என்பதைப்பற்றி நாம் பெருமை பாராட்டத் தக்கதாயிருக்கிறது. ஏனைய விவசாயக் கழகங்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாய் விளங்குமென்பதிற் சந்தேகமில்லையென நாவலர் இளம் விவசாயிகள் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற ஒரு கூட்டத்திற் சொற்பொழிவாற்றிய கழகக் காரியதரிசி திரு. எஸ். செல்வராசலிங்கம் குறிப்பிட்டார்.

பெண்களின் கடமைகளில் முக்கியமான சிலவற்றைப்பற்றி உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. இ. கேதாரநாதன் குறிப்பிட்டதாவது, "எமது நாட்டின் எதிர்காலப் பொருளாதார சுபிட்சம் வாலிபர்கள், யுவதிகள் ஆகியோரின் தேசப்பற்றிலும் தொண்டுகளிலும் தங்கியிருக்கிறது. இதை நாம் ஒருபோதும் மறந்திருக்கலாகாது".

## புதிய சூழல் பாடத் திட்டம்

வலிகாமம் கிழக்குப் பிரிவிலிருக்கும் வித்தியாசாலைகளின் பிரதம வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய சூழல் பாடத் திட்டமொன்றை, இப்பகுதி வித்தியாதரிசி திரு. கே. கனகசபாபதியும், சில ஆசிரியர்களும் தயாரித்துள்ளனர்.

அத் திட்டத்தின் பிரதிகள் பாடசாலைத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

# தலை தூக்கினல் தடியால் அடிப்பேன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### தலைதூக்கினல்

எனக்கு மாறாக யாராவது தலைதூக்கினல் தடியால் அடிப்பேன் என்று பயமுறுத்துவது போல் புதிய அதிகாரங்களைப் பிரதமர் பெற்றிருக்கின்றார். இந்த அதிகாரங்களைக்கொண்டு நாட்டில் கலவரங்கள் தலைதூக்காமல் தடுக்கப் பண்டாரநாயக்காவுக்கு இப்போது புதிய வாய்ப்புகள் உள்ளன. ஆனால், தமிழ் மக்கள் தங்கள் குறைகளை நீக்கிக் கொள்ள ஏதாவது கிளர்ச்சிகளைச் செய்தாலோ, மலைநாட்டிலே இந்திய வம்சாவளித் தமிழர் தங்கள் மனித உரிமைகளைப்பெற ஏதாவது நேரடி நடவடிக்கைகளை எடுத்தாலோ, பிரதமர் தாம் பெற்றுள்ள புதிய அதிகாரங்களைக் கொண்டு, அதைத் தடுத்து விடுவாரா? அரசியல் அடிமைகளாகவே தாங்கள் இருந்துவர நேரிடுமோ? என்ற பீதி அம் மக்களிடையே இப்போது நியாயமாக இருக்கின்றது.

ஏற்கெனவே பலவித இம்சைகளுக்கும் உள்ளாகி மனம் நொந்து திகைத்திருக்கும் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாக்கவும் அவர்களை வகுப்பு வெறியர்கள் இனித் தாக்காமல் தடுக்கவும் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தவும் பிரதமர் இப் புதிய அதிகாரங்களைப் பிரயோகிப்பாரா? அல்லது அம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்கவும், தனிச் சிங்கள‌ச் சட்டத்தைக் கட்டாயமாகத் திணிக்கவும் இதைப்பயன்படுத்தப்போகிறாரா?

### இரகசியம் என்ன?

செனேட் சபையிலே ஒரே ஒரு வாக்கினல்தான் இம் மசோதா நிறைவேறமுடிந்தது. யு. என். பி. கட்சியில் இதுவரை இருந்துவந்த தோமஸ் அமரசூரியா, அக்கட்சியில் இருந்து விலகி, இம்மசோதாவை ஆதரித்து வாக்களித்திருக்கிறார். வாக்களிக்குமுன், அமரசூரியாவை முதல் அமைச்சர் பண்டார நாயக்கா நேரிலழைத்து இம்மசோதாவின் தன்மைகளைப் பற்றி ரகசியமாக விளக்கினாராம். அதைக் கேட்டபின்தான் அமரசூரியா மனம்மாறி கட்சிமாறிச் சாதகமாக வாக்களித்ததாயும், பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அவர் கூறிய ரகசியம் என்ன?

இது எப்படியாயினும், தாம் பெற்ற புதிய அதிகாரங்களைப் பிரதமர் எவ்விதம் பாவிக்கப் போகிறார் என்ற விஷயம் சீக்கிரம் வெளியாகும்.

### மூலகாரணம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்பக் கொள்கைகளுக்கு நேர்மாறாக, தனிச் சிங்களச் சட்டத்தை அவசரமாக நிறைவேற்றியதன்பலன்தான் இன்று நாட்டில் சமூக ஒற்றுமை சீர்குலையவும், கலவரங்கள் ஏற்படவும் முக்கிய காரணமாகும். வெளியிற் சொல்லாவிடினும், பிரதமர் இதை நன்கு அறிவார்.

மொழிக் கொள்கையை மாற்றியதால் அவரது கட்சியில் இருந்த தமிழ்பேசும் மக்களும் ஆட்சேபித்து, அதில் நீடித்து இருப்பது கண்ணியமாகாது என்று கருதி, அதிலிருந்து விலகினர். அவர்கள் விலகிய பின்னர், அக்கட்சி, ஒரு தேசியக் கட்சியாக இருப்பதற்குப் பதில் வகுப்புவாதக் கட்சியாக மாறி விட்டது.

பிரதமர் உள்ளிட்டு, பல அமைச்சர்மார் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இதுவரை செல்லவும் முடியவில்லை. இந்த அவல நிலை, பண்டாரநாயக்காவுக்கும் மகிழ்ச்சியளிக்க முடியாது. இந்த நிலையை மாற்றி, தம் கட்சியை மீண்டும் தேசியக் கட்சியாக, துணிச்சலுடன் நடவடிக்கை எடுப்பாரா? வட, கிழக்கு மாகாணங்களுக்குத் தாமும் சகாக்களும் செல்லக் கூடிய வழிவகைகளைச் செய்வாரா?

### நல்ல சந்தர்ப்பம்

இம்மாதக் கடைசியிலே கூடவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகாநாட்டை, அடுத்த மே மாதம் வரை ஒத்திப் போட்டிருக்கிறார்கள். மகாநாடு கூட இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. இதற்கிடையே, அரசாங்கக் கட்சியில் கிளம்பியிருந்த கோஷ்டிப் பிணக்குகளைப் பிரதமர் சாமர்த்தியமாகத் தீர்த்தது, தற்காலிகமாகவாவது ஒருவித ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளார். சமீபத்திற் கட்சிக்கு உள்ளாகவும், வெளியாகவும் உருவாகிய பெரிய நெருக்கடிகளை அவர் ஒருவிதமாகச் சமாளித்து விட்டதால், அவரது செல்வாக்கு கட்சிக்குள் அதிகரித்துள்ளது. வகுப்புவெறியர்கள் சிலர் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். நியாயமான அளவு தமிழ் உபயோக மசோதாவையும் எதிர்த்த பெலிகமனவை, கட்சியிலிருந்து அவர் நீக்கி விட்டது, கட்சியிலுள்ள மற்ற வகுப்பு வெறியர்களுக்கும் எச்சரிக்கையாகும்.

வகுப்பு வெறியர்களை நீக்கியவுடன், தமிழ் பேசும் மக்களின் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற பிரதமருக்கு இது நல்ல சந்தர்ப்பமாகும். அரசியல் எதிரிகளுக்கு பயந்து, அவர் இச்சமயத்தை நல்லபடியாகப் பயன்படுத்தும் துணிச்சல் பெறமுடியாவிட்டாலும், தமிழ் பேசும் மக்கள், எல்லாக் கிளர்ச்சிகளும் செய்யவேண்டிய அவசியமில்லாமலாவது செய்யலாம். பிரதேச சபைகள் அமைத்து, மண்டல சுயாட்சியை ஏற்படுத்தவும், சுவிஸ், அரசியல் அமைப்பைப் பின்பற்றியும் கூட்டு அரசியல் சபைமூலம் சீக்கிரத்தில் வழிவகுக்கலாம்.

பாரதூரமான அரசியல் மாறுதல்களைப்பற்றி அச்சபை ஆலோசனை கூறலாமென்றார் பிரதமர். அச்சபை பிரதமரின் யோசனையைச் செய்தால், சுவிஸ் அரசியலை பின்பற்றுவதாகவும் இருந்தால், எல்லா எதிர்ப்புகளையும் சமாளித்து, அவரது நடைமுறைக்குக் கொண்டுவருவதாகத்தான் அதிகாரமும் பிரதமரின் கையில் இப்போது உள்ளது. இதை அவர் எப்படிப் பயன்படுத்தப் போகிறார்? கூட்டு அரசியல் சபை என்ன திட்டம் தயாரிக்கப் போகிறது? என்பன முக்கிய கேள்விகள்

### நேரடி போராட்டமா?

இதே சமயம் தமிழ்பேசும்மக்கள் இனி என்ன செய்யப்போகிறார்கள்? இழந்த தங்கள் உரிமைகளை மீண்டும் பெறுவதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றனர்? நேரடி போராட்டமா? மலைநாட்டிலே தமிழ் மக்கள் தங்கள் மனித உரிமையை பெற வேலை நிறுத்தம் முதலிய நடவடிக்கைகளை எடுக்கப்போகிறார்களா?


சென்ற மே, ஜூன்மாத சம்பவங்களுக்குப்பின், தமிழ் பேசும் மக்கள் இன்னும் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். நேரடி நடவடிக்கை எடுப்பதால் ஏதும் பலன் கிடைக்குமா? அல்லது வீண் கஷ்ட நஷ்டங்கள்தான் அனுபவிக்க வேண்டியிருக்குமா! அல்லது நேரடி போராட்டத்தை நிறுத்தி வைத்து, சட்டரீதியான முறையாய் இதற்கான முயற்சிகளைச் செய்யலாமா? கூட்டு அரசியல் சபையிடம் தங்கள் கோரிக்கைகளை ஏன் தெரிவிக்கப்படாது? இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தும் அதை இழப்பது சரியா?

பார்லிமெண்ட் சபையில் மிகக் குறைவான எண்ணிக்கையுடன் இருப்பினும், தங்கள் பேச்சு அம்பலம் ஏறாவிடினும், சமஷ்டிக் கட்சியினர் இன்னும் அச்சபையில் இருந்துவருகிறார்கள். அரசாங்கம், தடுப்புக் காவலில் வைத்திருந்தபோதும், தங்கள் ஸ்தானங்களை இழக்க விரும்பாமல், தங்களுக்கு 'லீவு' கொடுக்கவேண்டுமென்று சமஷ்டிக்கட்சி எம். பீக்கள் சபைக்கு மனுச்செய்திருந்தனர். இதிலிருந்து சட்டரீதியான முறைகளில் அவர்களுக்குள்ள நம்பிக்கை விளங்கும்.

ஆகவே, பார்லிமெண்டில் உள்ள தமிழ் பேசும் எம். பீக்கள் இந்த அரசியல் அமைப்புச் சபையைக் கூடுமானவரை பயன்படுத்தக் காரணமுண்டு.

எப்படியும் சென்ற மே, ஜூன்மாத சம்பவங்கள் மீண்டும் நாட்டில் ஏற்படாமல், பொது மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, சிறப்பாகத் தமிழ் மக்களின் நன்மையில் நாட்டமுள்ள எல்லாக் கட்சியையும் சேர்ந்தது. இச்சமயம், அதிக பொறுமையும், இராஜ தந்திரமும், ஒற்றுமையும், கட்டுப்பாடும் தமிழ் பேசும் மக்களிடையே அதிகம் தேவையாகும்.


★ நகைகளுக்கும்
★ வைரங்களுக்கும்



நகைமாளிகை

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்
65, கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்

தூய வெண்மைக்கு
வீனஸ் சோப்
— சிறந்தது —
வீனஸ் சோப் தொழிற்சாலை
269, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## இப்பொழுதே பாருங்கள்!

**கிங்ஸ்லி – பிளாஸா – நவா –**

(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)

**வெலிங்டன் – விஜயா – ஸ்ரீ கிருஷ்ண**

(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (திருக்கோணமலை)

**வெம்பிளி – விஜிதா – மொடோர்ன்**

(கண்டி) (மஸ்கேலியா)

தந்தையின் வேண்டுகோள்: தாய் சொல்லைத் தட்டாதே
அவள் மனதைப் புண்படுத்தாதே!
மனைவியின் வேண்டுகோள்: கட்டிய மனைவியைக்
கண்கலங்காமலும் கைவிடாமலும் காப்பாற்றுபவனேமனிதன்!!

அருண பிலிம்ஸாரின்




இதற்கிடையில்
போராடுகிறான்
ஓர் இளைஞன்.
இறுதியில் இளை
ஞனின் முடிவுதான்
என்ன?
பதில் காணப்
பாருங்கள்.

சிவாஜி கணேசன், ஜமுனா, ரங்கராவ்
நாகையா, மைனாவதி நடித்தது.

## வெகு விரைவில் சினிமாஸ் திரைகளில் எதிர்பாருங்கள்

நாட்டிற்கு நல்ல கருத்துகளை வழங்கிடும்
உயர்ந்த இலட்சியத்தை போதித்திடும்
தென்னகம் முழுவதும் ஒரே குரலில் வாழ்த்திடும்
உன்னத சாதனையை ஏற்படுத்திய திரைச் சித்திரம்

இரு வேட நடிப்பு, டைரக்ஷன், தயாரிப்பு முதலியவைகளை
ஏற்று வெற்றி கண்ட

**எம். ஜி. ராமச்சந்திரன்!**

மற்றும்:

★ எம். என். நம்பியார் ★ பி. பானுமதி
★ பி. எஸ். வீரப்பா ★ பி. சரோஜாதேவி
★ எம். ஜி. சக்கரபாணி ★ டி. பி. முத்துலட்சுமி
★ ஜெ. பி. சந்திரபாபு ★ எம். என். ராஜம்
★ டி. கே. பாலசந்திரன் ★ ஜி. கே. சகுந்தலா

திரை உலகிற்கே ஒரு மறுமலர்ச்சி!
சிந்தனைக்கே ஒரு புது உணர்ச்சி!!

எம்ஜியார் பிக்சர்ஸ்

## "நாடோடி மன்னன்"

படப்பிடிப்பு: ஜி. கே. இராமு
சங்கீதம்: எஸ். எம். சுப்பையா
வசனம்: கண்ணதாசன்
ஸ்டூடியோ: வாகினி & விஜயா...

பத்திரிகைகளும் பொதுமக்களும் போற்றிப் புகழ்கின்றனர்!

## 2-வது மகத்தான வாரம்

**சென்ட்ரல் – ஓடியன் – ராணி**

(மருதானை) (கல்கிசை) (யாழ்ப்பாணம்)

**லாஸா – ஜோதி**

(கண்டி) (திருக்கோணமலை)

தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணி சனி, ஞாயிறு மாலை 2 மணி
ஞாயிறு காலைக் காட்சி 10 மணி



ஏ. நாகேஸ்வரராவ்
சாவித்திரி
ராஜசுலோசனா
கே. ஏ. தங்கவேலு
பி. கண்ணாம்பா
ரங்கராவ்
ஜி. வரலெட்சுமி
நடித்த

அன்ன பூரணா பிக்சர்சாரின்

## மஞ்சள் மகிமை

(தமிழ்)

ஒவ்வொருவரும் தவறாமல் பார்க்கவேண்டிய
ஓர் குடும்பச் சித்திரம்

## சிலோன் தியேட்டர் ஸ்தாபனத்தாரின்

தியேட்டர்களில் வெகுவிரைவில் திரையிட விருக்கும்

**மா ய ம னி த ன்**



(தமிழ்)

எதிர்பாருங்கள்!
சிவாஜி கணேசன், பத்மினி, ராஜகுமாரி, ராஜம், நம்பியார் நடிக்கும்

**தங்கப் பதுமை** (தமிழ்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் ஈழநாடுப் பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21ம் திகதி வெளியிடப்பெற்றது.